


உ
சிவமயம்
தில்லையின்,
நாத மலர்
12.01.2017

தசஅஷ்வதமே படித்துறை : வாரணாசியில் ஓடும் கங்கை ஆற்றில் அமைந்துள்ள 85 படித்துறைகளில் முதன்மையானதாகும். இப் படித்துறை காசி விஸ்வநாதர் கோயிலுக்கு மிக அருகில் அமைந்துள்ளது. புராணக்கதையின்படி பிரம்மா இங்கு படித்துறை அமைத்து சிவபெருமானை எழுந்தருளச் செய்தார் என்று கூறப்படுகிறது. இப்படித்துறையில் கங்கை ஆறு, அக்னி தேவன், சிவபெருமான், சூரிய தேவன் மற்றும் முழு பிரபஞ்சத்திற்கும், பூசாரிகளால் நாள்தோறும் மாலையில் கங்கை ஆற்றுக்கும், ஆரத்தி பூஜை நடத்தப்படுகிறது. மேலும் செவ்வாய்க்கிழமை தோறும் மற்றும் முக்கியமான சமயத் திருவிழாக்களின் போதும் சிறப்பு கங்கை ஆரத்தி பூஜைகள் நடத்தப்படுகிறது. காசிக்குச் சென்று பிதிர்க் கடன் செய்பவர்கள், இங்கு தான் பிதிர்க் கடன் செய்வார்கள்.




உ
சிவமயம்




# சமர்ப்பணம்

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்
எம் கண் கண்ட தெய்வமாய்
குடும்பத்தின் தலைமகனாய்
இல்வாழ்க்கையின் பிணைப்பில் நல்ல ஆருயிர் கணவனாய்
சகோதரங்களுக்கு பாசமிகு அண்ணனாய்
பாசமிகு பிள்ளைகளின் தந்தையாய்
மருமக்களின் மாமனாய்
பேரப்பிள்ளைகளுக்கு அன்புப் பேரனாய்
பூட்டப் பிள்ளைக்கு அன்புப் பூட்டனாய்
உற்றார் உறவினர் நண்பர்களுக்கு அன்புத் தோழனாய்த் திகழ்ந்த
எங்கள் இதயத் தெய்வமே!
உங்களது ஆத்மா நிலையான சாந்தி பெற
தில்லைக் கூத்தனின் திருவருள் வேண்டி
இவ் நினைவு மலரை உங்களது
பாதார விந்தங்களுக்கு எமது கண்ணீர் நிறைந்த
காணிக்கையாக சமர்ப்பணம் செய்கின்றோம்.





**மனைவி மற்றும் குடும்பத்தினர்**



அன்னை மடியில்
09-09-1929

ஆதிரன் திருவடியில்
13-12-2016

# அமரர் செல்லையா தில்லைநாதன்

திதி வெண்பா

ஆயனம் துர்முகி ஆன கார்த்திகை இருபது எட்டு
தூய பூரணை உரோகிணி தொடர்பு நாள் செவ்வாய்
தூய சிவனடியே தொழும் தில்லைநாதன் தன்
காயமது விட்டு ஈசன் கழல் அடைந்தான் காண்பீரோ

திதி – பௌர்ணமித் திதி









சிவசிவ



# விநாயகர் துதி



மூஷிக வாகன மோதக ஹஸ்த
ஸாமர கர்ண விளம்பிர சூத்ர
வாமன ரூப மகேஸ்வர புத்ர
விக்ன விநாயக பாத நமஸ்தே.

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

விநாயகனே வெவ்வினையை வேரறுக்க வல்லான்
விநாயகனே வேட்கை தணிவிப்பான் - விநாயகனே
விண்ணிற்கும் மண்ணிற்கும் நாதனுமாந் தன்மையினால்
கண்ணிற் பணியின் கனிந்து.

கணபதி என்றிடக் கலங்கும் வல்வினை
கணபதி என்றிடக் காலனும் கைதொழும்
கணபதி என்றிடக் கரும மாதலால்
கணபதி என்றிட கரும மில்லையே.

முன்னவனே யானை முகத்தவனே முத்தி நலம்
சொன்னவனே தூய்மைச் சுகத்தவனே - மன்னவனே
சிற்பரனே ஐங்கரனே செஞ்சடையஞ் சேவகனே
தற்பரனே நின்தாள் சரண்.

உ



# விநாயகர் அகவல்



சீதக் களபச் செந்தா மரைப்பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாடப்
பொன் அரை ஞாணும் பூந்துகி லாடையும்
வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்

வேழ முகமும் விளங்குசிந் தூரமும்
அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்

இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரியமெய்ஞ் ஞான
அற்புதன் நின்ற கற்பகக் களிறே!
முப்பழம் நுகரும் மூஷிக வாகன!

இப்பொழு தென்னை யாட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்க மறுத்தே
திருந்திய முதல்ஐந் தெழுத்துந் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் உளந்தனிற் புகுந்து,

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருள்என
வாடா வகைதான் மகிழ்ந்தெனக் கருளிக்
கோடாயுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா உபதேசம் புகட்டி என் செவியில்

தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் றன்னை அடக்கும் முபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளிக்,
கருவிக ளொடுங்குங் கருத்தினை யறிவித்(து)
இருவினை தன்னை அறுத் திருள் கடிந்து

தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத் தங்கிசை நிலையும்

பேறா நிறுத்திப் பேச்சுரை யறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்,
கடையிற் சுழுமுனைக் கபாலமுங் காட்டி
மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவில் உணர்த்திக்

குண்டலி யதனிற் கூடிய அசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து,
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தன் இயக்கமும்

குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டிச்,
சண்முக தூலமுஞ் சதுர்முகச் சூக்கமும்
எண்முக மாக இனிதெனக் கருளி,

புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தினிற் கபால வாயில் காட்டி,
இருத்தி முத்தி இனிதெனக்கருளி,
என்னை அறிவித் தெனக்கருள் செய்து

முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்(து)
இருள்வெளி யிரண்டிற் கொன்றிட மென்ன
அருள் தரும் ஆனந்தத் தழுத்தி என் செவியில்

எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டிச்
சித்தத்தினுள்ளே சிவலிங்கங் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்க்,

கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலையறி வித்துத்,

தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக! விநாயக! விரைகழல் சரணே.

**விநாயகர் அகவல் முற்றிற்று**

# முதலாந் திருமுறை

**திருவண்ணாமலை** **பண் - நட்டபாடை**

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய வொருவன்
பெண்ணாகிய பெருமான்மலை திருமாமணி திகழ
மண்ணார்ந்தன வருவித்திரன் மழலைம்முழ வதிரும்
அண்ணாமலை தொழுவார்வினை வழுவாவண்ண மறுமே

**திருப்பழனம்** **பண் - தக்கேசி**

வேதமோதி வெண்ணூல்பூண்டு வெள்ளையெருதேறிப்
பூதஞ்சூழப் பொலியவருவார் புலியினுரிதோலார்
நாதாவெனவு நக்காவெனவு நம்பாவெனநின்று
பாதந்தொழுவார் பாவந்தீர்ப்பார் பழனநகராரே.

**திருவலிவலம்** **பண் - வியாழக்குறிஞ்சி**

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே.

# இரண்டாந் திருமுறை

**திருமருகல்** **பண் - இந்தளம்**

சடையா யெனுமால் சரணீ யெனுமால்
விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரும் மருகல்
உடையாய் தகுமோ விவளுள் மெலிவே.

**கோளாறு திருப்பதிகம்** பண் - பியந்தைக்காந்தாரம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழன் வெள்ளி
சனிபாம் பிரண்டுமுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

**திருக்கேதாரம்** பண் - செவ்வழி

தொண்டரஞ்சு களிறு மடக்கிச் சுரும்பார்மலர்
இண்டை கட்டி வழிபாடு செய்யு மிட மென்பரால்
வண்டுபாட மயிலால மான்கன்று துள்ளவரிக்
கெண்டைபாயச் சுனைநீல மொட்டலருங் கேதாரமே.

# மூன்றாந் திருமுறை

**திருவாவடுதுறை** பண் - காந்தாரபஞ்சமம்

இடரினுந் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை யாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடு துறையரனே.

**திருக்கழுமலம்** பண் - கொல்லி

மண்ணின்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கி யாதுமோர் குறைவிலைக்
கண்ணின்நல் லஃதுறுங் கழுமல வளநகர்ப்
பெண்ணின்நல் லாளொடும் பெருந்தகை யிருந்ததே.

**திருகோணமாமலை** **பண் - புறநீர்மை**

நிரைகழ லரவஞ் சிலம்பொலி யலம்பும்
நிமலர்நீ றணிதிரு மேனி
வரைகெழு மகளோர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் காரகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலங் கொழிக்குங்
கோணமா மலையமர்ந் தாரே

# நான்காம் திருமுறை

**திருவதிகைவீரட்டானம்** **பண் - கொல்லி**

கூற்றாயின வாறுவி லக்ககிலீர்
கொடுமைபல செய்தன நானறியேன்
ஏற்றாயடிக் கேஇர வும்பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாதென் வயிற்றின் அகம்படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே

சலம்பூவொடு தூபம் மறந்தறியேன்
தமிழோடிசை பாடல் மறந்தறியேன்
நலந்தீங்கிலும் உன்னை மறந்தறியேன்
உன்னாமம் என்னாவின் மறந்தறியேன்
உலர்ந்தார்தலை யிற்பலி கொண்டுழல்வாய்
உடலுள் ளுறுசூலை தவிர்த்தருளாய்
அலந்தேன்அடி யேன்அதி கைக்கெடில
வீரட்டா னத்துறை அம்மானே

**திருவையாறு** **பண் - காந்தாரம்**

மாதர்ப் பிறைக்கண்ணி யானை மலையான் மகளொடும் பாடிப்
போதொடு நீர்சுமந் தேத்திப் புகுவா ரவர்பின் புகுவேன்
யாதுஞ் சுவடு படாமல் ஐயா றடைகின்ற போது
காதன் மடப்பிடி யோடுங் களிறு வருவன கண்டேன்
கண்டே னவர்திருப் பாதங் கண்டறி யாதன கண்டேன்.

## ஐந்தாம் திருமுறை

**கோயில்** **திருக்குறுந்தொகை**

அன்னம் பாலிக்குந் தில்லைச்சிற் றம்பலம்
பொன்னம் பாலிக்கு மேலுமிப் பூமிசை
என்னம் பாலிக்கு மாறுகண் டின்புற
இன்னம் பாலிக்கு மோவிப் பிறவியே.

**தனி** **திருக்குறுந்தொகை**

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே

நமச்சி வாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சி வாயவே நானறி விச்சையும்
நமச்சி வாயவே நாநவின் றேத்துமே
நமச்சி வாயவே நன்னெறி காட்டுமே.

## ஆறாம் திருமுறை

**கோயில்** **பெரியதிருத்தாண்டகம்**

அரியானை அந்தணர்தஞ் சிந்தை யானை
அருமறையி னகத்தானை அணுவை யார்க்குந்
தெரியாத தத்துவனைத் தேனைப் பாலைத்
திகழொளியைத் தேவர்கள்தங் கோனை மற்றைக்
கரியானை நான்முகனைக் கனலைக் காற்றைக்
கனைகடலைக் குலவரையைக் கலந்து நின்ற
பெரியானைப் பெரும்பற்றப் புலியூ ரானைப்
பேசாத நாளெல்லாம் பிறவா நாளே.

**திருவாரூர்** **திருத்தாண்டகம்**

நிலைபெறுமா றெண்ணுதியேல் நெஞ்சே நீவா
நித்தலுமெம் பிரானுடைய கோயில் புக்குப்
புலர்வதன்முன் னலகிட்டு மெழுக்கு மிட்டுப்
பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடித்
தலையாரக் கும்பிட்டுக் கூத்து மாடிச்
சங்கரா சயபோற்றி போற்றி யென்றும்
அலைபுனல்சேர் செஞ்சடையெம் ஆதி யென்றும்
ஆரூரா வென்றென்றே அலறா நில்லே.

தனி திருத்தாண்டகம்

அப்பன்நீ அம்மைநீ ஐய னும்நீ
அன்புடைய மாமனும் மாமி யும்நீ
ஒப்புடைய மாதரு மொண்பொரு ளும்நீ
ஒருகுலமுஞ் சுற்றமும் ஓரூ ரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவுந் தோற்று வாய்நீ
துணையாயென் நெஞ்சந் துறப்பிப் பாய்நீ
இப்பொன்நீ இம்மணிநீ இம் முத் தும்நீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன் நீயே

## ஏழாம் திருமுறை

திருவாரூர் பண் - செந்துருத்தி

மீளா அடிமை உமக்கே ஆளாய்ப் பிறரை வேண்டாதே
மூளாத் தீப்போல் உள்ளேகனன்று முகத்தால் மிகவாடி
ஆளாய் இருக்கும் அடியார் தங்கள் அல்லல் சொன்னக்கால்
வாளாங் கிருப்பீர் திருவா ரூரீர் வாழ்ந்து போதீரே

திருமழபாடி பண் - நட்டராகம்

பொன்னார் மேனியனே புலித்தோலை அரைக்கசைத்து
மின்னார் செஞ்சடைமேல் மிளிர்கொன்றை யணிந்தவனே
மன்னே மாமணியே மழபாடியுள் மாணிக்கமே
அன்னே உன்னையல்லால் இனியாரை நினைக்கேனே

திருக்கோளிலி பண் - நட்டராகம்

நீள நினைந்தடியேன் உனை நித்தலுங் கைதொழுவேன்
வாளன கண்மடவா ளவள்வாடி வருந்தாமே
கோளிலி எம்பெருமான் குண்டையூர்ச்சில நெல்லுப்பெற்றேன்
ஆளிலை எம்பெருமான் அவை அட்டித் தரப்பணியே

# எட்டாம் திருமுறை

**திருவாசகம்** **கோயில் மூத்த திருப்பதிகம்**

உடையாள் உன்றன் நடுவிருக்கும்
உடையாள் நடுவுள் நீயிருத்தி
அடியேன் நடுவுள் இருவீரும்
இருப்ப தானால் அடியேன்உன்
அடியார் நடுவு ளிருக்கும் அருளைப்
புரியாய்பொன் னம்பலத்தெம்
முடியா முதலே என்கருத்து
முடியும் வண்ணம் முன்னின்றே

பாவநா சாஉன் பாதமே யல்லால்
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
தேவர்தந் தேவே சிவபுரத் தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
மூவுல குருவ இருவர்கீழ் மேலாய்
முழங்கழ லாய்நிமிர்ந் தானே
மாவுரி யானே வாழ்கிலேன் கண்டாய்
வருகஎன் றருள்புரி யாயே

**கண்ட பத்து**

வினைப்பிறவி என்கின்ற வேதனையில் அகப்பட்டுத்
தனைச்சிறிதும் நினையாதே தளர்வெய்திக் கிடப்பேனை
எனைப்பெரிதும் ஆட்கொண்டென் பிறப்பறுத்த இணையிலியை
அனைத்துலகுந் தொழுந்தில்லை அம்பலத்தே கண்டேனே

# ஒன்பதாம் திருமுறை

## திருவிசைப்பா

**திருவீழிமிழலை** **பண் - பஞ்சமம்**

ஏக நாயகனை இமயவர்க் கரசை
என்னுயிர்க் கமுதினை யெதிரில்
போக நாயகனைப் புயல் வண்ணற் கருளிப்
பொன்னெடுங் சிவிகை யாவூர்ந்த
மேக நாயகனை மிரு திரு வீழி
மிழலை விண்ணிழி செழுங் கோயில்
யோக நாயகனை யன்றி மற்றொன்றும்
உண்டென வுணர்கிலேன் யானே.

**கங்கைகொண்ட சோளேச்சரம்** **பண் - பஞ்சமம்**

அன்னமாய் விசும்பு பறந்தயன் தேட
அங்ஙனே பெரியநீ சிறிய
என்னைஆள் விரும்பி என்மனம் புகுந்த
எளிமையை யென்றும்நான் மறக்கேன்
முன்னம்மால் அறியா ஒருவனாம் இருவா
முக்கணா நாற்பெருந் தடந்தோட்
கன்னலே தேனே அமுதமே கங்கை
கொண்டசோ ளேச்சரத் தானே

**திருவீழிமிழலை** **பண் - பஞ்சம்**

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
குளிரஎன் கண்குளிர்ந் தனவே

# ஒன்பதாம் திருமுறை

## திருப்பல்லாண்டு

**கோயில்** **பண் - பஞ்சமம்**

மண்ணுக தில்லை வளர்க நம் பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின் செய் மண்டபத்துள்ளே புகுந்து புவனியெல்லாம் விளங்க
அன்ன நடை மடவாள் உமை கோன், அடியோமுக்கு அருள் புரிந்து
பின்னை பிறவி அறுக்க நெறி தந்த பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

சொல்லாண்டகரு திப்பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர்
சில்லாண் டிற்சிலை யுஞ்சில தேவர் சிறுநெறி சேராமே
வில்லாண் டகன கத்திரள் மேரு விடங்கன் விடைப்பாகன்
பல்லாண் டென்னும் பதங்கடந் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே

ஆரார் வந்தார் அமரர் குழாத்தில்
அணியுடை ஆதிரைநாள்
நாரா யணனொடு நான்முகன் அங்கி
இரவியும் இந்திரனும்
தேரார் வீதியில் தேவர் குழாங்கள்
திசையனைத்தும் நிறைந்து
பாரார் தொல்புகழ் பாடியும் ஆடியும்
பல்லாண்டு கூறுதுமே.

## பத்தாம் திருமுறை

### திருமந்திரம்

அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிந்தபின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந் தாரே.

உள்ளம் பெருங்கோயில் ஊனுடம் பாலயம்
வள்ளற் பிரானார்க்கு வாய்கோ புரவாசல்
தெள்ளத் தெளிந்தார்க்குச் சீவன் சிவலிங்கம்
கள்ளப் புலனைந்துங் காளா மணிவிளக்கே.

சிவசிவ என்கிலர் தீவினை யாளர்
சிவசிவ என்றிடத் தீவினை மாளுஞ்
சிவசிவ என்றிடத் தேவரு மாவர்
சிவசிவ என்னச் சிவகதி தானே.

## பதினொன்றாம் திருமுறை

முருகனே செந்தி முதல்வனே மாயோன்
மருகனே ஈசன் மகனே ஒருகை முகன்
தம்பியே நின்னுடைய தண்டைக்கால் எப்பொழுதும்
நம்பியே கைதொழுவேன் நான்.

திருவாக்கும் செய்கருமம் கைகூட்டும் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் - உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தானைக்
காதலால் கூப்புவர்தங் கை.

நானே பிறந்த பயன்படைத்
தேன் அயன் நாரணனெம்
கோனே எனத்தில்லை அம்பலத்
தேநின்று கூத்துகந்த
தேனே திருவுள்ள மாகியென்
தீமையெல் லாமறுத்துத்
தானே புகுந்தடி யேன்மனத்
தேவந்து சந்திக்கவே

## பன்னிரண்டாம் திருமுறை

ஆதியாய் நடுவு மாகி
அளவிலா அளவும் ஆகிச்
சோதியா யுணர்வு மாகித்
தோன்றிய பொருளு மாகிப்
பேதியா ஏக மாகிப்
பெண்ணுமாய் ஆணு மாகிப்
போதியா நிற்குந் தில்லைப்
பொதுநடம் போற்றி போற்றி

கற்பனை கடந்த சோதி
கருணையே யுருவ மாகி
அற்புதக் கோல நீடி
யருமறைச் சிரத்தின் மேலாஞ்
சிற்பர வியோம மாகுந்
திருச்சிற்றம் பலத்துள் நின்று
பொற்புடன் நடஞ்செய் கின்ற
பூங்கழல் போற்றி போற்றி

மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்மதி சூடும்
அண்ண லார்அடி யார்தமை அமுதுசெய் வித்தல்
கண்ணி னாலவர் நல்விழாப் பொலிவுகண் டார்தல்
உண்மை யாம்எனில் உலகர்முன் வருகென உரைப்பார்

# திருப்புகழ்

இராகம் - நாட்டை　　　　　　　　　　தாளம் - ஆதி

கைத்தல நிறைகனி அப்பமொ டவல்பொரி
கப்பிய கரிமுகன்.... அடிபேணிக்
கற்றிடும் அடியவர் புத்தியில் உறைபவ
கற்பகம் எனவினை ... கடிதேகும்
மத்தமு மதியமும் வைத்திடும் அரன்மகன்
மற்பொரு திரள்புய.... மதயானை
மத்தள வயிறனை உத்தமி புதல்வனை
மட்டவிழ் மலர்கொடு.... பணிவேனே
முத்தமிழ் அடைவினை முற்படு கிரிதனில்
முற்பட எழுதிய.... முதல்வோனே
முப்புரம் எரிசெய்த அச்சிவன் உறைரதம்
அச்சது பொடிசெய்த.... அதிதீரா
அத்துய ரதுகொடு சுப்பிர மணிபடும்
அப்புன மதனிடை.... இபமாகி
அக்குற மகளுடன் அச்சிறு முருகனை
அக்கண மணமருள்.... பெருமாளே

உம்பர் தருத் தேனுமணிக்　　கசிவாகி
ஒண்கடலில் தேனமுதத்　　துணர்வூறி
இன்பரசத்தே பருகிப்　　பலகாலும்
என்றனுயிர்க்கு ஆதரவுற்று　　அருள்வாயே
தம்பி தனக்காக வனத்　　தணைவோனே
தந்தை வலத் தாலருள் கைக்　　கனியோனே
அன்பர் தமக்கான நிலைப்　　பொருளோனே
ஐந்துகரத் தானை முகப்　　பெருமாளே

இசைத்த ஏறுங் கரியுரி போர்வையும்... எழில்நீறும்
இலங்கு நூலும் புலியதன் ஆடையும்... மழுமானும்
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையும்... முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய.... குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற.... முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர்... நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில்... வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவிய... பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

திருச்சிற்றம்பலம்

# சிவபுராணம்





## காப்பு

தொல்லை இரும் பிறவிச் சூழும் தளை நீக்கி
அல்ல லறுத்தானந்தம் ஆக்கியதே - எல்லை
மருவாநெறி யளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

திருச்சிற்றம்பலம்

நமச்சிவாய வாஅழ்க நாதன் தாள் வாழ்க
இமைப்பொழுதும் என் நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமனிதன் தாள் வாழ்க
ஆகமம் ஆகிநின்று அண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அநேகன் இறைவன் அடி வாழ்க

வேகம் கெடுத்தாண்ட வேந்தன் அடிவெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க
புறந்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க
கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரம்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க

ஈசன் அடிபோற்றி எந்தை அடிபோற்றி
தேசன் அடிபோற்றி சிவன் சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடி போற்றி
மாயப் பிறப்பு அறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம் தேவன் அடி போற்றி

ஆராத இன்பம் அருளும் மலை போற்றி
சிவன் அவன் என்சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணம் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன்யான்

கண்நுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்து எய்தி
எண்ணுதற்கு எட்டா எழில் ஆர்கழல் இறைஞ்சி
விண் நிறைந்தும் மண் நிறைந்தும் மிக்காய், விளங்கு ஒளியாய்,
எண் இறந்த எல்லை இலாதானே நின் பெரும்சீர்
பொல்லா வினையேன் புகழுமாறு ஒன்று அறியேன்

புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல் அசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா நின்ற இத்தாவர சங்கமத்துள்

எல்லாப் பிறப்பும் பிறந்து இளைத்தேன், எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்து அகன்ற நுண்ணியனே

வெய்யாய், தணியாய், இயமானனாம் விமலா
பொய் ஆயின எல்லாம் போய் அகல வந்தருளி
மெய் ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானம் இல்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல் அறிவே

ஆக்கம் அளவு இறுதி இல்லாய், அனைத்து உலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய், சேயாய், நணியானே
மாற்றம் மனம் கழிய நின்ற மறையோனே

கறந்த பால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேன்ஊறி நின்று
பிறந்த பிறப்பு அறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய், விண்ணோர்கள் ஏத்த
மறைந்திருந்தாய், எம்பெருமான் வல்வினையேன் தன்னை

மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அரும் கயிற்றால் கட்டி
புறம்தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயில் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய

விலங்கு மனத்தால் விமலா உனக்கு
கலந்த அன்பாகிக் கசிந்து உள் உருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன்மேல் வந்து அருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்

தாயிற் சிறந்த தயா ஆன தத்துவனே
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேன் ஆர்அமுதே சிவபுரனே
பாசமாம் பற்று அறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேச அருள்புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே

அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்து என்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்த மெய் ஞானத்தால் கொண்டு உணர்வார் தம்கருத்தில்

நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வும் இலாப் புண்ணியனே
காக்கும் என் காவலனே காண்பரிய பேர்ஒளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தா மிக்காய் நின்ற
தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண் உணர்வாய்

மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்து அறிவாம்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனை உள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்க உடம்பின் உள்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்று என்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய் ஆனார்
மீட்டு இங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அழிக்க வல்லானே
நள் இருளில் நட்டம் பயின்று ஆடும் நாதனே
தில்லை உள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே

அல்லல் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவன் அடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து

# திருப்பொற்சுண்ணம்

(ஆனந்த மனோலயம்)

## திருத்தில்லையில் அருளியது

திருச்சிற்றம்பலம்

முத்துநல் தாமம்பூ மாலைதூக்கி
முளைக்குடந் தூபம்நல் தீபம்வைம்மின்
சத்தியுஞ் சோமியும் பார்மகளும்
நாமக ளோடுபல் லாண்டிசைமின்
சித்தியுங் கௌரியும் பார்ப்பதியும்
கங்கையும் வந்து கவரிகொண்மின்
அத்தன்ஐ யாறன் அம் மானைப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

பூவியல் வார்சடை எம்பிராற்குப்
பொற்றிருச் சுண்ணம் இடிக்கவேண்டும்
மாவின் வடுவகி ரன்னகண்ணீர்
வம்மின்கள் வந்துடன் பாடுமின்கள்
கூவுமின் தொண்டர் புறம்நிலாமே
குனிமின் தொழுமின்எங் கோன்எங்கூத்தன்
தேவியுந் தானும்வந் தெம்மையாளச்
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

சுந்தர நீறணிந் தும்மெழுகித்
தூயபொன் சிந்தி நிதிபரப்பி
இந்திரன் கற்பகம் நாட்டியெங்கும்
எழிற்சுடர் வைத்துக் கொடியெடுமின்
அந்தரர் கோன்அயன் தன்பெருமான்
ஆழியான் நாதன்நல் வேலன்தாதை
எந்தரம் ஆளுமை யாள்கொழுநற்கு
ஏய்ந்தபொற் சுண்ணம் இடித்துநாமே.

காசணி மின்கள் உலக்கையெல்லாம்
காம்பணி மின்கள் கறையுரலை
நேசமுடைய அடியவர்கள்
நின்று நிலாவுக என்றுவாழ்த்தித்
தேசமெல் லாம்புகழ்ந் தாடுங்கச்சித்
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடிப்
பாச வினையைப் பறித்துநின்று
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே

அறுகெடுப் பார்அய னும்மரியும்
அன்றிமற் றிந்திர னோடமரர்
நறுமுறு தேவர்க ணங்களெல்லாம்
நம்மிற்பின் பல்லதெ டுக்கவொட்டோம்
செறிவுடை மும்மதில் எய்தவில்லி
திருவேகம் பன்செம்பொற் கோயில்பாடி
முறுவற்செவ் வாயினீர் முக்கண் அப்பற்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்து நாமே.

உலக்கை பலஓச்சு வார்பெரியர்
உலகமெ லாம்உரல் போதாதென்றே
கலக்க அடியவர் வந்துநின்றார்
காண உலகங்கள் போதாதென்றே
நலக்க அடியோமை ஆண்டுகொண்டு
நாண்மலர்ப் பாதங்கள் சூடத்தந்த
மலைக்கு மருகனைப் பாடிப்பாடி
மகிழ்ந்துபொற் சுண்ணம் இடித்துநாமே.

சூடகந் தோள்வளை ஆர்ப்ப ஆர்ப்பத்
தொண்டர் குழாமெழுந் தார்ப்ப ஆர்ப்ப
நாடவர் நந்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
நாமும் அவர்தம்மை ஆர்ப்ப ஆர்ப்ப
பாடக மெல்லடி யார்க்குமங்கை
பங்கினன் எங்கள் பராபரனுக்கு
ஆடக மாமலை அன்னகோவுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

வாட்டடங் கண்மட மங்கைநல்லீர்
வரிவளை ஆர்ப்பவண் கொங்கைபொங்கத்
தோட்டிரு முண்டந் துதைந்திலங்கச்
சோத்தெம்பி ரான்என்று சொல்லிச்சொல்லி
நாட்கொண்ட நாண்மலர்ப் பாதங்காட்டி
நாயிற்க டைப்பட்ட நம்மையிம்மை
ஆட்கொண்ட வண்ணங்கள் பாடிப்பாடி
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

வையகம் எல்லாம் உரலதாக
மாமேரு என்னும் உலக்கைநாட்டி
மெய்யெனும் மஞ்சள் நிறையஅட்டி
மேதகு தென்னன் பெருந்துறையான்
செய்ய திருவடி பாடிப்பாடிச்
செம்பொன் உலக்கை வலக்கைபற்றி
ஐயன் அணிதில்லை வாணனுக்கே
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

முத்தணி கொங்கைகள் ஆடஆட
மொய்குழல் வண்டினம் ஆடஆடச்
சித்தஞ் சிவனொடும் ஆடஆடச்
செங்கயற் கண்பனி ஆடஆடப்
பித்தெம் பிரானொடும் ஆடஆடப்
பிறவி பிறரொடும் ஆடஆட
அத்தன் கருணையொ டாடஆட
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மாடு நகைவாள் நிலாவெறிப்ப
வாய்திறந் தம்பவ ளந்துடிப்பப்
பாடுமின் நந்தம்மை ஆண்டவாறும்
பணிகொண்ட வண்ணமும் பாடிப்பாடித்
தேடுமின் எம்பெரு மானைத்தேடிச்
சித்தங் களிப்பத் திகைத்துத்தேறி
ஆடுமின் அம்பலத் தாடினானுக்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மையமர் கண்டனை வானநாடர்
மருந்தினை மாணிக்கக் கூத்தன்தன்னை
ஐயனை ஐயர்பி ரானைநம்மை
அகப்படுத் தாட்கொண் டருமைகாட்டும்
பொய்யர்தம் பொய்யனை மெய்யர்மெய்யைப்
போதரிக் கண்ணிணைப் பொற்றொடித்தோள்
பையர வல்குல் மடந்தைநல்லீர்
பாடிப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

மின்னிடைச் செந்துவர் வாய்க்கருங்கண்
வெண்ணகைப் பண்ணமர் மென்மொழியீர்
என்னுடை ஆரமுது எங்கள் அப்பன்
எம்பெரு மான்இம வான்மகட்குத்
தன்னுடைக் கேள்வன் மகன் தகப்பன்
தமையன்எம் ஐயன் தாள்கள்பாடிப்
பொன்னுடைப் பூண்முலை மங்கைநல்லீர்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

சங்கம் அரற்றச் சிலம்பொலிப்பத்
தாழ்குழல் சூழ்தரு மாலையாடச்
செங்கனி வாய்இதழுந் துடிப்பச்
சேயிழை யீர்சிவ லோகம்பாடிக்
கங்கை இரைப்ப அராஇரைக்கும்
கற்றைச் சடைமுடி யான்கழற்கே
பொங்கிய காதலிற் கொங்கை பொங்கப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

ஞானக் கரும்பின் தெளிவைப்பாகை
நாடற் கரிய நலத்தை நந்தாத்
தேனைப் பழச்சுவை ஆயினானைச்
சித்தம் புகுந்து தித்திக்கவல்ல
கோனைப் பிறப்பறுத் தாண்டுகொண்ட
கூத்தனை நாத்தழும் பேறவாழ்த்திப்
பானல் தடங்கன் மடந்தைநல்லீர்
பாடிப் பொற் சுண்ணம் இடித்துநாமே.

ஆவகை நாமும்வந் தன்பர்தம்மோடு
ஆட்செய்யும் வண்ணங்கள் பாடிவிண்மேல்
தேவர்க னாவிலுங் கண்டறியாச்
செம்மலர்ப் பாதங்கள் காட்டுஞ்செல்வச்
சேவகம் ஏந்திய வெல்கொடியான்
சிவபெரு மான்புரஞ் செற்றகொற்றச்
சேவகன் நாமங்கள் பாடிப்பாடி
செம்பொன்செய் சுண்ணம் இடித்துநாமே.

தேனக மாமலர்க் கொன்றைபாடிச்
சிவபுரம் பாடித் திருச்சடைமேல்
வானக மாமதிப் பிள்ளைபாடி
மால்விடை பாடி வலக்கையேந்தும்
ஊனக மாமழுச் சூலம்பாடி
உம்பரும் இம்பரும் உய்ய அன்று
போனக மாகநஞ் சுண்டல்பாடிப்
பொற்றிருச் சுண்ணம் இடித்துநாமே.

அயன்தலை கொண்டுசென் டாடல்பாடி
அருக்கன் எயிறு பறித்தல்பாடிக்
கயந்தனைக் கொன்றுரி போர்த்தல்பாடிக்
காலனைக் காலால் உதைத்தல்பாடி
இயைந்தன முப்புரம் எய்தல் பாடி
ஏழை அடியோமை ஆண்டுகொண்ட
நயந்தனைப் பாடிநின் றாடியாடி
நாதற்குச் சுண்ணம் இடித்துநாமே.

வட்டமலர்க் கொன்றை மாலைபாடி
மத்தமும்பாடி மதியும் பாடிச்
சிட்டர்கள் வாழுந்தென் தில்லைபாடிச்
சிற்றம்ப லத்தெங்கள் செல்வம்பாடிக்
கட்டிய மாசுணக் கச்சைபாடிக்
கங்கணம் பாடிக் கவித்தகைம்மேல்
இட்டு நின்றாடும் அரவம்பாடி
ஈசற்குச் சுண்ணம் இடித்துநாமே.

வேதமும் வேள்வியும் ஆயினார்க்கு
மெய்ம்மையும் பொய்ம்மையும் ஆயினார்க்குச்
சோதியு மாய்இரு ளாயினார்க்குத்
துன்பமு மாய்இன்பம் ஆயினார்க்குப்
பாதியு மாய்முற்றும் ஆயினார்க்குப்
பந்தமு மாய்வீடும் ஆயினார்க்கு
ஆதியும் அந்தமும் ஆயினார்க்கு
ஆடப்பொற் சுண்ணம் இடித்துநாமே.

திருச்சிற்றம்பலம்

# திருப்பள்ளியெழுச்சி

போற்றிஎன் வாழ்முத லாகிய பொருளே
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்டு
ஏற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
ஏற்றுயர் கொடியுடை யாய்எமை யுடையாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 1

அருணன்இந் திரன்திசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை யறுபதம் முரல்வன இவையோர்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே
அலைகட லேபள்ளி எழுந்தரு ளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை ஒளியொளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவநற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
யாவரும் அறிவரி யாய்எமக் கெளியாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
  இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
  தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
  திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
  எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 4

பூதங்கள் தோறுநின் றாயெனின் அல்லால்
  போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
  கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா
  சிந்தனைக் கும்அரி யாய்எங்கள் முன்வந்து
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
  எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
  பந்தனை வந்தறுத் தாரவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
  வணங்குகின் றார்அணங் கிண்மண வாளா
செப்புறு கமலங்கள் மலருந்தண் வயல்சூழ்
  திருப்பெருந் துறையுறை சிவபெரு மானே
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
  எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்கு
  அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவனவன் எனவே
  எங்களை ஆண்டுகொண் டிங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு வுத்தர கோச
  மங்கையுள் ளாய்திருப் பெருந்துறை மன்னா
எதுஎமைப் பணிகொளு மாறுமாறது கேட்போம்
  எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே 7

முந்திய முதல் நடு இறுதியும் ஆனாய்
  மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்
பந்தணை விரலியும் நீயுநின் னடியார்
  பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே

செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறையுறை கோயிலும் காட்டி
அந்தண னாவதும் காட்டிவந் தாண்டாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளேஉன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே
வண்திருப் பெருந்துறை யாய்வழி யடியோம்
கண்ணகத் தேநின்று களிதரு தேனே
கடலமு தேகரும் பேவிரும் படியார்
எண்ணகத் தாய்உல குக்குயி ரானாய்
எம்பெரு மான்பள்ளி எழுந்தரு ளாயே. 9

புவனியிற் போய்ப்பிற வாமையின் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவனுய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறையுறை வாய்திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்
ஆரமு தேபள்ளி எழுந்தரு ளாயே 10

## திருவெம்பாவை

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்டிங்கன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள் என்னே என்னே
ஈதேயெந் தோழி பரிசேலோர் எம்பாவாய். 1

பாசம் பரஞ்சோதி கென்பாய் இராப்பகல் நாம்
பேசும்போ தெப்போதிப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடமீதோ விண்ணோர்கள் ஏத்துதற்குக்

கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைசிற் றம்பலத்துள்
ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய். 2

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
அத்தன்ஆ னந்தன் அமுதனென் றள்ஞூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லாம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நஞ்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய் 3

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாம்மாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய். 4

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய் 5

மானே நீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்குந் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய். 6

அன்னே இவையுஞ் சிலவோ பல அமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென்றெல்லோமும்
சொன்னோங்கேள் வெவ்வேறாய்இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய். 7

கோழி சிலம்பச் சிலம்புங் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழிஈ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பவாய். 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவரா வார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பவாய். 9

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள் முடிவே
பேதை யொருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்தன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய். 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போல்
செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடுங்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமுங்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய். 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிற் புகப்பாய்ந்து பாய்ந்து நம்
சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தமா மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய். 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்ஙனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவா இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர் தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பவாய் 15

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய். 16

செங்க ணவன்பால் திசைமுகன் பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 17

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமஅகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணே இப்பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய். 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்மென்று
அங்குஅப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போங்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பவாய் 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றியெல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றியெல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனுங் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய் 20



# ஸ்ரீ கந்த சஷ்டி கவசம்

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலரருள் கந்தர்
சஷ்டி கவசந் தனை.

## குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த
குமரன் அடி நெஞ்சே குறி

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவும் செங்கதிர் வேலோன்
பாதம் இரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மைய நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால் எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிற நிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாச அங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையும் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறுமுகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமும் தரித்து
நன் மணிபூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்

துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனித வேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்ன வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருந்தோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் பெண் குறிகளை அயில்வேல் காக்க

பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியிணை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வதனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்கத் தாக்கத் தடையறத் தாக்க
பார்க்கப் பார்க்கப் பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாட்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட்டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளர் களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனைமயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடன் பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டிய பாவையும் ஒட்டிய செருக்கும்
காசும் பணமும் காவுடன் சோறும்

ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதாளெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியும் கரடியும் இனித்தொடர்ந் தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயங் குன்மம் சொக்குச்சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிருதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பரு அரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீ எனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்காய்
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுர பவனே திகழொழி பவனே
பரிபுர பவனே பவமொழி பவனே
அரிதிரு மருகா அமரா வதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ் சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை

இடும்பனை யழித்த இனிய வேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழநிப் பதிவாழ் பால குமரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னருளாக
அன்புடன் இரஷிஅன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்திபெற்றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசன்
வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியர் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கத் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒரு நாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங்கருளுவர்

மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத்தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தெனதுள்ளம் அட்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன் துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

முற்றும்



# சகல கலா வல்லி மாலை

## மூலம்

வெண்டாமரைக் கன்றி நின்பதந்
  தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மாரைக்குத் தகாதுகொ
  லோ? சக மேழுமளித்
துண்டானுறங்க ஒழித்தான்பித்
  தாகவுண் டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
  சகல கலாவல்லியே ! 1

நாடும் பொருட்சுவை சொற்சுவை
  தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
  வாய்: பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே!
  கனதனக் குன்றுமைம்பாற்
காடும் சுமக்கும் கரும்பே
  சகல கலாவல்லியே ! 2

அளிக்கருஞ் செந்தழிழ்த் தெள்ளமு
  தார்த்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
  லோ ? உளம் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
  கவிமழை சிந்தக்கண்டு
களிக்கும் கலாப மயிலே
  சகல கலாவல்லியே ! 3

தூக்கும் பனுவற் றுறை தோய்ந்த
  கல்வியுஞ் சொற்சுவைதோய்
வாக்கும்பெருகப் பணித்தருள்
  வாய், வடநூற்கடலும்
தேக்குஞ் செழுந்தழிழ்ச் செல்வமுந்
  தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
  சகல கலாவல்லியே ! 4

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
  னே? நெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவ முயர்த்தோன் செந்
  நாவு மகமுமவெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய் !
  சகல கலாவல்லியே ! 5

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி நெய்தல் நல்
காய்: எழுதா மறையும்
விண்ணும் புவியும் புனலும்
கனலும்வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய் !
சகல கலாவல்லியே ! 6

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனு மென்பாற்
கூட்டும் படி நின் கடைக்கணல்
காய் உளங் கொண்டு தொண்டர்
தீட்டும் கலைத்தமிழ்த் தீம்பால்
அமுதந் தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளொதிமப் பேடே!
சகல கலாவல்லியே ! 7

சொல்லிற் பனமும் அவதான
மும்கல்வி சொல்லவல்ல
நன்வித்தை யுந்தந் தடிமைகொள்
வாய் : நளினாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகாலல்
முஞ்சிதை யாமைநல்கும்
கல்விப் பெருஞ்செல்வப் பேறே!
சகல கலாவல்லியே ! 8

சொற்கும் பொருட்கும் உயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ் சரத்தின் பிடியோ
டரசன்னம் நாணநடை
கற்கும் பதாம்புயத் தாளே!
சகல கலாவல்லியே ! 9

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண் கண்டளவிற் பணியச்செய்
வாய் படைப் போன்முதலாம்
விண் கண்ட தெய்வம்பல கோடியுண்
டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வ முளதோ?
சகல கலாவல்லியே ! 10

**(சகல கலாவல்லி மாலை முற்றிற்று)**

# அபிராமி அந்தாதி

## காப்பு

தார் அமர் கொன்றையும் சண்பக மாலையும் சாத்தும்தில்லை
ஊரர்தம் பாகத்து உமைமைந்தனே! உலகுஏழும் பெற்ற
சீர்அபிராமி அந்தாதி எப்போதும் என் சிந்தையுள்ளே
கார் அமர் மேனிக் கணபதியே! நிற்கக் கட்டுரையே.

## நூல்

### நல்வித்தையும் ஞானமும் பெற

உதிக்கின்ற செங்கதிர், உச்சித் திலகம், உணர்வுடையோர்
மதிக்கின்ற மாணிக்கம், மாதுளம் போது, மலர்க்கமலை
துதிக்கின்ற மின்கொடி, மென்கடிக் குங்குமத் தோயம்என்ன
விதிக்கின்ற மேனி அபிராமி என்தன் விழுத்துணையே. 01

### தெய்வத்துணை

துணையும், தொழுந்தெய்வமும், பெற்ற தாயும், சுருதிகளின்
பணையும், கொழுந்தும், பதிகொண்ட வேரும், பனிமலர்ப்பூங்
கணையும், கருப்புச்சிலையும், மென்பாசாங் குசமும், கையில்
அணையும் திரிபுர சுந்தரி ஆவது அறிந்தனமே. 02

அறிந்தேன் எவரும் அறியா மறையை, அறிந்துகொண்டு
செறிந்தேன், உனது திருவடிக்கே; திருவே, வெருவிப்
பிறிந்தேன், நின்அன்பர் பெருமை எண்ணாத கருமநெஞ்சால்
மறிந்தே விழும் நரகுக்குஉற வாய மனிதரையே! 03

### உயர்பதவிகள் அடைய

மனிதரும், தேவரும், மாயா முனிவரும் வந்துசென்னி
குனிதரும் சேவடிக் கோமளமே! கொன்றை வார்சடைமேல்
பனிதரும் திங்களும், பாம்பும், பகீரதியும் படைத்த
புனிதரும் நீயும்என் புந்தி எந்நாளும் பொருந்துகவே 04

### மனக்கவலை தீர

பொருந்திய முப்புரை, செப்புரை செய்யும் புணர்முலையால்
வருந்திய வஞ்சி மருங்குல் மனோன்மணி! வார்சடையோன்
அருந்திய நஞ்சு அமுதாக்கிய அம்பிகை! அம்புயம்மேல்
திருந்திய சுந்தரி, அந்தரி பாதம்என் சென்னியதே. 05

## மந்திர சித்தி பெற

சென்னியது உன்பொற்றிருவடித் தாமரை! சிந்தையுள்ளே
மன்னியது உன்திரு மந்திரம்! சிந்துர வண்ணப்பெண்ணே!
முன்னிய நின் அடியாருடன் கூடி முறைமுறையே
பன்னியது, என்றும் உந்தன் பரம் ஆகம பத்ததியே! 06

## மலையென வரும் துன்பம் பனியென நீங்க

ததியுறு மத்தில் சுழலும்என் ஆவி, தளர்விலதோர்
கதியுறு வண்ணம் கருதுகண் டாய்! கமலாலயனும்,
மதியுறு வேணி மகிழ்நனும், மாலும், வணங்கிஎன்றும்
துதியுறு சேவடியாய்! சிந்துர ஆனன சுந்தரியே! 07

## நல்லறம் சிறக்கத் துறவறம்

சுந்தரி எந்தை துணைவி, என் பாசத் தொடரையெல்லாம்
வந்தரி, சிந்துர வண்ணத்தினாள், மகிடன் தலைமேல்
அந்தரி, நீலி, அழியாத கன்னிகை, ஆரணத்தோன்
கந்தரி, கைத்தலத்தாள் மலர்த் தாள்என் கருத்தனவே. 08

## பேரருள் உண்டாக

கருத்தன எந்தைதன், கண்ணன், வண்ணக் கனகவெற்பில்
பெருத்தன, பால்அழும் பிள்ளைக்கு நல்கின, பேர்அருள்கூர்
திருத்தன பாரமும்; ஆரமும், செங்கைச் சிலையும், அம்பும்
முருத்துஅன மூரலும், நீயும்அம்மே; வந்துஎன் முன்நிற்கவே. 09

## மோட்ச சாதனம் பெற

நின்றும் இருந்தும் கிடந்தும் நடந்தும் நினைப்பதுஉன்னை;
என்றும் வணங்குவது உன்மலர்த் தாள்; எழு தாமறையின்
ஒன்றும் அரும்பொருளே! அருளே! உமையே! இமயத்து
அன்றும் பிறந்தவளே! அழியா முத்தி ஆனந்தமே! 10

## இல்வாழ்க்கை இன்பம் பெற

ஆனந்தமாய், என் அறிவாய், நிறைந்த அமுதமுமாய்,
வான் அந்தமான வடிவுடையாள், மறை நான்கினுக்கும்
தான்அந்த மான சரணார விந்தத் தவளநிறக்
கானம்தம் ஆடரங்காம் எம்பிரான் முடிக் கண்ணியதே. 11

## நெஞ்சம் தியானத்தில் நிலைபேறு அடைய

கண்ணியது உன்புகழ்; கற்பது உன் நாமம்; கசிந்துபத்தி
பண்ணியது உன்இரு பாதாம் புயத்தில; பகல்இரவா
நண்ணியது உன்னை நயந்தோர் அவையத்து; நான் முன்செய்த
புண்ணியம் ஏது? என் அம்மே! புவி ஏழையும் பூத்தவளே! 12

## வைராக்கிய நிலை எய்த

பூத்தவளே புவனம் பதி னான்கையும், பூத்தவண்ணம்
காத்தவளே! பின் கரந்தவளே! கறைக் கண்டனுக்கு
மூத்தவளே! என்றும் மூவா முகுந்தற்கு இளையவளே!
மாத்தவளே! உன்னை அன்றி, மற்றஓர்தெய்வம் வந்திப்பதே! 13

## தலைமை பெற

வந்திப்பவர் உன்னை, வானவர் தானவர் ஆனவர்கள்;
சிந்திப்பவர், நல் திசைமுகர் நாரணர்; சிந்தையுள்ளே
பந்திப்பவர், அழியாப் பரமானந்தர்; பாரில் உன்னைச்
சிந்திப் பவர்க்கு எளிதாம் எம்பிராட்டி! நின் தண்ணளியே. 14

## பெருஞ்செல்வமும் பேரின்பமும் பெற

தண்ணளிக்கு என்று முன்னேபல கோடி தவங்கள் செய்வார்,
மண்அளிக்கும் செல்வமோ பெறு வார்? மதி வானவர்தம்
விண்அளிக்கும் செல்வமும், அழியா முத்தி வீடும்அன்றோ?
பண்அளிக்கும் சொற் பரிமள யாமளைப் பைங்கிளியே! 15

## முக்காலமும் உணரும் ஆற்றல் உண்டாக

கிளியே!கிளைஞர் மனத்தே கிடந்து கிளர்ந்து ஒளிரும்
ஒளியே! ஒளிரும் ஒளிக்குஇடமே! எண்ணில் ஒன்றும் இல்லா,
வெளியே! வெளிமுதற் பூதங்களாகி விரிந்த அம்மே!
அளியேன் அறிவு அளவிற்குஅள வானது அதிசயமே! 16

## கன்னிகைகளுக்கு நல்ல வரன் கிடைக்க

அதிசய மான வடிவுடை யாள்! அரவிந்தமெல்லாம்
துதிசயஆனன சுந்தர வல்லி! துணை இரதி
பதிசய மானது அபசய மாகமுன் பார்த்தவர்தம்
மதிசய மாக அன்றோ, வாம பாகத்தை வவ்வியதே? 17

## பயம் நீங்க

வவ்விய பாகத்து இறைவரும் நீயும் மகிழ்ந்திருக்கும்
செவ்வியும், உங்கள் திருமணக் கோலமும், சிந்தையுள்ளே
அவ்வியம் தீர்த்துஎன்னை ஆண்ட பொற்பாதமும் ஆகிவந்து,
வெவ்விய காலன்என் மேல்வரும் போது, வெளிநிற்கவே! 18

## பேரின்பம் உண்டாக

வெளிநின்ற நின் திருமேனியைப் பார்த்து, என் விழியும்நெஞ்சும்
களிநின்ற வெள்ளம் கரைகண்டது இல்லை; கருத்தினுள்ளே
தெளிகின்ற ஞானம் திகழ்கின்றது என்ன திருவுளமோ!
ஒளிநின்ற கோணங்கள் ஒன்பதும் மேவி உறைபவளே! 19

## வீடு வாசல் முதலிய செல்வங்கள் உண்டாக

உறைகின்ற நின்திருக் கோயில், நின் கேள்வர் ஒருபக்கமோ!
அறைகின்ற நான்மறையின் அடியோ! முடியோ! அமுதம்
நிறைகின்ற வெண்திங்களோ? கஞ்சகமோ? என்தன் நெஞ்சகமோ?
மறைகின்ற வாரிதி யோ? பூர ணாசல மங்கலையே! 20

## அம்பிகைக்குச் செய்த தீமை நீங்க

மங்கலை, செங்கல சம்முலை யாள்,மலையாள், வருணச்
சங்குஅலை செங்கைச் சகல கலாமயில், தாவுகங்கை
பொங்குஅலை தங்கும் புரிசடையோன் புடையாள், உடையாள்,
பிங்கலை, நீலி, செய்யாள், வெளியாள் பசும்பெண் கொடியே. 21

## பிறவிப் பிணி தீர

கொடியே! இளவஞ்சிக் கொம்பே! எனக்குவம்பே பழுத்த
படியே! மறையின் பரிமளமே! பனிமால் இமயப்
பிடியே! பிரமன் முதலாய தேவரைப் பெற்றஅம்மே!
அடியேன் இறந்துஇங்கு இனிப்பிறவாமல் வந்துஆண்டு கொள்ளே! 22

## மனச்சஞ்சலம் உண்டாகாதிருக்க

கொள்ளேன் மனத்தில்நின் கோலம்அல் லாது, அன்பர் கூட்டம் தன்னை
விள்ளேன்; பரசமயம் விரும்பேன்; வியன்மூவுலகுக்கு
உள்ளே! அனைத்தினுக்கும் புறம்பே! உள்ளத்தே விளைந்த
கள்ளே! களிக்கும் களியே! அளியேஎன் கண்மணியே! 23

## தீராத நோய் தீர

மணியே! மணியின் ஒளியே! ஒளிரும் மணிபுனைந்த
அணியே! அணியும் அணிக்குஅழகே! அணு காதவர்க்குப்
பிணியே! பிணிக்கு மருந்தே! அமரர் பெருவிருந்தே!
பணியேன் ஒருவரை, நின்பத்ம பாதம் பணிந்தபின்னே! 24

## நினைத்த காரியம் இடையூறின்றி ஈடேற

பின்னே திரிந்துஉன் அடியாரைப் பேணிப் பிறப்புஅறுக்க
முன்னே தவங்கள் முயன்றுகொண்டேன்; முதல் மூவருக்கும்
அன்னே! உலகுக்கு அபிராமி என்னும் அருமருந்தே!
என்னே? இனிஉன்னை யான்மற வாமல்நின்று ஏத்துவனே! 25

## சொல்வன்மையும் செல்வாக்கும் பெருக

ஏத்தும் அடியவர் ஈரேழு உலகினையும் படைத்தும்
காத்தும் அழித்தும் திரிபவராம்; கமழ் பூங்கடம்பு
சாத்தும் குழல்அணங் கே! மணம் நாறும்நின் தாள் இணைக்குஎன்
நாத்தங்கு புன்மொழி ஏறிய வாறு நகையுடைத்தே! 26

## அருட்புனல் பரவ

உடைத்தனை வஞ்சப் பிறவியை; உள்ளம் உருகும்அன்பு
படைத்தனை; பத்ம பதயுகம் சூடும் பணிஎனக்கே
அடைத்தனை; நெஞ்சத்து அழுக்கை எல்லாம்நின் அருட்புனலால்
துடைத்தனை; சுந்தரி! நின்அருள் ஏதென்று சொல்லுவதே! 27

## இகபர சுகங்களைப் பெற

சொல்லும் பொருளும் என, நட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடியே! நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழும் அவர்க்கே அழியா அரசும்
செல்லும் தவநெறியும் சிவ லோகமும் சித்திக்குமே 28

## அணிமாதி சித்திகளைப் பெற

சித்தியும், சித்தி தரும்தெய்வம் ஆகித் திகழும்பரா
சக்தியும், சக்தி தழைக்கும் சிவமும், தவம்முயல்வார்
முத்தியும், முத்திக்கு வித்தும், வித்தாகி முளைத்தெழுந்த
புத்தியும், புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தைஅன்றே. 29

## அடுத்தடுத்துவரும் துன்பம் நீங்க

அன்றே தடுத்துஎன்னை ஆண்டுகொண் டாய்; கொண்டது அல்லஎன்கை
நன்றே? உனக்கினி நான்என் செயினும், நடுக்கடலுள்
சென்றே விழினும், கரையேற்றுகை நின் திருவுளமே
ஒன்றே! பலஉருவே! அருவே! என் உமையவளே! 30

## மறுமையில் இன்பம் உண்டாக

உமையும் உமையொரு பாகரும் ஏக உருவில்வந்துஇங்கு,
எமையும் தமக்குஅன்பு செய்யவைத் தார்; இனி எண்ணுதற்குச்
சமையங்களும் இல்லை; ஈன்றுஎடுப் பாள்ஒரு தாயும் இல்லை;
அமையும், அமையுறு தோளியர் மேல்வைத்த ஆசையுமே! 31

## ஆட்கொள்ள

ஆசைக் கடலில் அகப்பட்டு, அருள் அற்ற அந்தகன்கைப்
பாசத்தில் அல்லற்படஇருந்தேனை, நின் பாதம் என்னும்
வாசக் கமலம் தலைமேல் வலியவைத்து ஆண்டுகொண்ட
நேசத்தை என்சொல்லுவேன்! ஈசர் பாகத்து நேரிழையே! 32

## அம்பிகையின் நினைவு அகலாதிருக்க

இழைக்கும் வினைவழியே அடும் காலன் எனைநடுங்க
அழைக்கும் பொழுதுவந்து, "அஞ்சல்" என்பாய்; அத்தர் சித்தம்எல்லாம்
குழைக்கும் களபக் குவிமுலை யாமளைக் கோமளமே!
உழைக்கும்பொழுது, உன்னையே "அன்னையே"என்பன்,ஓடிவந்தே 33

## அடியாருக்கு வேண்டுவன பெற

வந்தே சரணம் புகும் அடியார்க்கு, வானுலகம்
தந்தே, பரிவொடு தான்போய் இருக்கும் சதுர்முகமும்,
பைந்தேன் அலங்கற் பருமணி ஆகமும், பாகமும், பொற்
செந்தேன் மலரும், அலர்கதிர் ஞாயிறும், திங்களுமே. 34

## கடி மணம் திகழ

திங்கட் பசுவின் மணம்நாறும் சீறடி சென்னிவைக்க,
எங்கட் கொருதவம் எய்தியவா? எண்இறந்த விண்ணோர்
தங்கட்கும் இந்தத் தவம்எய்துமோ? தரங்கக் கடலுள்
வெங்கட் பணிஅனை மேல்துயில் கூரும் விழுப்பொருளே! 35

## தொல்வினைகள் போக

பொருளே! பொருள்முடிக்கும் போகமே! அரும் போகம்செய்யும்
மருளே! மருளில் வரும்தெருளே! என் மனத்துவஞ்சத்து
இருள்ஏதும் இன்றி ஒளிவெளி ஆகியிருக்கும் உன்றன்
அருள் ஏது அறிகின்றிலேன், அம்புயஆதனத்து அம்பிகையே! 36

## நவரத்தினம் அடையும் நல்லூழ் பெற

கைக்கே அணிவது கன்னலும் பூவும்; கமலம்அன்ன
மெய்க்கே அணிவது வெண்முத்து மாலை; விடஅரவின்
பைக்கே அணிவது பன்மணிக் கோவையும் பட்டும்; எட்டுத்
திக்கே அணியும் திருவுடை யான்இடம் சேர்பவளே! 37

## வேண்டிய பொருளை வேண்டிய படியே அடைய

பவளக் கொடியில் பழுத்தசெவ் வாயும், பனிமுறுவல்
தவளத் திருநகை யாம் துணையு, எங்கள் சங்கரனைத்
துவளப் பொருது, துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்
அவளைப் பணிமின் கண்டீர் அமராவதி ஆளுகைக்கே. 38

## தேர்ச்சி பெற

ஆளுகைக்கு உன்தன் அடித் தாமரைகள்உண்டு; அந்தகன்பால்
மீளுகைக்கு உன்தன் விழியின் கடைஉண்டு; மேல்இவற்றின்
மூளுகைக்கு என்குறை நின்குறையே அன்று; முப்புரங்கள்
மாளுகைக்கு அம்பு தொடுத்தவில்லான் பங்கில் வாள்நுதலே! 39

## பூர்வ புண்ணியம் தடையின்றிப் பயன்தர

வாணுதல் கண்ணியை, விண்ணவர் யாவரும் வந்து இறைஞ்சிப்
பேணுதற்கு எண்ணிய எம்பெரு மாட்டியைப் பேதைநெஞ்சில்
காணுதற்கு அண்ணியள் அல்லாத கன்னியை, காணும் அன்பு
பூணுதற்கு எண்ணிய எண்ணம்அன்றோ, முன்செய் புண்ணியமே! 40

## அடியார் உறவு பெற

புண்ணியம் செய்தனமே மனமே! புதுப் பூங்குவளைக்
கண்ணியம், செய்ய கணவரும் கூடி, நம் காரணத்தால்
நண்ணி இங்கேவந்து, தம்அடி யார்கள் நடுஇருக்கப்
பண்ணி, நம் சென்னியின்மேல் பத்மபாதம் பதித்திடவே. 41

## உலகம் நமக்கு உதவ

இடங்கொண்டு விம்மி, இணைகொண்டு இறுகி இளகி, முத்து
வடங்கொண்ட கொங்கை மலைகொண்டு இறைவர் வலிய நெஞ்சை
நடங்கொண்ட கொள்கை நலங்கொண்ட நாயகி! நல்அரவின்
படங்கொண்ட அல்குல் பனிமொழி, வேதப் பரிபுரையே. 42

## தீமையெல்லாம் நீங்க

பரிபுரச் சீறடிப் பாசாங்குசை, பஞ்சபாணி, இன்சொல்
திரிபுர சுந்தரி, சிந்துர மேனியள், தீமைநெஞ்சில்
புரிபுர வஞ்சரை அஞ்சக் குனிபொருப் புச்சிலைக்கை,
எரிபுரை மேனி இறைவர்செம் பாகத்து இருந்தவளே! 43

தவளே! இவள் எங்கள் சங்கரனார் மனைமங்கலமாம்;
அவளே அவர்தமக்கு அன்னையும் ஆயினள்; ஆகையினால்,
இவளே கடவுளர் யாவர்க்கும் மேலை இறைவியுமாம்;
துவளேன், இனிஒரு தெய்வம்உண் டாகமெய்த் தொண்டுசெய்தே. 44

## உலக அபவாதம் நீங்க

தொண்டு செய்யாது, நின்பாதம் தொழாது, துணிந்துஇச்சையே
பண்டு செய்தார் உளரோஇலரோ? அப்பரிசு அடியேன்
கண்டு செய்தால், அது கைதவமோ அன்றிச் செய்தவமோ?
மிண்டு செய்தாலும் பொறுக்கைநன்றே, பின் வெறுக்கைஅன்றே 45

வெறுக்கும் தகைமைகள் செய்யினும், தம்அடியாரை மிக்கோர்
பொறுக்கும் தகைமை புதியதுஅன்றே; புதுநஞ்சை உண்டு
கறுக்கும் திருமிடற்றான் இடப்பாகம் கலந்த பொன்னே!
மறுக்கும் தகைமைகள் செய்யினும், யான்உன்னை வாழ்த்துவனே 46

## யோக சித்திபெற

வாழும் படிஒன்று கண்டுகொண்டேன்; மனத்தே ஒருவர்
வீழும் படிஅன்று; விள்ளும்படி அன்று; வேலைநிலம்
ஏழும், பருவரை எட்டும் எட்டாமல், இரவுபகல்
சூழும் சுடர்க்கு நடுவே கிடந்து சுடர்கின்றதே. 47

சுடரும் கலைமதி துன்றும் சடைமுடிக் குன்றில்ஒன்றிப்
படரும் பரிமளப் பச்சைக் கொடியைப் பதித்துநெஞ்சில்,
இடரும் தவிர்த்து, இமைப் போதுஇருப்பார் பின்னும் எய்துவரோ
குடரும் கொழுவும் குருதியும் தோயும் குரம்பையிலே? 48

குரம்பை அடுத்துக் குடிபுக்க ஆவி, வெங் கூற்றுக்கிட்ட
வரம்பை அடுத்து மறுகும்அப்போது, வளைக்கை அமைத்து
அரம்பை யடுத்த அரிவையர் சூழவந்து, "அஞ்சல்" என்பாய்,
நரம்பை அடுத்த இசைவடி வாய்நின்ற நாயகியே! 49

## அம்பிகையை நேரில் தரிசிக்க

நாயகி, நான்முகி, நாராயணி, கை நளினபஞ்ச
சாயகி, சாம்பவி, சங்கரி, சாமளை, சாதிநச்சு
வாயகி மாலினி, வாராகி சூலினி, மாதங்கிஎன்று
ஆயகியாதி உடையாள் சரணம் அரண் நமக்கே. 50

## வையக வாழ்வில் சிறக்க

அரணம் பொருள்என்று அருள் ஒன்றுஇலாத அசுரர்தங்கள்
முரண்அன்று அழியமுனிந்த பெம்மானும் முகுந்தனுமே,
"சரணம் சரணம்" எனநின்ற நாயகிதன் அடியார்,
மரணம் பிறவி இரண்டும்எய்தார், இந்த வையகத்தே. 51

## இம்மையில் பெருஞ்செல்வம் உண்டாக

வையம், துரகம், மதகரி, மாமகுடம், சிவிகை,
பெய்யும் கனகம், பெருவிலை ஆரம், பிறைமுடித்த
ஐயன் திருமனை யாள்அடித் தாமரைக்கு அன்புமுன்பு
செய்யும் தவமுடை யார்க்கு உளவாகிய சின்னங்களே. 52

## தவம் சிறக்க

சின்னஞ் சிறிய மருங்கினில் சாத்திய செய்யபட்டும்,
பென்னம் பெரிய முலையும், முத்தாரமும், பிச்சிமொய்த்த
கன்னங் கரிய குழலும்கண் மூன்றும் கருத்தில் வைத்துத்
தன்னந்தனியிருப் பார்க்கிது போலும் தவமில்லையே 53

## கடன் தொல்லைகள் தீர

இல்லாமை சொல்லி, ஒருவர்தம் பால்சென்று, இழிவுபட்டு
நில்லாமை நெஞ்சில் நினைகுவிரேல், நித்தம் நீடுதவம்
கல்லாமை கற்ற கயவர்தம்பால் ஒரு காலத்திலும்
செல்லாமை வைத்த திரிபுரை பாதங்கள் சேர்மின்களே. 54

## விருப்பு வெறுப்பற்ற மோனநிலை எய்த

மின் ஆயிரம் ஒரு மெய்வடி வாகி விளங்குகின்ற
அன்னாள், அகமகிழ் ஆனந்த வல்லி, அருமறைக்கு
முன்னாய், நடுஎங்குமாய், முடிவாய முதல்வி தன்னை
உன்னாது ஒழியினும் உன்னினும், வேண்டுவது ஒன்றில்லையே. 55

## யாவரையும் ஈர்க்கும் ஆற்றல் உண்டாக

ஒன்றாய் அரும்பிப் பலவாய் விரிந்து, இவ்வுலகுஎங்குமாய்
நின்றாள், அனைத்தையும் நீங்கிநிற்பாள் என்தன் நெஞ்சினுள்ளே
பொன்றாது நின்று புரிகின்றவா! இப்பொருள் அறிவார்
அன்று ஆலிலையில் துயின்ற பெம்மானும் என்ஐயனுமே 56

## வறுமை நிலை ஒழிய

ஐயன் அளந்தபடி இருநாழி கொண்டு, அண்டமெல்லாம்
உய்ய அறம்செய்யும் உன்னையும் போற்றி, ஒருவர்தம்பால்
செய்ய பசுந்தமிழ்ப் பாமாலையும் கொண்டு சென்றுபொய்யும்
மெய்யும் இயம்பவைத்தாய்: இதுவோ உன்தன் மெய்யருளே? 57

## இறையுணர்வால் மன அமைதி பெற

அருணாம் புயத்தும், என் சித்தாம் புயத்தும், அமர்ந்திருக்கும்
தருணாம் புயமுலைத் தையல் நல்லாள், தகை சேர்நயனக்
கருணாம் புயமும், வதனாம் புயமும், கராம்புயமும்,
சரணாம் புயமும் அல்லால் கண்டிலேன், ஒரு தஞ்சமுமே. 58

## பிள்ளை நல்லவனாக

தஞ்சம் பிறிதுஇல்லை ஈதுஅல்லது என்று, உன் தவநெறிக்கே
நெஞ்சம் பயில நினைகின்றிலேன்; ஒன்றை நீள் சிலையும்
அஞ்சு அம்பும் இக்குஅலராகி நின்றாய்! அறியார் எனினும்,
பஞ்சுஅஞ்சும் மெல்லடியார் அடியார் பெற்ற பாலரையே. 59

## மெய்யுணர்வு தோன்ற

பாலினும் சொல்இனி யாய்! பனி மாமலர்ப் பாதம்வைக்க,
மாலினும், தேவர்வணங்க நின்றோன் கொன்றை வார்சடையின்
மேலினும், கீழ்நின்று வேதங்கள் பாடும்மெய்ப் பீடம்ஒரு
நாலினும், சாலநன்றோ அடியேன் முடை நாய்த்தலையே? 60

## மாயை அகன்று உண்மை உணர்வு உண்டாக

நாயே னையும் இங்குஒரு பொருளாக நயந்துவந்து,
நீயே நினைவின்றி ஆண்டுகொண் டாய், நின்னை உள்ளவண்ணம்
பேயேன் அறியும் அறிவுதந்தாய்; என்ன பேறுபெற்றேன்!
தாயே, மலைமகளே, செங்கண் மால்திருத் தங்கைச்சியே! 61

## எத்தகைய அச்சமும் அகல

தங்கச் சிலைகொண்டு, தானவர் முப்புரம் சாய்த்து, மத
வெங்கண் கரிஉரி போர்த்த செஞ்சேவகன் மெய்அடையக்
கொங்கைக் குரும்பைக் குறியிட்ட நாயகி, கோகனச்
செங்கைக் கரும்பும், மலரும்எப் போதும் என்சிந்தையதே. 62

## நல்லறிவு உண்டாக

என்சிந்தை தேறும் படிசில ஏதுவும் காட்டி, முன் செல்கதிக்குக்
கூறும் பொருள், குன்றில் கொட்டும் தறி, குறிக்கும் சமயம்
ஆறும் தலைவி இவளாய் இருப்பது அறிந்திருந்தும்,
வேறும் சமயம்உண்டு என்று கொண்டாடிய வீணருக்கே. 63

## பக்தி பெருக

வீணே பலிகவர் தெய்வங்கள் பால்சென்று மிக்கஅன்பு
பூணேன்; உனக்குஅன்பு பூண்டு கொண்டேன்; நின்புகழ்ச்சியன்றிப்
பேணேன், ஒருபொழுதும்; திரு மேனிப்ரகாசம் அன்றிக்
காணேன் இருநில மும், திசை நான்கும், ககனமுமே. 64

## மகப்பேறு உண்டாக

ககனமும் வானும் புவனமும் காண, விற் காமன் அங்கம்
தகனம்முன் செய்த தவப்பெரு மாற்குத் தடக்கையும்செம்
முகனும் முந்நான்கு இருமூன்றுஎனத் தோன்றிய மூதறிவின்
மகனும் உண்டாயதன்றோ? வல்லி நீசெய்த வல்லபமே. 65

## கவிபாடும் ஆற்றல் பெற

வல்லபம் ஒன்றறியேன்; சிறியேன் நின் மலரடிச்செம்
பல்லவம் அல்லது பற்றுஒன்று இலேன்; பசும் பொற்பொருப்பு
வில்லவர் தம்முடன் வீற்றிருப்பாய், வினையேன் தொடுத்த
சொல்அவ மாயினும், நின்திரு நாமங்கள் தோத்திரமே. 66

தோத்திரம் செய்து தொழுதுமின் போலும்நின் தோற்றம்ஒரு
மாத்திரைப் போதும் மனத்தில் வையாதவர் வண்மை, குலம்,
கோத்திரம், கல்வி, குணம்குன்றி, நாளும் குடில்கள்தோறும்
பாத்திரம் கொண்டு பலிக்குஉழலா நிற்பர் பாரெங்குமே. 67

## நிலம் வீடு போன்ற செல்வங்கள் பெருக

பாரும், புனலும், கனலும், வெங் காலும், படர்விசும்பும்;
ஊரும் முருகு சுவைஒளி ஊறுஒலி ஒன்றுபடச்
சேரும் தலைவி, சிவகாம சுந்தரி சீரடிக்கே
சாரும் தவம் உடையார் படையாத தனம்இல்லையே. 67

## சகல சௌபாக்கியங்களும் உண்டாக

தனம்தரும்; கல்வி தரும்; ஒரு நாளும் தளர்வுஅறியா
மனம்தரும்; தெய்வ வடிவும் தரும்; நெஞ்சில் வஞ்சம் இல்லா
இனம்தரும்; நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே,
கனம்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக்கண்களே. 69

## இசை, ஓவியம் முதலிய கலைகளில் வல்லமை பெற

கண்களிக் கும்படி கண்டுகொண் டேன், கடம் பாடவியில்:
பண்களிக்கும் குரல் வீணையும், கையும், பயோதரமும்,
மண்களிக்கும் பச்சை வண்ணமும் ஆகி, மதங்கர்குலப்
பெண்களிற் தோன்றிய எம்பெரு மாட்டிதன் பேரழகே. 70

## மனக்குறை தீர்ந்து மகிழ்ச்சி பெருக

அழகுக்கு ஒருவரும் ஒவ்வாத வல்லி, அருமறைகள்
பழகிச் சிவந்த பதாம்புயத் தாள், பனி மாமதியின்
குழவித் திருமுடிக் கோமள யாமளைக் கொம்பிருக்க,
இழவுற்று நின்றநெஞ்சே! இரங்கேல்! உனக்கு என்குறையே? 71

## பிறவிப்பிணி தீர

என்குறை தீரநின்று ஏத்துகின் றேன்; இனி யான்பிறக்கின்
நின்குறையே அன்றி யார்குறை காண்! இரு நீள்விசும்பின்
மின்குறை காட்டி மெலிகின்ற நேரிடை மெல்லியலாய்!
தன்குறை தீர, என் கோன்சடை மேல்வைத்த தாமரையே. 72

## பெண்களுக்குக் கர்ப்பம் உண்டாக

தாமம் கடம்பு; படைபஞ்ச பாணம்; தனுக்கரும்பு;
யாமம் வயிரவர் ஏத்தும் பொழுது; எமக்கென்று வைத்த
சேமம் திருவடி; செங்கைகள் நான்கு, ஒளி செம்மை; அம்மை
நாமம் திரிபுரை; ஒன்றோடு இரண்டும் நயனங்களே. 73

## செய் தொழில் தலைமை எய்த

நயனங்கள் மூன்றுடை நாதனும், வேதமும், நாரணனும்,
அயனும் பரவும் அபிராம வல்லி அடிஇணையைப்
பயன்என்று கொண்டவர், பாவையர் ஆடவும் பாடவும், பொன்
சயனம் பொருந்து தமனியக் காவினில் தங்குவரே. 74

## விதியையும் வெல்ல

தங்குவர் கற்பகத் தருவின் நீழலில்; தாயர்இன்றி
மங்குவர், மண்ணில் வழுவாப் பிறவியை; மால்வரையும்,
பொங்குவர் ஆழியும், ஈரேழ் புவனமும் பூத்தஉந்திக்
கொங்குஇவர் பூங்குழலாள் திரு மேனி குறித்தவரே. 75

## தனக்குரிய பொருள் தப்பாமல் வந்துசேர

குறித்தேன் மனத்தில், நின்கோலம் எல்லாம்; நின் குறிப்பறிந்து
மறித்தேன் மறலி வருகின்ற நேர்வழி; வண்டுகிண்டி
வெறித்தேன் அவிழ்கொன்றை வேணிப் பிரான்ஒரு கூற்றைமெய்யில்
பறித்தே குடிபுகுதும் பஞ்ச பாண பயிரவியே! 76

## பகைவர்களால் உண்டாகும் அச்சம் நீங்க

பயிரவி! பஞ்சமி! பாசாங் குசை! பஞ்ச பாணி! வஞ்சர்
உயிரவி உண்ணும் உயர்சண்டி! காளி! ஒளிரும்கலா
வயிரவி! மண்டலி! மாலினி! சூலி! வராகிஎன்றே
செயிர் அவி நான்மறை சேர்திரு நாமங்கள் செப்புவரே. 77

## சகல போக சௌபாக்கியங்களும் உண்டாக

செப்பும் கனக கலசமும் போலும் திருமுலைமேல்
அப்பும் களப அபிராம வல்லி அணிதரளக்
கொப்பும், வயிரக் குழையும், விழியின் கொழும்கடையும்,
துப்பும் நிலவும் எழுதிவைத்தேன் என் துணைவிழிக்கே. 78

விழிக்கே அருளுண்டு அபிராம வல்லிக்கு; வேதம்சொன்ன
வழிக்கே வழிபட நெஞ்சுண்டு எமக்கு; அவ் வழிகிடக்கப்,
பழிக்கே சுழன்று, வெம்பாவங்களே, செய்து, பாழ்நரகக்
குழிக்கே அழுந்தும் கயவர்தம் மோடுஎன்ன கூட்டுஇனியே! 79

## நிலையான மன மகிழ்ச்சி உண்டாக

கூட்டியவா என்னைத் தன்அடி யாரில், கொடியவினை
ஓட்டியவா, என்கண் ஓடியவா, தன்னை உள்ளவண்ணம்
காட்டியவா, கண்ட கண்ணும் மனமும் களிக்கின்றவா,
ஆட்டியவா நடம், ஆடகத் தாமரை ஆரணங்கே. 80

## நன்னடத்தை உண்டாக

அணங்கே! அணங்குகள் நின்பரி வாரங்கள் ஆகையினால்
வணங்கேன் ஒருவரை; வாழ்த்துகிலேன் நெஞ்சில்; வஞ்சகரோடு
இணங்கேன்; எனது உனது என்று இருப்பார்சிலர் யாவரொடும்
பிணங்கேன்; அறிவொன்றி லேன், என் கண்நீவைத்த பேரளியே! 81

## கவன சக்தி பெருக

அளிஆர் கமலத்தில் ஆரணங்கே! அகிலாண்டமும் நின்
ஒளியாக நின்ற ஒளிர்திரு மேனியை உள்ளுதொறும்
களியாகி, அந்தக் கரணங்கள் விம்மிக் கரைபுரண்டு
வெளியாய் விடின், எங்ஙனே மறப்பேன் நின் விரகினையே? 82

## ஏவலர் பலர் உளராக

விரவும் புதுமலர் இட்டு, நின் பாத விரைக்கமலம்
இரவும் பகலும் இறைஞ்சவல்லார், இமையோர் எவரும்
பரவும் பதமும், அயிரா வதமும், பகீரதியும்
உரவும் குலிசமும், கற்பகக் காவும் உடையவரே. 83

## இக்கட்டான நிலைகள் நீங்க

உடையாளை, ஒல்குசெம் பட்டு உடையாளை, ஒளிர்மதிசெஞ்
சடையாளை, வஞ்சகர் நெஞ்சடையாளை, தயங்கும் நுண்ணூல்
இடையாளை, எங்கள் பெம்மான் இடையாளை, இங்கென்னை இனிப்
படையாளை, உங்களையும் படையா வண்ணம் பார்த்திருமே. 84

## அல்லல் எல்லாம் அற

பார்க்கும் திசைதொறும் பாசாங் குசமும், பனிச்சிறைவண்டு
ஆர்க்கும் புதுமலர் ஐந்தும், கரும்பும், என் அல்லல்எல்லாம்
தீர்க்கும் திரிபுரையாள் திரு மேனியும், சிற்றிடையும்,
வார்க்குங்கும முலையும், முலைமேல் முத்து மாலையுமே. 85

## அச்சம் நீங்க

மால்அயன் தேட, மறைதேட, வானவர்தேட நின்ற
காலையும் சூடகக் கையையும் கொண்டு, கதித்தகப்பு
வேலை வெங்காலன் என்மேல் விடும்போது, வெளிநில்கண்டாய்!
பாலையும் தேனையும் பாகையும் போலும் பணிமொழியே! 86

## செயற்கரிய செயல்களைக் செய்து புகழ்பெற

மொழிக்கும் நினைவுக்கும் எட்டாதநின் திருமூர்த்தி, எந்தன்
விழிக்கும் வினைக்கும் வெளிநின்ற தால்; விழியால் மதனை
அழிக்கும் தலைவர் அழியா விரதத்தை, அண்டமெல்லாம்
பழிக்கும் படி, ஒரு பாகம் கொண்டு ஆளும் பராபரையே! 87

## அம்பிகையின் அருள் எப்போதும் கிடைக்க

பரம்என்று உனை அடைந்தேன் தமியேனும், உன்பத்தருக்குள்
தரம்அன்று இவன்என்று தள்ளது; தரியலர்தம்
புரம்அன்று எரியப் பொருப்புவில் வாங்கிய, போதில்அயன்
சிரம்ஒன்று செற்ற கையான்இடப் பாகம் சிறந்தவளே! 88

## யோக சித்தி பெற

சிறக்கும் கமலத் திருவே! நின் சேவடி சென்னிவைக்கத்
துறக்கம் தரும்நின்துணைவரும் நீயும், துரியமற்ற
உறக்கம் தரவந்து, உடம்போடு உயிர்உறவு அற்றுஅறிவு
மறக்கும் பொழுது, என் முன்னே வரல்வேண்டும் வருந்தியுமே. 89

## தம்பதிகள் மனம் ஒன்றி மகிழ்ந்திட

வருந்தா வகை என் மனத் தாமரையினில் வந்துபுகுந்து
இருந்தாள், பழைய இருப்பிடமாக; இனி எனக்குப்
பொருந்தாத ஒருபொருள் இல்லை; விண்மேவும் புலவருக்கு
விருந்தாக, வேலை மருந்தானதை நல்கும் மெல்லியளே! 90

## அரசாங்க காரியங்களில் வெற்றி உண்டாக

மெல்லிய நுண்இடை மின்அனை யாளை, விரிசடையோன்
புல்லிய மென்முலை பொன்அனை யாளைப் புகழ்ந்து, மறை
சொல்லிய வண்ணம் தொழும்அடி யாரைத்தொழும் அவர்க்கு
பல்லியம் ஆர்த்துஎழ, வெண்பகடு ஊரும் பதம் தருமே. 91

## மனப்பக்குவம் உண்டாக

பதத்தே உருகி, நின்பாதத்திலே மனம்பற்றி, உன்றன்
இதத்தே ஒழுக, அடிமை கொண்டாய்; இனியான் ஒருவர்
மதத்தே மதிமயங் கேன்; அவர் போனவழியும் செல்லேன்!
முதல்தேவர் மூவரும் யாவரும் போற்றும் முகிழ்நகையே! 92

## உள்ளத்தே உண்மை ஒளி உண்டாக

நகையே இஃதுஇந்த ஞாலம்எல் லாம்பெற்ற நாயகிக்கு
முகையே, முகிழ்முலை மானே முதுகண்; முடிவில்அந்த
வகையே பிறவியும் வம்பே; மலைமகள் என்பதுநாம்;
மிகையே, இவள்தன் தகைமையை நாடி விரும்புவதே. 93

## விரும்பித் தொழுது உயர

விரும்பித் தொழும் அடியார்விழி நீர்மல்கி, மெய்புளகம்
அரும்பித், ததும்பிய ஆனந்த மாகி, அறிவிழந்து,
சுரும்பிற் களித்து, மொழிதடு மாறி, முன் சொன்னஎல்லாம்
தரும் பித்தர் ஆவரென்றால், அபிராமி சமயம்நன்றே! 94

## தூய மனநிலை பெற

நன்றே வருகினும், தீதே விளைகினும், நான் அறிவது
ஒன்றேயும் இல்லை; உனக்கே பரம்; எனக்கு உள்ளஎல்லாம்
அன்றே உனதென்று அளித்து விட்டேன்; அழியாதகுணக்
குன்றே! அருட்கடலே! இம வான்பெற்ற கோமளமே! 95

## எங்கும் தலைமையும் புகழும் பெற

கோமள வல்லியை, அல்லியந் தாமரைக் கோயில்வைகும்
யாமள வல்லியை, ஏதம் இலாளை, எழுதரிய
சாமள மேனிச் சகலகலா மயில் தன்னைத்தம்மால்
ஆமளவும் தொழு வார், எழு பாருக்கும் ஆதிபரே 96

## புகழும் தர்மமும் வளர

ஆதித்தன், அம்புலி, அங்கி, குபேரன், அமரர்தங்கோன்,
போதில் பிரமன், புராரி, முராரி, பொதியமுனி,
காதிப் பொருட்படைக் கந்தன், கணபதி, காமன்முதல்
சாதித்த புண்ணியர் எண்ணிலர் போற்றுவர் தையலையே. 97

## வஞ்சகர் செயலால் வருத்தம் உண்டாகாதிருக்க

தைவந்து நின் அடித்தாமரை சூடிய சங்கரற்குக்,
கைவந்த தீயும் தலைவந்த ஆறும் கரந்துஎங்கே?
மெய்வந்த நெஞ்சின் அல்லால், ஒருகாலும் விரகர்தங்கள்
பொய்வந்த நெஞ்சில் புகல்அறியா மடப் பூங்குயிலே!. 98

## அருள் தன்மை வளர

குயிலாய் இருக்கும் கடம்பா டவியிடை; கோலவியல்
மயிலாய் இருக்கும் இமயாசலத் திடை; வந்து உதித்த
வெயிலாய் இருக்கும் விசும்பில்; கமலத்தின்மீது அன்னமாம்,
கயிலாய ருக்கு அன்றுஇமவான் அளித்த கனங்குழையே. 99

## அம்பிகையின் திருவுருவை மனத்தில் எப்போதும் காண

குழையைத் தழுவிய கொன்றையந் தார்கமழ் கொங்கைவல்லி,
கழையைப் பொருத திருநெடுந் தோளும், கருப்புவில்லும்,
விழையப் பொருதிறல் வேரிஅம் பாணமும், வெண்ணகையும்,
உழையைப் பொருகண்ணும், நெஞ்சில் எப்போதும் உதிக்கின்றவே! 100

## நூற்பயன்

ஆத்தாளை, எங்கள் அபிராம வல்லியை, அண்டமெல்லாம்
பூத்தாளை, மாதுளம் பூநிறத் தாளை, புவி அடங்கக்
காத்தாளை, அம்குச பாசாங் குசமும் கரும்பும்அங்கை
சேர்த்தாளை, முக்கண்ணியைத் தொழுவார்க்கு ஒருதீங்கில்லையே.



ஸ்ரீ அபிராமி துணை

## திருக்கடவூர்

# அபிராமியம்மைப் பதிகம்

### காப்பு

தூயதமிழ்ப் பாமாலை சூட்டுதற்கு மும்மதம்நால்
வாய்ஐங் கரன்தாள் வழுத்துவாம் - நேயர்நிதம்
எண்ணும் புகழ்கடவூர் எங்கள் அபி ராமவல்லி
நண்ணும்பொற் பாதத்தில் நன்கு.

### நூல்

(ஆசிரியர் விருத்தம்)

கலையாத கல்வியும் குறையாத வயதும்ஓர்
கபடுவா ராத நட்பும்
கன்றாத வளமையும் குன்றாத
இளமையும்
கழுபிணியிலாத உடலும்
சலியாத மனமும்அன் பகலாத மனைவியும்
தவறாத சந்தானமும்
தாழாத கீர்த்தியும் மாறாத வார்த்தையும்
தடைகள் வாராத கொடையும்
தொலையாத நிதியமும் கோணாத கோலும்ஒரு
துன்பமில்லாத வாழ்வும்
துய்யநின் பாதத்தில் அன்பும்உத விப்பெரிய
தொண்டரொடு கூட்டு கண்டாய்;
அலையாழி அறிதுயிலு மாயனது தங்கையே!
ஆதிகட வூரின் வாழ்வே!
அமுதீசர் ஒருபாகம் அகலாத சுகபாணி!
அருள்வாமி அபிராமி யே!

# கௌரி காப்புத் தோத்திரம்

தேவி துணை
ஓம் சக்தி ஓம்

## காப்பு

முன்னின்று செய்யுள் முறையாயப்
புனைவதற்கு என்னின் றருள்செய்
எலிவா கனப்பிள்ளாய் சொற்குற்ற
மொடு பொருட்குற்றம் சோர்வு தரும்
எக்குற்றமும் வாராமற்கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே
கௌரியம்மாள் தாயாரே

காத்தென்னைத் தேற்றிடுவாய்
காளிமகா தேவியரே

காலமெல்லாம் நின்னரிய
காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்

எண்ணும் கருமம் இனிதாக
முடித்திடுவாய்

பண்ணும் வினையாவும் பனிபோலப்
போக்கிடுவாய்

உண்ணும் உணவாக உயிரினுக்
குயிராக

என்றும் இருந்தே எனைக்காத்து
வந்திடுவாய்

காடும் கடந்துவந்தேன் மலையும் கடந்து
வந்தேன்

காளிமகா தேவியரே காப்பெனக்குத்
தந்திடுவாய்

சூலம் கொண்டவளே சுந்தர
முகத்தவளே

அரியை உடையவளே அம்மா
காளி தாயே

கொடியமகிஷாசுரனைக் கூறு
போட்டவளே

அசுரக் குணம் யாவும் அழிக்கும்
சுடர்க்கொடியே

சிவனை நினைத்தல்லோ சீர்விரதம்
நீயிருந்தாய்

பரனை நினைத்தல்லோ பதிவிரதம்
நீயிருந்தாய்

அரனை நினைத்தல்லோ அம்மா நீ
நோன்பிருந்தாய்

சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ
நோன்பிருந்தாய்

ஜங்கரனைப் பெற்றவளே அன்று நீ
நோன்பிருந்தாய்

விரதத்தை கண்டே விழித்தான்
சிவனவனும்

அம்மா உமை அணைத்தே அருள்மாரி
பொழிந்தானே

வகையாற்றுப் படலமிதை வழிவழியாக்
காட்டிடுவீர்

நெறியறியாத் திகைப்போர்க்கு
நெறிமுறையைக் காட்டிடுவாய்

காப்பைப் புனைந்துவிடு காலபயம்
ஓட்டிவிடு

நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை
ஊட்டிவிடு

வல்லமையைத் தந்துவிடு
வையகத்தில் வாழவிடு

காளிமகா தேவியரே காப்பருளும்
தேவியரே

காப்பைப் புனைபவளே காப்பாய்
இருப்பவளே

நாடு செழிக்கவென்றே நற்காப்பு
அருளுமம்மா

வீடு செழிக்கவென்றே விழைகாப்பு
அருளுமம்மா

நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு
அருளுமம்மா

அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு
அருளுமம்மா

பிள்ளை அற்றவர்க்குப் பெருங்காப்பு
அருளுமம்மா

பூமணியே மாமணியே புனிதவதி
தாயவளே

நான் விரும்பும் காப்பை நலமுடனே
தாருமம்மா

கல்வி சிறப்பதற்குத் கலைமகளே
வாரும்மா

செல்வம் சிறப்பதற்குத் திருமகளே
வாருமம்மா

வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாரும்மா

பாட்டுடைத் தலைவியரே பராசக்தி
தாயவளே

ஏட்டுடைத் தலைவியரே எல்லாம்மிகு
வல்லமையே

காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே
பாரும்மா

பால் பழங்கள் வெற்றிலைகள்
பலவகைத் திரவியங்கள்

நானுமக்குத் தாறேனம்மா
நயந்தெனனைக் காரும்மா

காளிமகா தேவியரே காசினிக்கு
வித்தவளே

வித்தை விதைப்பவளே வினைகாக்கும்
காப்பவளே

எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம்
உமதருளே

காசினியில் வேற்றுமையை
கணபொழுதே மாற்றிவிட்டால்

ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏந்துபுகழ்
தேவியளே

காப்பெனக்குப் போட்டுவிட்டால்
கல்மனது இளகிவிடும்

ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு
மிகுந்துவரும்

தொடர்ந்து அணிவோர்க்கு
தொட்டதெல்லாம் ஜெயமாகும்

இசைந்து அணிவோர்க்கு
நினைத்ததெல்லாம் ஈடேறும்

நம்பி அணிவோர்க்கு நல்லதெல்லாம்
பெருகிவரும்

நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே
இணைந்துவரும்

சந்தனச் சாந்தவளே சங்கரியே
சாந்தினியே

குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே
கௌரியம்மா

காப்புக் கட்டிவிட்டுக் கடமை
முடிந்ததென்று

ஏப்பம் மிகவிட்டு என்றுமே
இருந்தறியேன்

நாளும் பொழுதிலெல்லாம்
நறுங்காப்புக் கட்டதனில்

பூவும் நீருமிட்டுப் போற்றி
வணங்கிடுவேன்

காலைப் பொழுதெழுந்து காப்பதனில்
விழித்திடுவேன்

ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக்
காணுகின்றேன்

காப்பெனக்குக் கையிலுண்டு
கடமைகளைச் செய்திடுவேன்

ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோற்
கனன்றிடுவேன்

தீமைச் செயலெதுவும் தெரியாது
செய்கையிலே

காப்புக் கையிலிருந்து கண்திறந்து
காட்டுமடி

சொல்லற் கரிதான சோதிமிகு
காப்பதனை

இருபது நாள்வரையில் இசைவோடு
விரதமிரு

பக்தி மனதுடனே பரவி யணிவோர்க்கு
சித்தியெல்லாந்தருவாள் சீர்பெருகு கௌரியவள்

முத்திக்கு வழியுமுண்டு முக்கால
உணர்வுமுண்டு

எச்சகத்தி லோர்களெல்லாம்
ஏற்றியெமைப் போற்றிடுவர்

சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி
வந்திடவே

அச்சக்தி எல்லாம் அருள்வாள் கௌரியவள்

**கௌரிக் காப்பதனைக் காலம் தவறாமல்**

**முறையாய் அணிந்துவர முன்வினைகள் நீங்கிவர**

**ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர**

**தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே**


**காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்**

ஓம் சக்தி ஓம்

திருச்சிற்றம்பலம்

## முழுதும் உண்மை


ஒரு பொல்லாப்புமில்லை



எப்பவோ முடிந்த காரியம்

## நாமறியோம்

தேவரும் தேடியே தேராத் திருவடியை
ஏவரும் காணவே இவ்வுலகில் - பூவார்
கொழும்புத் துறையில் குருவாகத் தோன்றித்
தொழுதுய்யச் செய்தாய் துணை



உ

சிவமயம்

## திருப்பள்ளியெழுச்சி



அன்னை தந்தையர் மைந்தர்கள் ஒருபால்
அருமைசேர் சோதரர் உறவினர் ஒருபால்
பொன்னணி சிறுமியர் சிறுவர்கள் ஒருபால்
புகழ்பவர் இகழ்பவர் போபவர் ஒருபால்
சென்னியி லஞ்சலி கூப்பினர் ஒருபால்
தேசத்தில் திரிந்து இரப்பவர் ஒருபால்
கண்ணினை கண்டு களிக்கச்செய் பரனே
கடவுளே யென்னுள்ளம் எழுந்தரு ளாயே.

வேதமந் திரஞ்சொல்லும் வேதியர் ஒருபால்
வேள்விகள் செய்ய விழைபவர் ஒருபால்
பூதபௌ திகங்களை ஆய்பவர் ஒருபால்
புகைவண்டி யமைக்கும் பொறிபினர் ஒருபால்
கீதத்தைப் பரவச்செய் யாழினர் ஒருபால்
கேட்டு மகிழ்ந்திருக்கும் கிழவர்கள் ஒருபால்
ஈதனைத்துஞ் செய்துஞ் செய்யாம லிருக்கும்
இறைவனே யென்னுள்ளம் எழுந்தரு ளாயே.

**சிவயோக சுவாமிகள்**

## நற்சிந்தனை

### எங்கள் குருநாதன்

என்னையெனக் கறிவித்தா னெங்கள்குரு நாதன்
இணையடியென் தலைவைத்தா னெங்கள்குரு நாதன்
அன்னைபிதாக் குருவானான னெங்கள்குரு நாதன்
அவனியெல்லா மாளவைத்தா னெங்கள்குரு நாதன்
முன்னைவினை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
மூவருக்கு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
நன்மைதீமை யறியாதா னெங்கள்குரு நாதன்
நான்தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன். 1

தேகம்நீ யல்லவென்றா னெங்கள்குரு நாதன்
சித்தத்திற் றிகழுகின்றா னெங்கள்குரு நாதன்
மோகத்தை முனியென்றா னெங்கள்குரு நாதன்
முத்திக்கு வித்ததென்றா னெங்கள்குரு நாதன்
வேகத்தைக் கெடுத்தாண்டா னெங்கள்குரு நாதன்
விண்ணும் மண்ணு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
தாகத்தை யாக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
சத்தியத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன். 2

வாசியோகந் தேரென்றா னெங்கள்குரு நாதன்
வகாரநிலை அறியென்றா னெங்கள்குரு நாதன்
காசிதேசம் போவென்றா னெங்கள்குரு நாதன்
கங்குலபக லில்லையென்றா னெங்கள்குரு நாதன்
நாசிநுனி நோக்கென்றா னெங்கள்குரு நாதன்
நடனந்தெ ரியுமென்றா னெங்கள்குரு நாதன்
மாசிலோசை கேட்குமென்றா னெங்கள்குரு நாதன்
மற்றுப்பற்றை நீக்கென்றா னெங்கள்குரு நாதன். 3

இருவழியை அடையென்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம் விளங்குமென்றா னெங்கள்குரு நாதன்
கருவழியைக் கடவென்றா னெங்கள்குரு நாதன்
கட்டுப்படும் மனமென்றா னெங்கள்குரு நாதன்
ஒருவரும றியாரென்றா னெங்கள்குரு நாதன்
ஓங்கார வழியென்றா னெங்கள்குரு நாதன்
நிருமலனா யிருவென்றா னெங்கள்குரு நாதன்
நீயேநா னென்றுசொன்னா னெங்கள்குரு நாதன். 4

திக்குத் திகாந்தமெல்லா மெங்கள் குரு நாதன்
சித்தத்துள் நிற்கவைத்தா னெங்கள்குரு நாதன்
பக்குவமாய்ப் பேணென்றா னெங்கள்குரு நாதன்
பார்ப்பதெல்லாம் நீயென்றா னெங்கள்குரு நாதன்
அக்குமணி யணியென்றா னெங்கள்குரு நாதன்
அஞ்செழுத்தை ஓதென்றா னெங்கள்குரு நாதன்
நெக்குநெக் குருகென்றா னெங்கள்குரு நாதன்
நித்தியன்நீ யென்றுசொன்னா னெங்கள்குரு நாதன். 5

தேடாமல் தேடென்றா னெங்கள்குரு நாதன்
சீவன் சிவனென்றா னெங்கள்குரு நாதன்
நாடாமல் நாடென்றா னெங்கள்குரு நாதன்
நல்லவழிதோன்றுமென்றா னெங்கள்குரு நாதன்
பாடாமற் பாடென்றா னெங்கள்குரு நாதன்
பத்தரினஞ் சேரென்றா னெங்கள்குரு நாதன்

வாடாமல் வழிபடென்றா னெங்கள்குரு நாதன்
வையகத்தில் வாழென்றா னெங்கள்குரு நாதன். 6

தித்திக்கு மொருமொழியா லெங்கள்குரு நாதன்
சின்மயத்தைக் காணவைத்தா னெங்கள்குரு நாதன்
எத்திக்கு மாகிநின்றா னெங்கள்குரு நாதன்
எல்லாம்நீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
வித்தின்றி நாறுசெய்வா னெங்கள்குரு நாதன்
விண்ணவரு மறியவொண்ணா னெங்கள்குரு நாதன்
தத்துவா தீதனானா னெங்கள்குரு நாதன்
சகலசம் பத்துந்தந்தா னெங்கள்குரு நாதன். 7

ஆதியந்த மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
அதுவேநீ யென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சோதிமய மென்றுசொன்னா னெங்கள்குரு நாதன்
சுட்டிறந்து நில்லென்றா னெங்கள்குரு நாதன்
சாதி சமயமில்லா னெங்கள்குரு நாதன்
தானாய் விளங்குகின்றா னெங்கள்குரு நாதன்
வாதியருங் காணவொண்ணா னெங்கள்குரு நாதன்
வாக்கிறந்த இன்பந்தந்தா னெங்கள்குரு நாதன். 8

முச்சந்திக் குப்பையிலே எங்கள்குரு நாதன்
முடக்கிக் கிடந்திடென்றா னெங்கள்குரு நாதன்
அச்சமொடு கோபமில்லா னெங்கள்குரு நாதன்
ஆணவத்தை நீக்கிவிட்டா னெங்கள்குரு நாதன்
பச்சைப் புரவியிலே எங்கள்குரு நாதன்
பாங்காக ஏறென்றா னெங்கள்குரு நாதன்
தச்சன்கட்டா வீட்டிலே எங்கள்குரு நாதன்
தாவுபரி கட்டென்றா னெங்கள்குரு நாதன். 9

நாமேநா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
நமக்குக்குறை வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
போமேபோம் வினையென்றா னெங்கள்குரு நாதன்
போக்கவர வில்லையென்றா னெங்கள்குரு நாதன்
தாமேதா மென்றுரைத்தா னெங்கள்குரு நாதன்
சங்கற்ப மில்லையென்றா னெங்கள்குரு நாதன்
ஓமென் றுறுதிதந்தா னெங்கள்குரு நாதன்
ஊமையெழுத் தறியென்றா னெங்கள்குரு நாதன். 10

# நல்லூரான் திருவடி

நல்லூரான் திருவடியை
நான்நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனெடி - கிளியே
இரவுபகல் காணேனெடி 1

ஆன்மா அழியாதென்று
அன்றெனக்குச் சொன்னமொழி
நான்மறந்து போவேனோடி - கிளியே
நல்லூரான் தஞ்சமெடி 2

தேவர் சிறைமீட்ட
செல்வன் திருவடிகள்
காவல் எனக்காமெடி - கிளியே
கவலையெல்லாம் போகுமெடி 3

எத்தொழிலைச் செய்தாலென்
ஏதவத்தைப் பட்டாலென்
கர்த்தன் திருவடிகள் - கிளியே
காவல் அறிந்திடெடி 4

பஞ்சம்படை வந்தாலும்
பாரெல்லாம் வெந்தாலும்
அஞ்சுவமோ நாங்களெடி - கிளியே
ஆறுமுகன் தஞ்சமெடி 5

பரிதிகாயில் வாடாது
பவனம்வீசில் வீழாது
பரவைசூழில் ஆழாதெடி - கிளியே
படைகள் மோதில் மாயாதெடி 6

அந்தமாதி இல்லாத
ஆன்மாவே நாங்களென்று
சிந்தைதந்த செல்வனெடி - கிளியே
சீரார்நல்லூ ராசானெடி 7

வந்ததிலும் போனதிலும்
மனதைவை யாதேயென
விந்தையுடன் சொன்னானெடி - கிளியே
விளங்குநல்லூர் வாசனெடி 8

சாதனை செய்தபேர்கள்
சாகார் உலகிலெனக்
காதலுடன் சொன்னானெடி - கிளியே
கலங்காத வீரனெடி 9

சுவாமி யோகநாதன்
சொன்னதிருப் பாடல்பத்தம்
பூமியிற் சொன்னாலெடி - கிளியே
பொல்லாங்கு தீருமெடி 10

## அத்துவிதப் பொருள் காப்பாம்

அத்துவி தப்பொருள் காப்பாம் - எனக்
கடியார்க ளென்றென்றுங் காப்பாம்
சித்தருந் தேவருங் காப்பாம் - என்றன்
சித்தத் திலங்குந் திருவருள் காப்பாம் (அத்து) 1

அட்ட வசுக்களுங் காப்பாம் - எனக்
கானந்த மான பராபரன் காப்பாம்
எட்டுத் திசைகளுங் காப்பாம் - எனக்
கெங்கும் நிறைந்த சிவசக்தி காப்பாம் (அத்து) 2

பிராண னபானனுங் காப்பாம் - என்னைப்
பிரியா திருக்கும் பிரணவங் காப்பாம்
அராவணி வேணியன் காப்பாம் - எனக்
கருளை யளிக்குங் குருபரன் காப்பாம் (அத்து) 3

பஞ்சப் புலன்களுங் காப்பாம் - என்னைப்
பரவு மடியவ ரனுதினங் காப்பாம்
குஞ்சர முகத்தவன் காப்பாம் - நல்ல
குழந்தை வடிவேலன் என்றென்றுங் காப்பாம் (அத்து) 4

சந்திர சூரியர் காப்பாம் - எங்குந்
தங்கு முயிர்க ளனைத்துமென் காப்பாம்
மந்திரந் தந்திரங் காப்பாம் - நான்கு
மறைகள் சிவாகமம் மாநிலங் காப்பாம் (அத்து) 5

## எல்லாஞ்சிவமே

அப்பனும் அம்மையுஞ் சிவமே அரிய சகோதரருஞ் சிவமே
ஒப்பில் மனைவியுஞ் சிவமே ஓதரும் மைந்தரும் சிவமே
செப்பில் அரசருஞ் சிவமே தேவாதி தேவருஞ் சிவமே
இப்புவி யெல்லாஞ் சிவமே என்னை யாண்டதுஞ் சிவமே

## மங்களம் ஜெய மங்களம் - 1

அப்பனுக்கும் அம்மைக்கும் மங்களம்
அத்துவித வஸ்துவுக்கு மங்களம்
ஒப்பில்குரு நாதனுக்கு மங்களம்
உத்தம பத்தருக்கு மங்களம்
முப்பொழுதுந் தொழுவார்க்கு மங்களம்
மூவாசை வென்றவர்க்கு மங்களம்
முப்பத்து முக்கோடி தேவர்க்கும் மங்களம்
முனிவர்க்கும் இருடிகட்கும் மங்களம்
தன்னைத்தன்னா லறிந்தவர்க்கு மங்களம்
ஐயமிட் டுண்பவர்க்கு மங்களம்
ஐயமில்லாச் சாதுகட்கு மங்களம்
ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்
சீகாழித் தேவருக்கு மங்களம்
திருநாவுக் கரசருக்கு மங்களம்
சீர்பெருகு சுந்தரர்க்கு மங்களம்
திவ்விய மாணிக்கர்க்கு மங்களம்
எங்குந்தங்கும் உயிர்களுக்கு மங்களம்

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

## மங்களம் ஜெய மங்களம் - 2

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

ஆதியந்த மில்லா அப்பனுக்கு மங்களம்
சோதிவடி வாயுள்ள சுவாமிக்கு மங்களம் 1

ஆன்மா நித்தியமென்ற ஆன்றோர்க்கு மங்களம்
தேன்போ லுருசிக்குஞ் சிவனார்க்கு மங்களம் 2

காண்பதெல்லாங் கடவுளாய்க் காண்பார்க்கு மங்களம்
நாண்மல ரெடுத்துப்பூசை பண்ணுவோர்க்கு மங்களம் 3

பொறிவழிபோ யலையாத புண்ணியர்க்கு மங்களம்
நெறிவழியே செல்லுகின்ற நிருபருக்கு மங்களம் 4

நாமறியோ மென்றுசொல்லும் நாதனுக்கு மங்களம்
உண்மை முழுதுமென்ற வுத்தமர்க்கு மங்களம் 5

தன்னைத் தன்னாலறிந்த தாபதர்க்கு மங்களம்
அன்னைபிதாக் குருவான அப்பனுக்கு மங்களம் 6

மண்ணைப்பெண்ணை மதியாத மாதவர்க்கு மங்களம்
வண்ணைநகர் வாழும்வைத் தீசனுக்கு மங்களம் 7

திண்ணனென்ற பேர்கொண்ட அப்பனுக்கு மங்களம்
சண்முக நாதனுக்குஞ் சங்கரற்கும் மங்களம் 8

விண்ணில்விளங்குஞ் சூரிய சந்திரர்க்கும் மங்களம்
எண்ணிலடங் காவுயிர்கள் அத்தனைக்கும் மங்களம் 9

நித்தியகர்மந் தவறாத நின்மலர்க்கு மங்களம்
பத்துப்பாட்டும் படிப்போர்க்குங் கேட்போர்க்கும் மங்களம் 10

மங்களம் ஜெய மங்களம்
மங்களம் ஜெய மங்களம்

# நவக்கிரக வழிபாடு

## சூரியன்

சீலமாய் வாழ சீரருள் புரியும்
ஞாலம் புகழும் ஞாயிறே போற்றி
சூரியா போற்றி சுந்தரா போற்றி
வீரியா போற்றி வினைகள் களைவாய்

## சந்திரன்

எங்கள் குறைகளெல்லாத் தீர்க்கும்
திங்களே போற்றி திருவருள் தருவாய்
சந்திரா போற்றி திருவருள் தருவாய்
சங்கடந் தீர்ப்பாய் சதுரா போற்றி

## செவ்வாய்

சிறப்புறு மணியே செவ்வாய் தேவே
குறை விலா அருள்வாய் குணமுடன் வாழ
மங்களச் செவ்வாய் மலரடி போற்றி
அங்கா ரகனே அவதிகள் நீக்கு

## புதன்

இதமுற வாழ இன்னல்கள் நீக்கு
புதபக வானே பொன்னடி போற்றி
பதந்தந் தருள்வாய் பண்ணொலி யானே
உதவியே அருளும் உத்தமா போற்றி

## வியாழன்

குண மிகு வியாழக் குருபக வானே
மணமுள வாழ்வு மகிழ்வுடன் அருள்வாய்
பரகஸ்பதி வியாழப்பா குரு நேசா
கிரக தோஷமின்றிக் கடாஷித் அருள்வாய்

## வெள்ளி

சுக்ர மூர்த்தி சுகமிகயீ வாய்
வக்ர மின்றி வரமிகத் தருள்வாய்
வெள்ளி சுக்கிர வித்தக வேந்தே
அள்ளிக் கொடுப்பாய் அடியார்க்கருளே

## சனீஸ்வரன்

சங்கடந் தீர்க்கும் சனிபக வானே
மங்களம் பொங்க மனம் வைத்தருள்வாய்
சச்சர வின்றி சாகா நெறியில்
இச் செகம் வாழ இன்னருள் தா தா

## இராகு

அரவெனும் ராகு அய்யனே போற்றி
கரவா அருள்வாய் கஷ்டங்கள் நீக்கி
ஆக அருள்புரி அனைத்திலும் வெற்றி
ராகுக் கனியே ரம்மியா போற்றி

## கேது

கேதுத் தேவே கீர்த்தித் திருவே
பாதம் போற்றி பாவம் தீர்ப்பாய்
வாதம் வம்பு வழக்குகளின்றி
கேதுத்தேவே கேண்மையாய் ரக்ஷி

அமரர்

# உயர். திரு. செல்லையா தில்லைநாதன்

## அகில இலங்கை சமாதான நீதவான்

## அவர்களின்

# வாழ்க்கை வரலாறு

ஈழ மணித் திருநாட்டின் வடபால் சப்த தீவுகளில் ஒன்றான சைவமும் தமிழும் தலைக் கூடி வாழும் புங்கை நகர் என்னும் புங்குடுதீவில் தக்கோர் புகழும் தனித்துவம் பெற்ற பன்னிரெண்டாம் வட்டாரத்தில் அமரர். திரு. வைத்தியநாதர் செல்லையா, அமரர். திருமதி. செல்லையா செல்லம்மா தம்பதிகளின் அருந்தவப்புதல்வருள் தலைமகனாம் அமரர். திரு. செல்லையா தில்லைநாதன் 1929.09.09 இல் பிறந்தார்.

புன்னகை தவழும் முகமும் வசீகரமான அழகிய தோற்றமும் கள்ளம் கபடம் அற்ற இனிய பேச்சும் பார்ப்பவர் மனதைப் பரவசப்படுத்தும் பான்மை நிறைந்த தில்லைநாதன் அவர்கள் தூய்மையான உள்ளம் படைத்தவர். இவர் புங்குடுதீவு பதினொராம் வட்டாரத்தில் அமரர். திரு. சின்னதம்பி நாகலிங்கம் (மாதர்), அமரர். திருமதி. நாகலிங்கம் செல்லமுத்துவின் கடைக்குட்டி மகளான அழகும் குடும்பப் பொறுப்பும் திடதைரியமும் உள்ள கற்பகத்தை 1955 ஆம் ஆண்டு திருமணம் புரிந்து கொண்டார். இதன் பயனாக புவேந்திரன், தியாகேஸ்வரி, திலகவதி, ஞானேந்திரன், தரணீஸ்வரி, விமலேஸ்வரி, யோகேஸ்வரி, லோகேந்திரன், சியாமளா ஆகிய நவமணிகளை பெற்றெடுத்தார். காக்கைக்கு தன் குஞ்சு பொன் குஞ்சு போல அவர்களை சீராட்டி, பாராட்டி, தலாட்டி நல்வழிப்படுத்தினார்.

இவர் இளமை கல்வியை புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தில் பயின்றார். இவர் கல்வியைத் தொடர்ந்து மேற்கொள்ளா விட்டாலும் தனது பிள்ளைகளை புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம், யாழ். ஸ்கந்த வரோதயக் கல்லூரி, யாழ். வேம்படி மகளீர் கல்லூரி, யாழ். இந்து மகளீர் கல்லூரி, யாழ். வைத்தீஸ்வரா கல்லூரி, நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி ஆகிய பிரபலமான பாடசாலைகளில் கல்வி பயில வைத்து கல்வியில் முன்னேற வழிவகுத்தார். பின் பிள்ளைகள் அனைவருக்கும் திறம்பட திருமணம் நடாத்தி வெளிநாடுகளில்

வாழவும் வழி செய்து உள்ளார். பிள்ளைகளுக்கு பிள்ளைகள், பேரப்பிள்ளைகளும் உள்ளனர். அவர்களும் கல்வியில் மேம்பட வழிகாட்டினார். தன் உடன் பிறப்புகளான அமரர்களான சுபத்திரை, வர்ணமாணிக்கம், ஆறுமுகம் மற்றும் கந்தசாமி ஆகியோரை அவர்கள் குடும்ப சகிதம் அன்போடும் பண்போடும் பாசத்தோடும் அரவணைத்து வாழ்ந்து வந்ததார்.

நாட்டில் யுத்த நிலைமை காணப்பட்ட வேளை தனது மகள் யோகேஸ்வரியை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்திற்கு தென் பகுதியல் இருந்து வட பகுதிக்கு போக்குவரத்து கடினமாக இருந்த வேளையிலும் அழைத்துச் சென்று அவரது பல்கலைக்கழகக் கல்வி முடியும் வரையில் தன்னால் இயன்றளவு உதவிகளைச் செய்தார். இவர் இந்தியா, சிங்கப்பூர், பங்கொக், சுவிஸ், ஜெர்மனி, பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்குச் சென்றுள்ளார். அதிலும் தனது கடைசி மகனான லோகேந்திரனின் கலாநிதிப் பட்டமளிப்பு விழாவிற்காக சிங்கப்பூர் சென்ற வேளை அந் நிகழ்வுக்கு பல நாடுகளில் இருந்து வந்திருந்த மாணவர்கள் மற்றும் அவர்களது பெற்றோர், உறவினர்கள், மற்றும் விரிவுரையாளர்கள் முன்னிலையில் தழிழரது கலாச்சார உடையில் தனது மனைவி சகிதம் தோன்றி அனைவரது கவனத்தையும் தன் மீது திருப்பியதும் குறிப்பிடத்தக்கது.

வாணிகம் ஓம்பி வளர்பொருள் ஈட்டிய மாண்புடை நம்பியாகிய இவர் ஏழைகளுக்கு சகாயனாய் எவர்க்கும் இனியனாய் தீவக மக்களின் தந்தையாய் வாழ்ந்து வந்தார். அழகுக்கு அழகு செய்வது போல் தூய வெள்ளை உடையுடன் என்றென்றும் காட்சி தருவார். தன் வாழ் நாளில் பெரும் பகுதியை செலவு செய்து சிங்களம்,முஸ்லிம் என சகல இனத்தவரினதும் நம்பிக்கையையும் நன் மதிப்பையும் பெற்றார். தென்னிலங்கையில் வியாபார நிமித்தம் சென்று தன் திறமையால் அங்கும் வியாபாரத்தில் முதன்மையாக திகழ்ந்தார். ஆதன் விளைவாக சகோதர மொழியான சிங்கள மொழியிலும் நல்ல தேர்ச்சி பெற்றிருந்தார்.

அவரது வியாபார நிலையங்களான நாதன் டெக்ஸ்டைல்,செல்வம் டெக்ஸ்டைல், மற்றும் உதயகரி வாணி விலாஸ் ஹோட்டல் போன்றவற்றை நடாத்தி வந்தார். நமது உறவுகளுக்கு முன் எடுத்துக் காட்டாக இருந்தார். எம் இனத்தவருக்கு இலங்கையின் தென் பகுதியில் தொழில் செய்வது எப்படி என்று சொல்லிக் கொடுத்தும் தொழிலும் தேடிக்கொடுத்தார். அவர்கள் அதை என்றும் மறக்க மாட்டார்கள்.

1956 ஆம் ஆண்டு நாதன் டெக்ஸ்டைல் நடத்திய வேளை தொழில் நிமித்தம் மீரிகம பகுதிக்கு சென்ற வேளை கலவரத்தில் கடுமையாகப் பாதிக்கப்பட்டு வைத்தியசாலையில் இருந்த போது பலருக்கு உயிரைப் பறிக்க மருந்து கொடுத்த வேளை ஒரு தாதிப் பெண் தனக்கு தனிப்பட்டமுறையில் அந்த விடையத்தைத் தெரிவித்து மற்றவர்கள் வரும் பொழுது என்னை இறந்தவர் போல நடிக்கச் சொல்லி தான் தரும் மருந்துகளை மட்டும் குடிக்குமாறு கூறி தன்னைக் கடவுள் போல் காப்பாற்றியதாக அடிக்கடி கூறி அந்த தாதிப் பெண்ணின் சேவையை எண்ணி பெருமைப்படுவார். தனக்கு அது ஒரு அம்மன் தெய்வம் ஒரு தாதியாக நின்று அருள் புரிந்ததாக அடிக்கடி சொல்லுவார். கம்பஹா மாவட்டத்தில் நீர்கொழும்பில் இவர் செய்து வந்த தொழில் ஸ்தாபனங்கள் 1977,1983 (கறுப்பு யூலை) ஆம் ஆண்டுகளில் நடந்த கலவரங்களினால் பாதிக்கப்பட்டிருந்தாலும் நீர்கொழும்பின் மீது இருந்த பற்றினாலும் தன் சக தோழர்களான அமரர்.திரு.பாலா சுப்பையா முதலாளி மற்றும் வேறு ஸ்தாபன முதலாளிகள், நண்பர்களின் ஆதரவினாலும் யாழ்ப்பாண இடம் பெயர்வு காரணமாக குடும்பத்துடன் திரும்பவும் நீர்கொழும்புக்கு வந்து வசித்து வந்தார்.

தன் சக தோழனான பாலா சுப்பையா முதலாளியுடன் சேர்ந்து நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி, நீர்கொழும்பு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் போன்றவற்றை கட்டியெழுப்ப விஜயரத்தினம் ஐயா மற்றும் அம்மா அவர்களுடன் சேர்ந்து அரும்பாடுபட்டார்.

நீர்கொழும்பிலுள்ள ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், ஸ்ரீ காளி அம்மன் தேவஸ்தானம், ஸ்ரீ கதிர்வேலாயுத முத்துமாரியம்மன் தேவஸ்தானம் ஆகிய ஆலயங்களுக்கு அன்றும் இன்றும் அரும் பெரும் பணியாற்றி வந்தது யாவரும் அறிந்ததே.

தீவக மக்களுக்காக தன்னையே அர்பணித்தவர். அகில இலங்கை சமாதான நீதவானாக அக்காலத்திலேயே சேவையாற்றினார். புங்குடுதீவு - நயினாதீவு பல நோக்குக் கூட்டுறவுச்சங்கத் தலைவராக இருந்தார். புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம், பெற்றோர் அபிவிருத்திச்சங்கம்,கிராம அபிவிருத்திச்சங்கம்,மக்கள் குழுத்தலைவர்,இணக்கசபைத் தலைவர் போன்ற பதவிகளை பொறுப்பேற்று தன் கடமைகளை செவ்வனே நடாத்தி வந்தார். தொழில் நிமித்தம் நீர்கொழும்பு சென்றாலும் பிறந்த மண்ணிலேயே பற்றுள்ளவராகத் திகழ்ந்தார். 1980 ஆம் ஆண்டு இவர் ஐக்கிய

தேசியக் கட்சி சார்பாக மாகாணசபைத் தேர்தலில் போட்டியிட்டு வட்டுக் கோட்டை தியாகராசாவுடனும் யோகேந்திரா துரைசுவாமியுடனும் நெருங்கிய நண்பரானார். இத் தேர்தலை முன்னிட்டு முக்கிய அரசியல் தலைவர்களான முன்னாள் இலங்கை ஜனாதிபதி மாண்புமிகு.திரு. ஜே.ஆர்.ஜெயவர்த்தன, அப்போதைய பிரதமர் மாண்புமிகு. திரு. ஆர்.பிரேமதாஸ,மற்றும் அப்போதைய பாராளுமன்ற உறுப்பினரான தொண்டமான் அவர்களை தன் சொந்த மண்ணுக்கு அழைத்து உபசரித்து சொந்த மண்ணுக்குத் தேவையான பலதரப்பட்ட திட்டங்களை அவர்களிடம் கையளித்தார். தனது சொந்தப் பணத்திலே பல தொண்டுகளை தனது ஊருக்குச் செய்து வந்தார். இவ்வளவும் நடாத்த அவரது மனைவி கற்பகத்தின் அன்பும் பண்பும் பாசமும் கிடைத்ததை அடிக்கடிச் சொல்லி மகிழ்வார்.

புங்குடுதீவு கிழக்கு தல்லையபற்று சங்கர மூர்த்தி முருக மூர்த்தி ஆலயத்திற்கு தலைவராக இருந்து ஆலயத்தை செவ்வனே திறம்பட நடாத்தி வந்தார். கந்த ஷஷ்டி உபயத்தில் ஆறாம் நாள் சூரன் போர் திருவிழாவை இவர் வருடா வருடம் செய்து வருகிறார். இந்தக் கோயிலுக்கு சூரன் வாகனம் செய்து கொடுக்க வேண்டும் என்று எண்ணிய வேளை நாட்டின் யுத்த நிலைமை காரணமாக அங்கு செய்ய முடியாதுள்ளதே என்று எண்ணி மனம் வருந்தி அவர் அதை நீர்கொழும்பு கதிர்வேலாயுத முத்துமாரியம்மன் தேவஸ்தானம் ஆலயத்திற்கு செய்து கொடுத்தார். பிறகு நாட்டின் நிலைமை சரிவர தன் சொந்த மண்ணுக்குச் சென்று எண்ணியது போலவே அந்தக் கோயிலுக்கு சூரன்,கடா வாகனத்தைச் செய்து சூரன் போரை நடாத்தி வருகிறார்.

யோகசுவாமிகளின் சிவத்தொண்டர் சபையினரால் யோகசுவாமிகள் குரு பூசைக்கு 1993 ஆம் ஆண்டில் இணைத்துக் கொள்ளப்பட்டார். அதன் நிமித்தம் அங்கு சென்று குரு பூசைகளில் கலந்து கொள்வார். இடம் பெயர்ந்து நீர்கொழும்பில் வாழும் சமயம் அவர் யோகசுவாமிகளின் குருபூசை தினமான பங்குனி மாதம் வரும் ஆயிலிய நட்சத்திரத்தன்று தனது நீர்கொழும்பு இல்லத்தில் குருபூசை செய்து அன்னதானமும் வழங்கி வந்தார். மாதம் மாதம் வரும் யோக சுவாமிகளின் குருபூசை நட்சத்திரமான ஆயிலிய நட்சத்திரத்தில் நீர்கொழும்பு சைவத் திருமுறை அடியார் சங்கமத்தின் அடியார்களுடன் சேர்ந்து ஆயிலிய பூசையைச் செய்து வந்தார்.

இவர் தாய்க்குத் தலைமகனாய் மனைவிக்கு நல்ல ஆருயிர் கணவனாய் பிள்ளைகளுக்கு நல்ல தந்தையாய் மருமக்களுக்கு நல்ல மாமனாய் பேரப்பிள்ளைகளுக்கு பாசமுள்ள தாத்தாவாய் பூட்டனுக்கு அன்புப் பூட்டனாய் வாழ்ந்து தனது இறுதிக் காலத்தை தனது சொந்த மண்ணில் வாழ ஆசைப்பட்டு தனது சொந்த இடமான புங்குடுதீவு 11 ஆம் வட்டாரத்தில் உள்ள தனது இல்லத்தில் வாழ ஆசைப்பட்டார். அதன் நிமித்தம் அவர் பிள்ளைகள் அவர் இல்லத்தைச் சீர் செய்து அவரது ஆசையை நிறைவேற்றினர். அவ் ஆசையின் நிமித்தம் இறுதி மூச்சை சொந்த மண்ணிலே விட வேண்டும் என்று எண்ணியிருந்தார். இறைவனும் அவரது ஆசைக்கு இணங்கினார் போலும். இதன் பெருமை இவரைச் சேர்ந்தது.

இவர் முருகன் மீது கொண்ட அன்பினால் அடிக்கடி நல்லூர், செல்வச் சந்நிதி முருகன் கோயில்களுக்கும் அதன் திருவிழாக்காலங்களிலும் சென்று வருவார். அவ்வாறு இலங்கையின் வடக்கு பக்கம் செல்கையில் தன் ஊர் முருகன் கோயிலுக்கும் சென்று தரிசிக்க மறக்க மாட்டார். அதன் பலனாக கார்த்திகைத் தீபம் முருகனுக்கான தீபத் திருவிழா அன்று அவரது பேரனார் கொணர்ந்த தல்லையபற்று சங்கர மூர்த்தி முருக மூர்த்தி கோயிலின் பிரசாதம் அவர் இறையடி சேர முன்னர் அவருக்குக்கிட்டியது.

மண்ணில் பிறந்தவர்கள் அனைவரும் வாழ்வது எப்படி என்றும் இறப்பது எப்படி என்றும் தெளிவு படுத்தி தன் உயிரை நீர்த்த பெருமையுடன் கார்த்திகைத் தீபத் திருநாளான கார்த்திகைப் பௌர்ணமித் திதி அன்று இறைவனடி சேர்ந்தார். கார்த்திகைத் தீபத் திருநாள் அன்று நல்லூரில் இருந்து நயினாதீவுக்கு அவரது இல்லத்தின் பாதை வழியாக பாதயாத்திரையாக அடியார்கள் பெரிய உருவிலான அம்மனுடன் இருக்கும் சிவலிங்கத்தை பஜனை பாடிக்கொண்டு எடுத்துச் செல்கையில் அவரது உயிர் அவரை விட்டு அகன்று சிவனுடன் சங்கமித்தது, ஒரு அற்புதமே. ஏன் என்றால் அவர் ஆசைபட்ட படி சக்கர நாற்காலியில் இருந்தாலும் கீரிமலை சென்று தீர்த்தமாடினார். பின்னர் நயினாதீவுக்கு போக வேண்டும் என்று எண்ணியிருந்த வேளை ஈசனே வந்து அவரை அங்கு அழைத்துச் சென்றுவிட்டார்.அவரது ஆத்மா சாந்தி பெற இறைவனை பிரார்த்திப்போம் ஆக.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

உ
சிவமயம்

# ஆன்மா இறையடி அமர்கவே

கல்லூரி கோயில் கலாசார நிறுவனம் என முக்கோணத் திட்டத்தை வகுத்து அதன் வழி நின்று அரும்பணியாற்றியவர் தான் அமரர் திரு.செல்லையா தில்லைநாதன் எனும் சமாதான நீதவானவார்.

ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபையின் உறுப்பினராக இருந்து கோயில் திருப்பணியாற்றியதோடு தேவார திருவாசகங்களைப் பாடுவதிலும் திருவாசகம் முற்றோதுவதிலும் சமய குரவர் குருபூஜைகளை நிகழ்த்தி அன்னதானம் வழங்குவதிலும் முன்னின்று உழைத்தவராவார்.


யோகர் சுவாமிகள் வழிநின்று ஆண்டு தோறும் அவர்தம் குருபூஜையை நீர்கொழும்பில் நிகழ்த்திக் காட்டிய சிவ தொண்டராவார்.

சைவத்திருமுறை அடியார் சங்கத்தை நீர்கொழும்பில் நிறுவி அதன்வழி செயற்பட்ட மூத்த உறுப்பினராவார்.

ஆவணி சதுர்த்தி கோயில் கும்பாபிஷேகம் மற்றும் ஏனைய திருப்பணிகளிலும் முன்னின்று பங்களித்தவராவார்.

அன்னாரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திப்போமாக.

**பரிபாலன சபை**
**ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம்**
**நீர்கொழும்பு.**



உ
சிவமயம்
TRUST IN GOD

**நீர்கொழும்பு**

**ஸ்ரீ முத்துமாரி அம்மன் கதிர்வேலாயுத சுவாமி கோயில்**

**මීගමුව ශ්‍රී මුතුමාරිඅම්මන් කදිර්වේලායුද ස්වාමි කෝවිල**

**SREE MUTHUMARIAMMAN KATHIRVELAUTHA SWAMY TEMPLE**

104, Sea Street
Negombo 03/6/ 2011

அமரர் செல்லையா தில்லைநாதன் ஒரு சிறந்த சிவபக்தர். நகரில் பல நல்ல சமய நிகழ்வுகளை நடத்திய பெருந்தகை. எமது ஆலய நிகழ்வுகளில் தவறாது கலந்து சிறப்பிப்பவர். பிரதி அமாவாசை தினத்தன்று “திருவடியார் சங்கமத்தாருடன்” அபிராமி அந்தாதி பாடி திருமுறைகள் ஓதியும், சமயப்பணி செய்த பெரியார். அன்னாரின் பிரிவால் துயருரும் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிக்கும் அதே வேளை அன்னாரின் ஆன்மா சாந்தியடைய அன்னை ஸ்ரீ முத்துமாரியம்மன் பாதங்களைப் பணிந்து வேண்டுகிறோம்.

ஓம் சாந்தி

இப்படிக்கு
நாட்டுக்கோட்டை நகரத்தார்

AN. AR. ST. SP. ராஜேந்திரன் செட்டியார்
ஆலய பிரதம அறங்காவலர்

S. AR. ST. S. D. தியாகராஜன் செட்டியார்
ஆலய அறங்காவலர்

உ
சிவமயம்

# ஸ்ரீ சிங்க மகா காளி அம்பாள் ஆலயம் நீர்கொழும்பு

பாத சாரிகளுக்கு விழுதுகள் பல பாய்ச்சி, கிளைகள் பல ஓய்ச்சி, வானுற ஓங்கி குடை விரித்தாற்போல் நிழற்பரப்பிய ஆலமரம் அடியற்று வீழ்ந்தது போல் ஆன்மீக சிந்தனையாளனாகவும், சமய, மொழிப் பற்றாளனுமாக விளங்கிய செல்லையா தில்லை நாதன் ஐயா அவர்களின் மறைவு கேட்டு நாம் கலங்கி நிற்கின்றோம்.

தில்லை நாதன் ஐயா அவர்கள் பிறந்த ஊராகிய புங்குடுதீவில் வசித்ததை விட நீர்கொழும்பில் வாழ்ந்த காலமே அதிகம். அதே போன்று இல்லத்தில் இருந்ததை விட கோயில்களில் செலவழித்த நேரமே அதிகம். பாடிய ஸ்தோத்திரங்களும் சூடிய பாமாலைகளும், நாடிய கோயில்களும் அதற்கு சான்று பகரும்.

சூடிய பூவும் இட்ட பொட்டும், அணிந்த உருத்திராட்ச மாலையுடன் கோயில் வந்தால் அவரைப் பார்த்து நாங்களும் அவ்வாறே வர வேண்டும் என்று எண்ணத் தோன்றும். பக்தர்களுக்கு பக்திப் பரவசம் சமய சடங்குகளும், கிரியைகளும் அவருக்கு அத்துப்படி. இதனால் இவர் வார்த்தைகளுக்கு வலு இருக்கும் அவரின் சொல்லுக்குக் கட்டுப்பட்டு எல்லோரும் நடப்பர். அதுதான் ஐயா அவர்களின் ஆளுமை.

பூண்ட கொள்கையும், கொண்ட பற்றுருதியும் ஆழ்ந்த ஞானமும், சிவனாடியார் தோற்றமும் எங்கள் மத்தியில் சித்தரை நினைவுபடுத்தும். ஸ்ரீ சிங்கமகாகாளி அம்மன் தேவஸ்தானத்துடன் தன்னை இணைத்துக் கொண்டு அனைத்து காரியங்களிலும் அரும் பணியாற்றியவர்.

இலக்கணத்துக்கு இலக்கியமாக, இலக்கியத்துக்கு இலட்சியமாக வாழ்ந்தவர் தான் அமரர் ஐயா அவர்கள். நம் முன்னோர்கள் வகுத்த நெறிமுறை தவறாது வாழ்ந்து, நம் முன்னோர்கள் அளித்த அரும் செல்வமாம் முக்திக்குரிய ஆன்மீக, சமய பணிகளை செவ்வனே ஆற்றி, மற்றவர்களையும் அவ்வாறே செய்யத் தூண்டி அதில் வெற்றியும் கண்ட ஐயா! நீங்கள் ஒரு பெரு விருட்சம்.

ஆனால் இன்று இப் பெரு விருட்சம் நம் மத்தியில் இல்லை. அவர் ஆற்றிய பணிகள் நம் நெஞ்சங்களில் பெரு விருட்சமாய் விரிந்திருக்கின்றது.

அவரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல ஸ்ரீ சிங்க மகா காளி அம்பாள் அருள் புரிவாளாக.

**தர்மகர்த்தா சபை சார்பாக**
**தலைவர்**
**கு. இராமச்சந்திரன் செட்டியார்**

சிவமயம்



மேன்மைகொள் சைவநீதி



# சைவத் திருமுறை அடியார் சங்கமம்

132, கடற்கரை வீதி, நீர்கொழும்பு.

☎ 031-2238656 / 031-2238256 "அன்பே சிவம்" திகதி.....................

பொன்கொடு தீவு என்று செல்லமாக அழைக்கும் புங்குடுதீவில் நற்பிறப்பெய்தி வாழ்வின் இறுதிக்காலத்தை அதே மண்ணில் விண்ணுலகு எய்தியவர் எங்கள் அன்புக்குரியவர் திரு.செ.தில்லைநாதன் என்ற பெரியவர் ஆவார். எண்பத்தேழு ஆண்டுகள் பூரண வாழ்வு , சகல சௌபாக்கியங்களோடும் வாழ்ந்தவர் JP என்றழைக்கும் இப்புண்ணிய ஆத்மா.

சிவனே தலைவன் என்று போற்றி இயங்கிக் கொண்டு, பதினேழு ஆண்டுகள் கடந்து சென்று கொண்டிருக்கும் எமது நீர்கொழும்பு சைவத் திருமுறை அடியார் சங்கமத்தின் ஆரம்ப கால உறுப்பினர் அமரர்.திரு.செ.தில்லைநாதன் ஆவார். எமது அமைப்பில் உறுப்பினராகும் பொழுது முழுமையான ஒரு ஆன்மீகச் சுடராய் சுடர் விட்டுக் கொண்டிருந்தார். யோகர் சுவாமிகளின் குருபூசையை முதன் முதலாக நீர்கொழும்பில் தனது இல்லத்தில் ஆரம்பித்துத் தொடர்ந்து இன்று வரை சிறப்பாக நடாத்தி வந்தவர் தான் எமது மரியாதைக்கும்,அன்புக்கும் உரியவர். இப்பெரியார் யோகர் சுவாமிகளின் ஐம்பதாவது குரு பூசைத்தினத்தை மிகவும் சிறப்பாகவும்,பெரு விழாவாகவும் நடாத்தி எமது சைவத் திருமுறை அடியார் சங்கமத்திற்கு பெருமை சேர்த்து தந்தவருமாவார். எமது சங்கமத்தில் நடைபெறும் சகல குரு பூசைத்தினங்கள், யோகர் சுவாமிகளின் மாதாந்த ஆயிலிய நற்சிந்தனை, திருவாசக முற்றோதல்கள் அனைத்திலும் முக்கிய பங்காளியாகப் பங்கேற்றார். அன்னாரது பிரிவுத்துயர் எமது அமைப்பிற்கும் அவரது குடும்பத்தினர் அனைவருக்கும் ஈடு செய்ய முடியாததொன்றாகும்.

அன்னாரின் ஆத்மா ஆனந்த நடராஜர், தில்லைக் கூத்தனின் பாதாரவிந்தங்களை சென்றடைய ஆத்மார்த்தமாக வழுத்திப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி... ஓம் சாந்தி... ஓம் சாந்தி...

"நன்றே செய்க அதை இன்றே செய்க"
"எம் கடன் பணி செய்வதே"

Aum

THE SIVATHONDAN SOCIETY LTD, JAFFNA

(Registered under the Societies Ordinance)

*To the Heart that yearns, the Lord draws nigh"*

**சிவதொண்டன் சபை, யாழ்ப்பாணம்**

ஸ்ரீமான் தில்லைநாதன் அவர்கள் யோகசுவாமிகளின் அன்பாளர். சுவாமிகளை அறிந்த நாட்தொட்டு சுவாமிகளின் ஆயிலிய பூசைகளை மாதந் தோறும் நீர்கொழும்பு வாழ் சுவாமிகளின் அன்பர்களையும் இணைத்து வழிபாடாற்றி வந்தவர். வருடாந்த குருபூசையை மிகச் சிறப்பாகச் செய்து வந்தவர்.

யோகசுவாமிகளின் ஐம்பதாண்டுக் குருபூசையை மிக விமரிசையாக நீர்கொழும்பிலே அனுட்டித்தனர். இக்குருபூசைக்கு நடராசப் பெருமானுக்கு அகத்தடிமைத் தொழில் பூண்ட தில்லைவாழந்தணராகிய ஸ்ரீ பரமேஸ்வர தீட்சிதர் நற்சிந்தனைப் பாராயணம் செய்தமை அவருடைய குருபூசை நியமத்தினை மாட்சிமைப் படுத்தியது.

இறுதியாகத் தனது திருவுளக் குறிப்பின் வழியே தம் அகம் புகந்து சுவாமிகளை வழிபட்டு வந்தனர். அடியார் உள்ளக் கமலத்து அணையாதொளிரும் மணிவிளக்காகிய யோகசுவாமிகளும் அன்பரின் உள்ளத் தொளிர்ந்தனர். திருவண்ணாமலையிலே அரும்பெருஞ் சோதி சுடர்விட்டொளிர்ந்த பௌர்ணமி அன்று தம் உள்ளத் தொளிர்ந்த யோகசோதியுடன் உடனுறையும் பாக்கியம் பெற்றனர். மரணம் வரப்பிரசாதம்.

**சிவதொண்டன் சபையார்**

No. 434, Kankesanthurai Road,
Jaffna,
Sri Lanka.

Tel : +94212222799
E-mail : sivathondanjfn@sltnet.lk
Web : www.sivathondan.org

உ
சிவமயம்

# முன்னாள் தலைவருக்கு ஓர் அஞ்சலியுரை

புங்குடுதீவு கிழக்கு 12ம் வட்டாரத்தைச் சேர்ந்த அமரர் செல்லையா தில்லைநாதன் அவர்களின் மறைவையிட்டு அவர்களின் குடும்பத்தினரின் வேதனையில் நாமும் பங்கு கொள்கின்றோம்.

அமரர் தில்லைநாதன் ஐயா அவர்கள் தல்லையபற்று முருகன் மேல் அளவு கடந்த பக்தி கொண்டிருந்தார். ஆலயத்திற்கு தேர்த் திருப்பணி செய்த போது முதல் முதல் இவரே நன்கொடை வழங்கி ஆரம்பித்து வைத்தார். அத்துடன் கந்த சஷ்டி ஆறாம் பூசையை சூரன் போர் திருவிழாவை இவருடைய குடும்பமே சிறப்பாக செய்து வருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். அத்துடன் முருகப் பெருமானுக்கு சூரனும், அத்துடன் ஆட்டுக்கடா வாகனமும் செய்து தந்துள்ளார். இவ்வாறு திருப்பணிகளிலே ஒரு சிறந்த திருப்பணியாளனாக திகழ்ந்தார். எப்போதும் ஆலயத்தினுடைய வளர்ச்சி பற்றி பேசிய வண்ணமே இருப்பார்.

அத்துடன் ஆலயம் சம்பந்தப்பட்ட விடயங்களை ஆன்மீகத் தோடும் சமூக வளர்ச்சியிலும் ஈடுபாடு காட்டினார். இவருடைய தலைமையிலே புங்குடுதீவு நயினாதீவு ப. நோ. கூ. சங்கம், புங்குடுதீவு கிராம அபிவிருத்திச் சங்கம், புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலய பெற்றோர் அபிவிருத்திச் சங்கம் என பல அமைப்புகளுக்கு தலைமைப் பொறுப்பேற்று சிறப்பாக நடாத்தி இருந்தார். அத்துடன் நீர்கொழும்பு சைவத்திருமுறை அடியார் சங்கமம் அமைப்பிலும் செயற்பட்டு வந்தார்.

மண்பற்று மிக்க பண்பாளன், நீர்கொழும்பில் வசித்து வந்த போதும் தனது உயிர் தனது மண்ணிலே பிரிய வேண்டும் என்று வந்து சொந்த மண்ணிலே சாவை வரவேற்ற மண்ணின் மைந்தன் என்றால் ஜே. பி. தில்லைநாதன் ஐயாவே ஆவார்.

இவருடைய சேவைகளையும், செயற்பாடுகளையும் இன்னும் கூறிக்கொண்டே போகலாம்.

இவ் உத்தம மனிதனின் பிரிவால் தவிக்கும் அவருடைய குடும்பத்தினருக்கு அனுதாபம் கூறுவதோடு, அவருடைய ஆத்மா தல்லைப்பற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி வேல்ப் பெருமானின் பாதார விந்தங்களில் சரணாகதி அடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**ஆலய நிர்வாக சபையினர்**
**புங்குடுதீவு தல்லையபற்று சங்கரமூர்த்தி**
**முருகமூர்த்தி வேதஸ்தானம்**

**12ம் வட்டாரம்**
**புங்குடுதீவு**

உ
சிவமயம்

# சமூகத் தொண்டனுக்கு ஓர் கண்ணீர் அஞ்சலி

புங்குடுதீவு கிழக்கு 12ம் வட்டாரத்தை சேர்ந்த அமரர் செல்லையா தில்லைநாதன் அவர்களின் மறைவையொட்டி எமது கண்ணீர் அஞ்சலியை அன்னாரின் குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்கின்றோம்.

இத்தியடிம்புலம் நாச்சிமார் ஆலயத்தின் பக்தனாகவும், திருப்பணியாளனாகவும் செயற்பட்ட திரு. தில்லைநாதன் ஐயா அவர்கள் ஒரு சமூகத் தொண்டனாகவும், ஏழை எளியவர்களுக்கு உதவி செய்யும் ஓர் தர்மவானாகவும் செயற்பட்டார். அவருடைய வீட்டிற்கு செல்பவர்கள் எவரையும் உணவருந்தித் தான் செல்ல வேண்டும் என அன்புக் கட்டளை இட்டு அவர்களுக்கு விருந்துபசாரம் செய்தே அனுப்பி வைப்பார்.

மிகவும் சிறந்த ஓர் பண்பாளன், பல்துறை ஆளுமை கொண்ட மண்பற்றாளன். ஜே. பி. தில்லைநாதன் ஐயா என்றால் தெரியாதவர்கள் எவருமே இல்லை.

இவருடைய ஆத்மா சாந்தயடைய இத்தியடிப்புலம் நாச்சிமார் அன்னையைப் பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**ஆலய நிர்வாக சபையினர்**
**இத்தியடிப்புலம் நாச்சிமார் தேவஸ்தானம்**

**12ம் வட்டாரம்,**
**புங்குடுதீவு**

## மண்ணை மறக்காத மனிதர்
## ஜே. பி. தில்லைநாதன் ஐயா

புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தில் வசித்த அண்மையில் அமரத்துவம் அடைந்த ஜேபி தில்லைநாதன் ஐயாவை எமதூரில் அறியாதவர்கள் இல்லை என்றே சொல்லலாம். ஐயா அவர்கள் நீர்கொழும்பில் வர்த்தகரீதியாக தொடர்பு கொண்டாலும் அங்கு அவர் அரசியல் ரீதியில் தொடர்புகளை ஏற்படுத்தி எமதூர் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தவர். சிறந்த ஊர்ப்பற்றுதி கொண்ட இவர் இடப்பெயர்வுக்கு முன் ஊரிலே வசித்து வந்தவர். வெள்ளைவேட்டி, கண்ணாடி உடைபாவனை எமது கலாச்சார விழுமியங்களை நேசித்து வாழ்ந்த உத்தமபுருசர். இடப்பெயர்வின் பின் நீர்கொழும்பில் வசித்தாலும் மண் பற்று அவரை விடவில்லை. தீராத நோயினால் பீடித்து காலனை எதிர்பார்த்து இருந்த வேளையில் ஊருக்கு வந்து இங்கேயே இறக்க வேண்டும் என விரும்பியவர். இங்கு வந்து ஆறு மாதங்களுக்கு மேலாக வாழ்ந்து தனது வீட்டை 1991 இற்கு முன் எப்படி வாழ்ந்தோமோ அவ்வாறு மாற்றியமைத்து ஊரில் உள்ள கோவில்களை தரிசித்து பின் கீரிமலை சென்று வழிபட்டு இறுதியில் நோய்க்காலனை வென்று இயற்கை மரணமெய்தினார். இறந்த பின்னும் இப்படித்தான் வாழவேண்டும் என எடுத்துக்காட்டியவர். எனது தந்தையாரின் சமகால நண்பன். இவர்கள் அரசியலில் கருத்து வேறுபாடு இருந்தாலும் அதற்கு அப்பால் சிறந்த நட்பை பேணிக்கொண்டவர்கள். இவருடைய வாழ்க்கை எமக்கு ஒரு பாடப்புத்தகம் என்று கூறலாம். எமக்கு வழிகாட்டியாகவும், சிறந்த அறிவுரை வழங்கும் ஆசானாக இருந்த ஒரு ஆலமரம் வேருடன் சாய்ந்து விட்டது. மனிதன் பிறக்கும் போது இறப்பும் நிட்சயிக்கப்படுகிறது. ஆனால் அப்பிறப்பில் வாழ்வாங்கு வாழ்ந்து சிறந்த பிள்ளைகளைப் பெற்று பொதுப்பணி செய்து நிறைவான வாழ்க்கை வாழ்வது என்பது எல்லோருக்கும் கிடைப்பதில்லை. இதில் வெற்றி கண்டவர் அமரர் தில்லைநாதன் ஐயா.

**மருத்துவர் கணேஸ் ஸ்ரீதரன்**

**11 ஆம் வட்டாரம்**
**புங்குடுதீவு**

உ
சிவமயம்

# குருநாதர் குருவடி - போற்றி வாழ்ந்த தில்லைத் திருவடி

பொன் கொழிக்கும் புங்கை மண்ணில் உயர் சைவ வேளார் மரபில் தோன்றி சைவத்தையும் தமிழையும் தனது இரு கண்களாகக் காத்து அதற்கு ஒரு படிமேலாக ஆன்மீகத்தை முக்கண்ணாகக் கொண்டு யோகர் சுவாமிகளின் அடியொற்றி ஆசாரத்துடன் வாழ்ந்து அமரத்துவம் அடைந்தவர் தான் ஜே.பி. என எல்லோராலும் அடைமொழியில் அழைக்கப்பட்ட அமரர் செல்லையா தில்லைநாதன் ஆவர்.

பிறப்பும் இறப்பும் ஆண்டவனின் நியதி இடைப்பட்ட காலத்தில் என்ன செய்தாரென்பதே கேள்வி இக்காலப்பகுதியில் சமயப்பணி, ஆன்மீகப்பணி, திருப்பணி, கல்விப்பணி, சமூகப்பணி, வர்த்தகப்பணி, அரசியல்பணி என்பன இவர் ஆற்றிய பணிகளாகும் இருப்பினும் பாவம் தரும் விடயங்களைத் தவிர்த்து புண்ணிய தான தருமங்களைச் செய்த ஒரு மகான் ஆவார்.

## ஆன்மீகப்பணி

சைவத் திருமுறை அடியார் சங்கமத்தை நீர்கொழும்பில் ஸ்தாபித்து அடியார்களை உறுப்பினர்களாக உள்வாங்கி சமய குரவர்கள் சேக்கிழார் போன்ற நாயன்மார்களின் குருபூசைகளைத் திதி தவறாமல் நடத்திய பெருமைக்குரியவர்.

யோகர் சுவாமிகளின் குருபூசையினை நீர்கொழும்பில் அறிமுகப்படுத்திய முதலில் தனது இல்லத்திலும் பின்னர் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயமண்டபத்திலும் ஒழுங்கு செய்து அவரின் ஆன்மீகத் தொண்டுகளையும் ஆற்றிய சேவைகளையும் சொற்பொழிவின் மூலம் எடுத்தியம்பி அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கிய சிவதொண்டன் ஆவர்.

வருடம் தோறும் நீர்கொழும்பு ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம், ஸ்ரீ சிங்கமகாகாளி அம்மன் ஆலயம் ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயம், மன்னார் - திருக்கேதீஸ்வரம், திருகோணமலை - திருக்கோணேஸ்வரம், பேராதெனிய - குறிஞ்சிக் குமரன் ஆலயம், மட்டகளப்பு - மாமாங்கேசுவரர் ஆலயம், களுதாவளை - பிள்ளையார் ஆலயம், நாச்சிக்குடா - காமாட்ஷி அம்மன் கோயில், கொக்கட்டிச்சோலை தான் தோன்றி ஈஸ்வர ஆலயம் எனப் பல ஆலயங்களுக்கு சைவ திருமுறை அடியார் சங்கமத்தின் மூலம் திருவாசகம் முற்றோதலை ஒழுங்கு செய்து அன்னதானம் வழங்கிச் செயன் முறைப்படுத்திய பண்பாளர். அண்மையில் 72வது திருவாசக முற்றோதல் நிகழ்ந்ததையும் இவ்விடத்தில் சுட்டிக் காட்டுதல் பொருத்தமானதாகும்.

நீர்கொழும்பிலும் சரி ஏனைய ஆலயங்களிலும் சரி உற்சவ காலங்களிலும் ஏனைய பண்டிகைக் காலங்களிலும் பஜனை நடத்திக் காட்டிய அடியாரவார்.

பன்னிரெண்டாவது திருவாவடுதுறை ஆதின முதல்வரை நீர்கொழும்புக்கு அழைத்து வந்து அவரின் ஆன்மீகச் சொற்பொழிவை மக்கள் அறியும் வண்ணம் செய்த பெருந்தகையாளர்.

ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலய பரிபாலன சபை உறுப்பினராக இருந்து அதன் வளர்ச்சிக்கும் உறுதுணை பூண்டவர்

## சமயப்பணி

நீர்கொழும்பு ஸ்ரீ முத்துமாரி அம்மன் ஆலயத்தில் சைவத்திரு அடியார் சங்கமத்தின் மூலம் சைவப்பிள்ளைகள் தீட்ஷை பெறுவதற்கு வசதி செய்து கொடுத்த சிவனடியார் ஆவர்.

இலங்கையில் பல பாககங்களிலிருந்தும் தென்னிந்தியாவிலிருந்தும் பெரியபெரிய மகான்களை அழைத்து வந்து ஆலயங்களில் சமயச் சொற்பொழிவுகளை எல்லோரும் அறியும் வண்ணம் செய்த மூத்த உறுப்பினராவார்.

சைவ சமயத்திலிருந்து வேற்று மதங்களுக்குச் செல்லாமல் ஆறுமுக நாவலர் போன்று செயற்பட்ட சமயப்பற்றாளன்.

காலை மாலை ஆலயங்களில் தேவாரம் பஞ்சபுராணம் ஓதிய ஓதுவாராவார்.

சமயப்போட்டிகளை நடாத்திப் பரிசில்களை வழங்கி சமயத்தின் பால் மாணவர்களை ஊக்கிவித்த உண்மைத் தொண்டனும் ஆவார்.

எந்நேரமும் சித்தம் சிவனடிக்கே என்று சிவனடியார் போன்று தோற்றமளித்து இளைய தலைமுறையினை மெய்ஞானத்தின் பால் நாட்டங் கொள்ளச் செய்தவர்.

இவர் பாடியநாவும் ஆடிய தழிழும் தேடிய அருளுமாக வலம் வந்தவர்.

## திருப்பணி

புங்குடுதீவு தல்லையபற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி கோயிலுக்கும் நீர்கொழும்பு முத்துமாரி அம்மன் ஆலயத்துக்கும் சூரன் செய்து கொடுத்த அசகாய சூரன் ஆவார்.

ஸ்ரீ சித்தி விநாயக ஆலய தேர்த்திருப்பணிகளிலும் தன்னை இணைத்துக் கொண்டவர்.

எண்ணற்ற பல கோயில்களுக்கு அதன் புனருத்தான பணிகளுக்காக நன்கொடைகள் வழங்கிய வள்ளல்

## கலை கலாசாரப் பணிகள்

கலை கலாசாரம் இல்லையெனில் அந்த இனம் அழிந்து விடும். இதனால் தான் தில்லையவர்கள் கோயில்களில் தேவாரம், மேளக்கச்சேரி இசை நடனக்கச்சேரி, வில்லுப்பாட்டு, நாடகம், கதாகால சேபம் என்பவற்றை ஒழுங்கு செய்து மக்களின் மனங்களில் நிலை நிறுத்தி இனத்தின் பெருமையைக் காத்தார்கள்.

## கல்விப்பணி

ஊர்ப்பாடசாலையான புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயத்தின் பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் தலைவராக இருந்து அதன் வளர்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் அர்பணிப்புடன் சேவையாற்றியவர்.

தற்பொழுது புகழ் பெற்று விளங்கும் விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி 1954ம் ஆண்டு விவேகானந்தா வித்தியாலயமாக ஆரம்பிப்பதற்கு ஸ்தாபகர் ச.க. விஜயரத்தினம் ஐயாவுடன் சேர்ந்து தோளோடு தோள் நின்றவர்.

மேற்படி இரண்டு பாடசாலைகளின் கல்வி மேம்பாட்டிற்காகத் தொடர்ந்தும் உழைத்தவர்.

வறிய மாணவர்களின் கற்றல் செயற்பாட்டிற்காக உபகரணங்களை வழங்கியவர்.

## சமூகப்பணி

புங்குடுதீவு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவராக இருந்து அம்மக்களுக்குத் தொண்டாற்றியவர்.

இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல் இலவச மருத்துவ முகாம் போன்றவற்றை சமூக தொண்டு நிறுவனங்களின் மூலம் ஒழுங்கு செய்து மக்கள் பணியே மகேசன் பணி எனத் தொண்டாற்றியவர்.

## வர்த்தகப்பணி

வர்த்தகத்துறையில் நீர்கொழும்பு மாநகரில் நாதன் ரெக்ஸ்ரைல் செல்வம் ரெக்ஸ்ரைல் போன்ற புடவைத் தொழிலையும் உதயகிரி ஹோட்டலையும் வாணிவிலாஸ் ஹோட்டலையும் ஸ்தாபித்து பலதரப்பட்ட உணவு வகைகளை தரமானதுமாக மலிவாகவும் மக்களுக்கு வழங்கியவர். இதனால் இவ்ஹோட்டலின் பெயர் இன்னும் மக்கள் மனதில் அழியாது இடம் பிடித்துள்ளது.

## அரசியல்பணி

ஊர்காவற்றுறை தமிழரசுக் கட்சி எம்பி க.பொ.இரத்தினத்துடன் இணைந்து தம் புங்குடுதீவு மக்களுக்கு வளங்களைப் பெற்றுக் கொடுத்து பல வழிகளிலும் உதவி செய்தவர்.

தமிழரசுக் கட்சி எம்பி.வன்னியசிங்கத்தை நீர்கொழும்புக்கு அழைத்து பல அரசியல் மேடைகளை அமைத்து அக்கட்சி வெற்றி பெறுவதற்கு தேர்தல் பிரசாரம் செய்த உண்மையான கட்சித் தொண்டனாக விளங்கியவர் இவர்.

**இவர் ஒரு பழுத்த அரசியல் வாதியும் ஆவார்.**

இவ்வளவு பணிகளுக்கு மத்தியிலும் இவர் ஒரு குடும்பத் தலைவன் மனைவி கற்பகம் கற்பகதரு போன்று கணவனின் பணிகளுக்கு எல்லாம் துணைபோனவர். குடும்பத்தில் மூன்று ஆண்மகவுகளையும் ஆறு பெண் மகவுகளையும் என நவமணிகளைப் பெற்றெடுத்து வளர்த்து வந்துள்ளார்.

அமரர் அவர்கள் ஊர்ப்பிள்ளைகளைத் தலை தடவி மக்களுக்காக தான் என்று பணி செய்ய ஒன்பது பிள்ளைகளும் கல்வி கேள்விகளில் ஊர் மெச்ச விளங்கினார்கள். இளையவன் லோகேந்திரன் கல்வியில் உச்சமாம் பி.எச்.டி பட்டம் பெற்று உலகம் போற்ற சிங்கப்பூரில் U.K. பல்கலைக்கழகத்தில் சிரேஷ்ட விரிவுரையாளாராக பணிபுரிகின்றார். மூன்று பெண் பிள்ளைகள் கனடாவில் வசிக்கின்றனர். மூத்தவனும் நடுவனும் பிரான்ஸ் நாட்டில் வசிக்கின்றனர். மற்றைய பெண்பிள்ளைகள் முறையே இலங்கையிலும், சுவிஸிலும் , பிரான்ஸிலும் வசிக்கின்றனர். அமரர் செல்லையா தில்லைநாதன் இவர்களுக்கு தந்தை ஆதலால் துயருறும் பிள்ளைகளுக்கும் அன்பு மனைவிக்கும் யோகர் சுவாமிகளின் மந்திரமாம்.

**"எப்பவோ முடிந்த காரியம்**
**இனி ஒரு பயனுமில்லை"**

என்பதனை நினைவு கூர்ந்து அவரின் ஆத்மா முத்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

**நன்றி**

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**ந. கணேசலிங்கம்**
**முன்னைநாள் அதிபர்**
**விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி**
**நீர்கொழும்பு.**

# உழைப்பால் உயர்ந்த ஆத்மீக செயல் வீரன்

புங்குடுதீவை பிறப்பிடமாகவும், புங்குடுதீவு தல்லையப்பற்று சூழலிலே வளர்ந்து வந்த அமரர் தில்லைநாதன் JP இளமையிலே சமயப் பற்றுள்ளவர். துடிப்பான இளைஞராக இருந்த காலம் முதல் அன்னாருடன் நெருங்கிப் பழகும் சிந்தை கொண்ட அன்பராக சமூக, சமய அரசியல் வர்த்தக துறைகளில் அழியா சுவடு பதித்து மக்களுக்கும் மகேசனுக்கும் உள்ள உறவை நிலைபெறச் செய்து சமத்துவ வழியில் வாழ்ந்து வந்தவராவார். அன்னாரின் அமைதியான தோற்றமும் புன்சிரிப்புடனான முகபாவம், எவரையும் மதித்து நடக்கும் பண்பு என்பன என்னால் மறக்க முடியாத நினைவுகள் எனலாம்.

மற்றும் தல்லையப்பற்று சங்கர மூர்த்தி முருக மூர்த்தி ஆலயத்தில் தலைவராக இருந்து பல தொண்டுகளை செய்து நிர்வாக கட்டமைப்பிலே சிறந்து விளங்கினார். இவர் ஒரு முருகப்பக்தன். தல்லையப்பற்று முருகனுக்கு சூரன்போர் நடப்பது வழமை. கந்த சஷ்டி ஆறு நாட்கள் நடைபெறும். கடைசி சூரன் போர், இவரது உபயம். அதற்கு ஆலயத்தில் சூரன், கடா இல்லை. அதனாலே சூரனையும் கடாவையும் ஆலயத்துக்கு செய்து தந்து இந்த முறை சூரன்போரையும் நேரேகண்டு ரசித்த நினைவு நெஞ்சை விட்டு அகலவில்லை.

நீர்கொழும்பில் வாழ்ந்து வந்தவர் ஆனாலும் சொந்த மண் புங்குடுதீவிலே எனது உயிர் பிரிய வேண்டும் என்று துணிவோடு வந்து தன் உயிரை புங்குடுதீவு மண்ணிலே சங்கமம் ஆக்கிய வரலாறு அமரர் தில்லைநாதன் JP யைச் சாரும். இவரது புகழ் என்றுமே அழியாது.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய தல்லையப்பற்று வேல் முருகனைப் பிரார்த்திக்கின்றேன்.

**தலைவர்**
**புங்குடுதீவு தல்லையப்பற்று சங்கர மூர்த்தி முருக மூர்த்தி**
**லயன் கலாநிதி நித்தியானந்தன் JP**

# தந்தையைப் போல ஒரு தெய்வமில்லை

புகழ்பூத்த ஒரு பரம்பரையின் 'விழுதுக்கு' உரம் தந்த துணையை இழந்த சோகத்தில் ஆழ்ந்து நிற்கும் உங்களோடு நாமும் எங்கள் வேதனையைப் பகிர்ந்து கொள்ளும் இந்தக் கணத்தில்....

ஒரு பாரிய குடும்பத்தின் தலைமைத் தாங்கி நின்று வழிகாட்டிய அந்த உயர்ந்த மனிதரின் உழைப்பை நேரில் கண்டவர்கள் என்ற வகையில் எங்கள் வேதனை இருமடங்காகிறது.

ஆயிரம் மைல் பயணத்தையும் ஒரு அடி எடுத்து வைத்துதான் ஆரம்பிக்க வேண்டுமென்றார் ஜோன் கெனடி. வசதிகள் குறைந்த கிராமத்தில் பிறந்து விடாமுயற்சியால் தொழிலில் உயர்நிலையடைந்து வேலைப் பழுவோடு குடும்பத் தலைமையையும் தாங்கி சமூக, ஆன்மீக செயற்பாடுகளிலும் ஈடுபட்டு மகிழ்வோடு வாழ்ந்தவரின் மறைவு சமூகத்தில் எவ்வகையான தாக்கத்தை ஏற்படுத்தும் என்பதை அவருடைய இறப்பின் பின் இறுதி நாள் நிகழ்வுகளில் சமூகங்களினால் வெளியிடப்பட்ட கண்ணீர் அஞ்சலிகளும், சமூகத்தின் பக்தி நிறை மரியாதை அஞ்சலியுரைகள் என்பன புலப்படவைத்தன.

அமரர் ஜே. பி. தில்லைநாதன் ஐயா மண் மீதும், ஊர் மக்கள் மீதும் விசுவாசமாக நடந்து கொண்டவர். நீர்கொழும்பில் இருக்கின்ற வேளையிலும் என்னுடன் அடிக்கடி தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு ஆலய நிர்வாக விடயங்கள், வளர்ச்சி திருப்பணி தொடர்பான விடயங்கள், ஊரவர்கள், அயலவர்கள், உறவினர்கள் என பலதையும் விசாரித்து அறிந்து கொள்வார்.

அவர் தன்னுடைய உயிர் தமது சொந்த மண்ணிலே பிரிய வேண்டும் என வந்து புங்குடுதீவில் இருந்த போது நான் அடிக்கடி சென்று பேசிய போது அவர் எப்போதும் சிரித்த முகத்துடனேயே அளவளாவுவார். சாவை வரவேற்கக் காத்திருப்பவர் போல் மிக மகிழ்ச்சியுடன் காணப்படுவார். நான் இவரைப் பார்த்து ஆச்சரியப்படுவதுமுண்டு.

தல்லையபற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி வேலப் பெருமானின் மீது தீராத பற்று கொண்டவர். ஆலயத்தின் முன்னாள் தலைவரும் ஆவார். அத்துடன் பல சமூக கட்டமைப்புக்களுக்கு தலமைத்துவம் பொறுப்பை ஏற்று மிகவும் சிறப்பாக நடாத்திய ஒரு படிக்காத மேதை ஆவார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படுவான் ... என்பது பொய்யா மொழிப் புலவன் வள்ளுவன் வாக்காகும். அவ்வழியே அன்னார் தனது வாழ்வில் அன்பு நெறியால், ஆதரவால், இன்சொல்லால், ஈகையால், தெய்வீக வாழ்வால் எல்லோருடைய இதயத்திலும் நிறைந்து வாழ்ந்தார். பிறப்பு உண்டானால் இறப்பு நிச்சயம் என்பதை மனதில் உறுதிபட முருகப்பெருமானின் கார்த்திகை தீபத் திருநாளில் தன் வாழ்வில் எக்குறையும் கேளாது அனைத்தையும் நிறைவு செய்து இறைவன் திருப் பாதம் தொழுதார்.

அன்னாரின் ஆத்மா புங்குடுதீவு கிழக்கு தல்லையபற்று சங்கர மூர்த்தி முருக மூர்த்தி முருகப் பெருமானின் பாதார விந்தங்களில் பெரு வாழ்வு பெற இறைஞ்சிப் பணிகின்றோம்

அன்னாரின் பிரிவால் கலங்கி நிற்கும் அனைவருக்கும் எமது ஆழ்நிலை அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றோம்.

**ஓம் சாந்தி!**

**தெய்வேந்திரன் வேழ வேந்தன்**
**அஞ்சல் அதிபர்**
**பொருளாளர் - புங்குடுதீவு கிழக்கு**
**தல்லையபற்று சங்கர மூர்த்தி**
**முருக மூர்த்தி வேல் தேவஸ்தானம்**

**12ம் வட்டாரம்**
**புங்குடுதீவு**

## என் உயிர் உள்ளவரை தந்தையாய்,
## குருவாய் நிறைந்திட்டீர்கள் ஐயா........

ஈழ மணித்திருநாடாம் இலங்கையின் வடபால் இருக்கும் சப்த தீவுகளில் புங்குடுதீவில் சைவ உயர் வேளாண் குலத்தில் தாய்க்கு தலைமகனாய் பிறந்தீர்கள் ஐயா.....

கற்பக விருட்சமாய் கற்பகம் தனை மணந்து நவமணிகளாக நன்மக்களை பெற்றீர்கள் ஐயா.....

சாதி, மதம் பாராது ஏழை எளியவர்கள் பாராது எல்லோருக்கும் உதவி செய்யும் மனப்பாங்கு கொண்டு திகழ்ந்தீர்கள் ஐயா....

காலையில் எழுந்து பத்திரிகை புரட்டி இறைவனை வணங்காது எந்த காரியமும் செய்ய மாட்டீர்களே ஐயா....

வந்தாரை வா உட்கார் என்று விருந்தோம்பல் செய்து அவர்கள் கேட்காமலே அவர்கள் தேவை அறிந்து அவர்களுக்கு அறிவுறைகள் கூறும் உங்கள் மனப்பாங்கு எனி யாரிடம் காண்போம் ஐயா....

உங்கள் பிள்ளைகளை மட்டுமல்லாது எல்லோரையும் உயர்வடைய வழிகள் கூறினீர்களே ஐயா.....

மனிதன் பிறந்தான் இறந்தான் என்று இருக்காது சாதிக்க வேண்டும் என்று அடிக்கடி கூறுவீர்கள் ஐயா....

கடல் கடந்து சென்றாலும், கற்ற கல்வி அழியாது என்று கூறியதுடன் உழைப்பின் முக்கியத்தையும் அடிக்கடி உரைத்தீர்கள் ஐயா....

நீங்கள் அணியும் உடை அறிந்து நீங்கள் எங்கு செல்கின்றீர்கள் என்பதை உங்கள் உடையே கூறும் ஐயா....

குருநாதர் யோகர் சுவாமிகள் வழி நின்று முத்திக்கு வழிகளைக் கூறியதுடன் அவ்வழியே வாழ்ந்தீர்கள் ஐயா....

குருநாதரிடம் ஒருதடவை வந்து பார் என்று அன்பாக ஆயிலியம் அன்று அழைத்தீர்கள் ஐயா.....

பல்கலைக்கழகம் சென்று பட்டம் பெற்று யான் வர நீங்கள் செய்த உதவிகளை நான் என்றென்றும் மறவேன் ஐயா....

எப்போதும் உனக்கு குருநாதன் துணை இருப்பார் என்று தைரியம் கூறிவரும் நீங்கள் இன்று குருநாதரிடமே சென்று விட்டீர்கள் ஐயா...

உங்கள் வாழ்க்கையை பார்த்து நான் மட்டுமல்ல
ஊரே பெருமைப்பட்டதுண்டு ஐயா....
கல்வியறிவு இல்லாவிடினும் தைரியமும் இறை நம்பிக்கையும் உங்கள்

நேர்மையும் என்றும் உங்களை பின்னடையச் செய்யவில்லை ஐயா...

பிறந்த மண் மீது நீங்கள் கொண்ட பற்றை உங்கள் மரணமே எடுத்து கூறுகின்றது ஐயா.... நீங்கள் மரணத்திலும் பொறாமைப்பட வைத்துவிட்டீர்கள் ஐயா.....

இப்படி செய்தால் இப்படி வரலாம் என்று ஆயிரம் வழிகள் கூறும் நீங்கள் கடைசியாகவும் என்ன கூற அழைத்தீர்கள் என்னை ஐயா...

உங்களின் ஆன்மா சிவகாமி சமேத தில்லை நடராஜ பெருமானின் பாதார விந்தங்களை சென்றடைய பிரார்த்திக்கின்றோம்.

**ஓம் சாந்தி ! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி**

**தன்னைத் தன்னா லறிந்தவர்க்கு மங்களம்**
**ஐயமிட்டு ண்பவர்க்கு மங்களம்**
**ஐயமில்லாச் சாதுக்கட்கு மங்களம்**
**ஆதியந்த மில்லாத ஆன்மாவுக்கு மங்களம்**

**யோகேஸ்வரி துஷிகரன் குடும்பம்**
**கனடா**

# MODERN HOSPITAL (NURSING HOME)

Hospital Regd. No. J/DS/BR/501/37/97

**Head Office :**
"Navamany Building"
767, Manipay Road,
Arukalmadam,
Jaffna.
Tel : 021 222 3175
H.P : 0774833303

**Branch :**
"Amirthamahal"
Main Street,
Pungudutivu - 1

*Date :* ..02/01/2017..

## வானுறையும் தெய்வத்திற்கு

நெருநல் உளன் ஒருவன் என்று இல்லை என்னும் பெருமை உடைத்த இவ்உலகில் மானிடப்பிறவி அரிதானது. இதன் மூலமே முத்தியடைய முடியும்.

என் அயலவனாக என் அன்பிற்கு இனிய அண்ணனாக, என் குடும்ப அங்கத்தவனாக எம் அனைவர்க்கும் சமூகப் பணியின் முன்மாதிரியாக வாழ்ந்து காட்டியவர் சமூகத்தின் அன்புவலையில் சிக்குண்டு இருந்து வேண்டுவார்க்கு வேண்டியன செய்து மண்ணுலக வாழ்வை விண்ணுலக வாழ்வாக்கி சென்ற மகா ஞானி தில்லைநாதன்.

பிரபல வர்த்தக குடும்பத்தில் பிறந்து நீர்கொழும்பு மாநகர் சென்று பொருள் தேடி வாழ்வாங்கு வாழ்ந்து மற்றையோரையும் வாழவழி செய்த பொது நலத்தொண்டர் இவர். சமூகப் பணி என்ற வகையிலும் ஆன்மீகப் பணி என்ற வகையிலும் அதன் பொருளுக்கு பெருமை சேர்த்த மகான் இவர். எமது குடும்ப சொந்த ஆலயமான தல்லையப்பற்று முருக மூர்த்தி வேல் ஆலயத்தின் அடியவனாகி ஆற்றிய பணிகள் அளப்பரியன. என் பணி இருபது ஆண்டிற்கு மேல் அங்கு தொடர்வதை அறிந்து மட்டற்ற மகிழ்ச்சி கொண்டவர் அவர். எம் வெளியேற்றத்திற்கு எதிராக உயர் மட்டம் வரை நீதி கோரிய நீதி அரசர் அவர்.

நல்லூரான் திருவடியை நான் நினைந்த மாத்திரத்தே எல்லாம் மறப்பேனடி என சரணாகதி அடைந்து முத்தியடைந்த மகான் முருக பக்தன் யோகர் சுவாமி ஆகும். அவன் கால்பட்டு அழிந்தது என் தலைமேல் அயன் (பிரம்மா) கையெழுத்தே என்பார் அருணகிரியார். எனவே முருகன் அடியாரான அண்ணார் நிச்சயமாக எம் தல்லையப்பற்று முத்திக் கொரு குருபரன் முருகன் தாழ்களில் இளைப்பாறுவார் என்பது நிச்சயம். எப்பவோ முடிந்த காரியம் நமக்கும் அது வழியே என எம் அனைவரும் மனத்தைத் தேற்றி வாழ்வாங்குவாழ முயற்சிப்போமாக.

அன்புடன் தம்பி
சமூக நல எழுத்தாளர் மருத்துவர்
**மா. ஆ. பேரின்பநாதன்**
தலைவர்
தல்லையப்பற்று சனசமூக நிலையம் பாலர் பாடசாலை
அறநெறிப்பாடசாலை
அடைப்பன் நாகன் வளவு புங்குடுதீவு 12

# நிம்மதி சூழ்க

ஜென்மம் நிறைந்தது சென்றவர் வாழ்க
சிந்தை கலங்கிட வந்தவர் வாழ்க
நீரில் மிதந்திடும் கண்களும் காய்க
நிம்மதி நிம்மதி இவ்விடம் சூழ்க !

ஜனனமும் பூமியல் புதியது இல்லை
மரணத்தைப் போல் ஒரு பழையதும் இல்லை
இரண்டுமில்லாவிடில் இயற்கையும் இல்லை
இயற்கையின் ஆணைதான் ஞானத்தின் எல்லை

பாசம் உலாவிய கண்களும் எங்கே?
பாய்ந்து துழாவிய கைகளும் எங்கே?
தேசம் அளாவிய கால்களும் எங்கே?
தீ உண்டதென்றது சாம்பலும் எங்கே?

கண்ணில் தெரிந்தது காற்றுடன் போக
மண்ணில் பிறந்தது மண்ணுடன் சேர்க
எலும்பு சதை கொண்ட உருவங்கள் போக
எச்சங்களால் அந்த இன்னுயிர் வாழ்க

பிறப்பு இல்லாமலே நாளொன்றும் இல்லை
இறப்பு இல்லாமலும் நாளொன்றும் இல்லை
நேசத்தினால் வரும் நினைவுகள் தொல்லை
மறதியைப் போல் ஒரு மாமருந்தில்லை

கடல் தொடும் ஆறுகள் கலங்குவதில்லை
தரை தொடும் தாரைகள் அழுவதும் இல்லை
நதி மழை போன்றதே விதியென்று கண்டும்
மதி கொண்ட மானுடர் மயங்குவதென்ன!

மரணத்தினால் சில கோபங்கள் தீரும்
மரணத்தினால் சில சாபங்கள் தீரும்
வேதம் சொல்லாததை மரணங்கள் கூறும்
விதை ஒன்று வீழ்ந்திட செடி வந்து சேரும்

பூமிக்கு நாம் யாத்திரை வந்தோம்
யாத்திரை தீரும் முன் நித்திரை கொண்டோம்
நித்திரை போவது நியதி என்றாலும்
யாத்திரை என்பது தொடர் கதையாகும்

தென்றலின் பூங்கரம் தீண்டிடும் போதும்
சூரிய கீற்றோளி தோன்றிடும் போதும்
மழலையின் தேன்மொழி செவியுறும் போதும்
மாண்டவர் எம்முடன் வாழ்ந்திட கூடும்

மாண்டவர் சுவாசங்கள் காற்றுடன் சேர்க!
தூயவர் கண்ணொளி சூரியர் சேர்க!
பூதங்கள் ஐந்திலும் பொன்னுடல் சேர்க!
போனவர் புண்ணியம் எம்முடன் சேர்க!

**கவிஞர் வைரமுத்து எழுதிய இந்த வைர வரிகளை**
**உங்களுக்கு நான் சமர்ப்பிக்கின்றேன் தாத்தா......**

**ஐஸ்வர்யா சச்சிதானந்தன்**
தாதியர் கல்லூரி கம்பஹா

# ஈமச் சடங்கும் சமய அனுட்டானங்களும்

இவ்வுலகில் பிறக்கும் ஒவ்வொருவரும் 'இறப்பது நிச்சயம்' என்பது நாம் எல்லோரும் அறிந்த உண்மை. ஒருவர் இறந்த பின் அவர் எம்மதத்தைச் சார்ந்தவரே அம் மதத்தின் விதிகளுக்கு அமைய அவரது ஆன்மா சாந்தி அடைவதற்காகவும், அவரது ஆன்மாவைத் தாங்கி நின்ற உடலை புனிதமாக்குவதற்காகவும் கிரியைகள் நடாத்தப்பட்டு நல்லடக்கம் செய்யப்படுகிறது.

மேலும் விளக்கமாக கூறுவதாயின்: மானிட பிறப்பெடுத்து வாழ்ந்த ஆன்மாவானது இரண்டு சூழ்நிலைகளில் பாவவினைகளை செய்து விடுகின்றது. ஒன்று தாம் செய்யும் செயல் பாவம் என அறிந்திருந்தும் செய்வது,மற்றையது பாவம் என அறியாமலே செய்வது. இது போன்ற சந்தர்ப்பங்களில் ஒருவர் உடலினாலும், வாக்கினாலும், மனதினாலும் மூன்று விதமான பாவ வினைகளைச் செய்கிறார். இவற்றுள் பாவம் என அறிந்து செய்யும் செயலால் ஏற்படும் பாவ வினையை அந்த ஆன்மா அனுபவித்தே ஆக வேண்டும். அறியாது செய்த பாவ வினைகள் அவரின் வழிவந்த வாரிசுகள் அவருக்காக செய்யும் மரணச் சடங்கு, அந்தியேட்டி கிரியைகள், தான தர்மங்களினால் நிவர்த்தியாகின்றன அல்லது குறைந்து போகின்றன என ஆகம நூல்கள் கூறுகின்றன.

கன்ம வினைகளால் பீடிக்கப்பட்ட ஆன்மாவை ஜீவாத்மா அல்லது சூட்சம சரீரம் என்றும், அது இப்பூவுலகில் பெற்றிருக்கும் உடலை தூலசரீரம் என்றும் அழைப்பர். சூட்சும சரீரம் தூலசரீரத்தை விட்டுப்பிரிதலையே நாம் இறப்பு என கூறுகின்றோம். இந்த இறப்பின் போது ஜீவாத்மாவானது யமதூதர்களினால் கவர்ந்து யமலோகத்தில் இருக்கும் யமதர்ம ராஜனிடம் அழைத்து செல்லப்படுகிறது. பூலோகத்திற்கும் யமலோகத்திற்கும் இடையே சுமார் 86000 காதவழி தூரம் இருப்பதாகவும் பாவம் செய்த ஆன்மாக்களுக்கு உரிய தண்டனை அவர்கள் செல்லும் பாதையிலும் யமலோகத்திலும் வழங்கப்படுவதாகவும், அப் பாதையை கடந்து செல்லவதற்கு பாவம் செய்த சில ஆன்மாக்களுக்கு 1 வருடம் வரை ஆகாலாம் என்றும் கருட புராணம் கூறுவதாக சொல்லப்படுகிறது.

இறந்த ஜீவாத்மாவின் கன்ம வினைகளுக்கு ஏற்ப பாதையின் உக்கிரம் தன்னிச்சையாகவே மாற்றம் அடைவதால் உடலை விட்டு பிரிந்த ஜீவாத்மா பாவம் என அறியாது செய்த பாவங்களை நிவர்த்தி செய்து அல்லது குறைத்து யமலோகம் செல்லும் வரை உள்ள பாதையின் உக்கிரத்தை குறைத்து சுகமாக கடந்து செல்வதற்காகவும் அந்த

ஜீவான்மாவை சாந்தி பெறச் செய்வதற்காகவும் அவர்களின் வாரிசுகள் இறுதிக்கிரியைகள், எட்டுச் செலவு, 15ஆம் நாள் படையல், அந்தியேட்டி கிரியை, மாதமாசியம், திவசம் போன்ற சிரார்த்த கிரியைகளையும், தானங்களையும் சிரத்தையோடு செய்கின்றார்கள். இதனால் அந்த ஜீவான்மாவற்கு இன்னும் ஒரு பிறவி இருக்கும் பட்சத்தில் புண்ணியப் பேறினால் நற்பிறப்பு கிடைக்கும் என்பதும் ஐதீகம்.

ஒருவர் இறந்த காலத்தை வைத்து அந்த ஜீவாத்மா பாவம் அதிகம் செய்த ஆத்மாவா அல்லது புண்ணியம் அதிகம் செய்த ஆத்மாவா என்று கணித்துக்கொள்கின்றார்கள். உத்தராயணகாலத்தில் (தைமாதம் முதல் ஆனி மாதம் வரையுள்ள காலம்) சுக்கிலபக்ஷத்தில் (வளர்பிறை காலம்) உடலின் தொப்புளுக்கு மேல் (கண்கள்,காதுகள்,நாசிகள்,வாய்) அமைந்துள்ள ஏதாவது ஒரு வாசலினால் உயிர்பிரிந்திருந்தால் புண்ணியம் அதிகம் செய்த ஆன்மாவாகவும், தட்சணாயன காலத்தில் கிருஷ்ணபக்ஷத்தில் உடலின் தொப்புளுக்கு கீழ் உள்ள வாயில்களில் ஒன்றினால் உயிர் பிரிந்திருந்தால் பாவவினை அதிகம் செய்த ஆன்மாவாகவும் கணிக்கப்படுகிறது. ஒருவர் இறக்கும் போது ஆன்மாவானது உடம்பிலுள்ள ஒன்பது வாசல்களில் ஏதாவது ஒரு வாசலினால் பிரிவதாக ஐதீகம். இதனை இறந்தவுடன் ஒருவரின் ஏதோ ஒரு வாயில் ஈரமாக இருப்பதன் மூலம் தெரிந்து கொள்ளலாம். பாவம் செய்யாத பரிசுத்த ஆன்மாக்களை காண்பது அரிதினும்அரிது. எந்த ஒரு ஆன்மாவும் தெரிந்தோ தெரியாமலோ பாவம் செய்தே இருக்கும் என்பது நம்பிக்கை. பரிசுத்தமான ஆன்மாவானது நேரடியாக பரமாத்மாவுடன் இரண்டறக் கலந்து விடுகிறது என்பது ஐதீகம்.

இந்துக்கள் ஆகிய நாங்கள் ஒருவர் இறந்த பின் செய்யும் கிரியைகள் பற்றி அறிந்திருத்தல் மிகவும் முக்கியமாகின்றது. முக்கியமாக இளம் சந்ததியினர் தெரிந்து கொள்வதற்காக இது பற்றிய விபரங்களை இங்கு பகிர்ந்து கொள்கின்றோம்.

ஒருவர் நோய்வாய்ப்பட்டு அல்லது வயோதிபம் அடைந்ததினால், சுயநினைவற்று இருக்கும் தருவாயில் (சேடம் இழுக்கும் நிலையில்) அந்த ஆன்மா இறைவனையே எண்ணும்படியான சூழ்நிலையை உருவாக்குவதற்காக அவரைச்சூழ்ந்து நின்று பஜனைகள் (தோத்திரங்கள்) பாடுவார்கள். அனுபவம் மிக்கவர்கள் அல்லது நாடி பிடித்து பார்ப்பவர்கள் ஜீவன் பிரியும் நிலையை உணர்ந்தால் உரிமைகாரர்களைப் பால் பருக்குமாறு கூறுவர்.

அப்போது அவருக்கு தீர்த்தம் அல்லது பால் பருக்கி அவருடைய வலது காதில் சமய தீட்சை பெற்ற ஒருவர் மூலம் 'பஞ்சாட்சர மந்திரம் - சிவாயநம' சொல்லி தோத்திரம் பஜனையாக பாடுவார்கள். இவ்வாறு நாம் செய்யும் போது பிரிய இருக்கும் ஆன்மாவானது இவ்வுலகத்தில் பெற்றிருந்த ஆசாபாசங்களை மறந்து, இறைநாட்டம் கொண்டதாகி இறைவனை நாடி நிற்கும். அந்த நிலையில் ஆன்மா பிரிந்தால் இறைவனின் கடாட்சம் அந்த ஆன்மாவுக்கு கிடைக்கும் என்பது ஐதீகம். ஆனால் நாம் அவர் மீது கொண்ட அன்பு , பாசத்தினால் ஆன்மா பிரியும் தறுவாயிலும் கூட அழுது, புலம்பி அவரை உறவு முறை சொல்லி அழைத்து அந்த ஆன்மாவை நிம்மதியாக இறைவனை நாடவிடாது நிலை குலையச் செய்யும் பெருந்தவறைச் செய்து விடுகின்றோம். இப்படிச் செய்வதை தவிர்த்து நாம் எல்லோரும் அந்நேரத்திலாவது எம் குலதெய்வங்களை வழிபட்டு அந்த ஆன்மாவின் ஈடேற்றத்திற்காக பிராத்தனை செய்தல் மிகவும் முக்கியமானதொன்றாகும். சைவ மதத்தை சார்ந்த ஒருவர் இறந்துவிட்டால் அவருடைய ஆன்மா சாந்தி அடைவதற்காக செய்யப்படும் கிரியைகள் பற்றி அறிந்துக்கொள்வோம். இவற்றுள் சில கிரியைகள் இடத்திற்கு இடம் வேறுபடலாம் ஆனால் நோக்கம் ஒன்றே.

## இறுதி கிரியைகள்

இந்துமகன் ஒருவர் இறந்துவிட்டால் அவரை உடனே குளிப்பாட்டி, விபூதி அணிவித்து , சந்தனம், குங்குமப் பொட்டும் வைத்து தெற்குத் திசை நோக்கி தலைப்பகுதி இருக்குமாறு கட்டிலை வைத்து,குத்துவிளக்கு ஏற்றி வைப்பார்கள். அத்துடன் இறந்தவரின் உடல் வைக்கப்பட்டுள்ள இடத்தில் கட்டிலுக்கு மேலே வெள்ளை கட்டுவார்கள். அதற்கும் ஒரு காரணம் சொல்லப்படுகிறது. அதாவது இறந்தவரின் உடல் வைக்கப்பட்டிருக்கும் இடத்திற்கு மேலே கட்டப்பட்ட வெள்ளைத்துணியில் அந்த உடலை விட்டுப் பிரிந்த சூட்சும சரீரம் கொண்ட ஆவியானது தொங்கிக்கொண்டு நிற்குமாம்.

அதனாலேயே இறந்தவரின் உடலை தோயவாக்கும் போதும் வெள்ளைத்துணி கட்டிய இடத்திற்கு கீழே வைத்து தோயவாக்கிறார்கள். அதன் பின்பும் இறுதி கிரியைகள் நடக்கும் போதும் வெள்ளைக்கட்டிய இடத்திலேயே உடலை தலைபக்கம் தெற்கு நோக்கி இருக்குமாறு வைக்கிறார்கள். குளிப்பாட்டும் போதும், கிரியைகள் நிகழும் போதும் இறந்தவரின் ஆத்மா அந்த வெள்ளைத்துணிகளில் தொங்கியவாறு

இருக்கும் என்பது மூதாதையினர் கூறிய விளக்கமாகும். இறந்தவரின் ஆவி இறந்த நாளிலிருந்து 16 நாட்கள் வரை அவ்வீட்டை சுற்றிக்கொண்டு நிற்கும் என்பதும் ஆன்றோர் கூற்று. அதனாலேயே மூன்றாம் நாள், எட்டாம்நாள், பதினைந்தாம் நாள் படையல் என இறந்தவர் விரும்பி உண்ணும் உணவும்,உணவுப்பண்டங்களும் படைத்து இறந்தவரின் ஆவியை மகிழ்விக்கின்றார்கள்.

இக்கிரியைகள் இடத்திற்கு இடம் வித்தியாசமான முறைகளில் செய்யப்படுகிறது. சாதாரணமாக ஒரு பொதுமகன் இறந்துவிட்டால் அவரது பூதவுடலை தகனம் செய்வார்கள். அவர் சமயதீட்சை பெற்று ஆசார சீலராக வாழ்ந்திருந்தால் 'சமாதியும்' இருத்துவார்கள். அனேகமாக வெளிநாடுகளில் ஒருவர் இறந்தால் அவரின் பூதவுடலை இரண்டு அல்லது மூன்று தினங்கள் பார்வைக்கும், அஞ்சலிக்கும் வைத்தபின், இறுதிகிரியைகள் செய்து மின் அல்லது காஸ் போறனையில் எரியூட்டி தகனம் செய்வது வழக்கமாகவுள்ளது. ஆனால் அவரின் ஆன்மா சாந்தியடைய செய்யப்படும் கிரியைகள் எல்லாம் சைவ ஆகம விதிகளுக்கு அமையவே இடம்பெறுகின்றன.

சைவசமயத்தைச் சேர்ந்த ஒருவர் அகால மரணமடைந்தால் எதுவித சமயகிரியைகளும் செய்யாது, தோத்திரம் பாடி கற்பூர தீபம் ஏற்றிய பின் தகனம் செய்கின்றார்கள். ஆனால் தற்பொழுது அந்த நிலை மாறி எல்லாச் சந்தர்ப்பங்களிலும் சமய கிரியைகள் செய்யப்படுகிறது.

வீட்டில் ஒருவர் இறக்க நேரிட்டால் இறந்தவுடன் பூதவுடலைச் சுத்தம் செய்து, விபூதி பூசி ஈமக்கிரியைகள் ஆரம்பிக்கும் வரையும் வீட்டின் ஒரு பகுதியில் தெற்கு பக்கம் தலை இருக்கும் படியாக கட்டிலில் படுக்க வைத்து தலைமாட்டில் குத்துவிளக்கு ஏற்றி வைப்பது வழக்கம். உறவினர்கள் யாராவது தூரதேசத்தில் இருந்து வரும் வரை காத்திருப்பதாயின் அப்பூதவுடல் பழுதடையாது இருக்க உரிய மருந்துகள் இட்டு பாதுகாத்து வைப்பார்கள். சில சந்தர்ப்பங்களில் பூதவுடல் வீக்கமடையும். அதனை தவிர்ப்பதற்காக ஒரு பெரிய பாத்திரத்தில் நீரை அல்லது உப்பை சீலைதுணியில் கட்டி நெஞ்சில் வைத்தும், ஒரு சாக்கில் நெல்லை கட்டி கட்டிலுக்கு கீழேயும் வைப்பார்கள். பூச்சிகள், ஈக்களிடமிருந்து இறந்தவர் உடலை பாதுகாக்க கண்ணாடி பெட்டியால் மூடுவார்கள் அல்லது வேப்பிலை கொத்தால் விசுக்குவார்கள். நோய்வாய்பட்டு இறந்திருந்தால் உடலை கண்ணாடி பெட்டியினால் மூடுவதோடு,மரணவீட்டில் விறகுகளை வைத்து தணல்மூட்டி வேப்பிலை போட்டு புகைக்கவிடுவார்கள். வெளிநாடுகளிலும்,பெரிய பட்டினங்களிலும்

இறந்தவரின் பூதவுடல் மலர்ச்சாலையில் வைக்கப்படுவதால் அவர்களே அதனைப் பாதுகாத்துக் கொள்வார்கள்.

சாதாரணமாக பொதுமகன் ஒருவனின் ஈமக்கிரியைகளை சைவகுருமாரே செய்கிறார்கள். ஆனால் பிராமணருடைய இறுதி கிரியைகளை பிராமணகுருமாரே செய்கிறார்கள்.இறுதி கிரியையின் போது இறந்தவரின் நெருங்கிய இரத்த உறவினர்கள் கடமைகளை செய்வது வழக்கம். இறந்தவர் தந்தையாயின் அவரின் மூத்த மகனும்,தாயாயின் இளைய மகனும், சில சந்தர்ப்பங்களில் எல்லா ஆண்மக்களும் இணைந்து கடமைகளைச் செய்வார்கள். உடலுக்குச் செய்யும் இறுதி கிரியைகள் மூலம் அந்த ஆன்மாவானது அந்த உடலை தாங்கி நின்ற காலத்தில் தெரியாமல் செய்த தீவினைகள் நீங்கப் பெற்று சாந்தி அடைவதாக ஐதீகம். ஆத்துடன் தன்னை இயக்கி வைத்த ஆன்மாவை பிரிந்ததனால் சவமாக இருக்கும் உடலை சிவமாக்கி அதனை அக்கினியில் சங்மிக்கச் செய்யும் புனித கிரியையாகவும் நிகழ்த்தப்படுகிறது.

பெண்பிள்ளைகளைப் பொருத்தமட்டில் அவர்களை சுடுகாடு செல்வதற்கு எமது சமூகம் அனுமதிக்காத காரணத்தினாலும், அவர்கள் விவாகம் செய்து கணவனுடன் இருப்பதாலும் கடமை செய்வதற்கு அனுமதிப்பதில்லை. ஆனால் அவர்கள் எல்லா பூஜைகளிலும் கலந்து இறந்தவருக்காக பிரார்த்தனை செய்வார்கள். தற்காலத்தில் ஆண்பிள்ளைகள் இல்லாத சில குடும்பங்களில் பெண்களும் கடமைகள் செய்து உறவினர் அல்லது இரத்த உறவு உள்ள ஒருவர் மூலம் தகன கிரியையை நிறைவேற்றுகின்றனர். கொள்ளி வைக்க ஆண் இரத்தவழி உறவுகள் இல்லாத தருணங்களில் சுடுகாட்டிற்கு ஆண்களுடன் சில பெண் உறவுகளும் சென்று பெண்பிள்ளையே தகனக் கிரியை செய்வதும் உண்டு.

கிரியைகள் இரண்டு வகைப்படும். ஒன்று சுபகிரியை மற்றையது அபரகிரியை. இறந்ததன் பின் செய்யப்படும் சடங்குகள் (இறுதி கிரியை) அபரகிரியை என்று அழைக்கப்படுகின்றது. சுப கிரியைகள் செய்யப்படும் போது ஆராத்தி, தீபங்கள் வலது பக்கமாக உயர்த்தி செய்யப்படுகிறது. ஆனால் அபரகிரியை செய்யும் போது மறுதலையாக இடதுபக்கம் உயர்த்தி செய்யப்படுகிறது. கடமை செய்வோருக்கு பூநூல் வலது பக்க தோளில் அணிவிக்கப்படுகிறது (குருமார் இடது பக்க தோளில் அணிவர்). ஆனால் தற்பை வழக்கம் போல் வலது மோதிரவிரலில் அணிகின்றனர். அனேகமாக சுப கிரியையின் போது கும்பத்திற்கு வைக்கப்படுமட மாவிலைகள் 5-7-9 தாகவும், அபரகிரியையின் போது 3 மாவிலையாகவும் இருக்கும்.

ஆன்ம ஈடேற்றத்திற்காக சூர்ணோத்சவம் (மரண சடங்கு), தகனம்,அஸ்தி சஞ்சயனம் (கடாற்று), அந்தியேட்டி, பாஷாண பூசை, உருத்திரபலி, நவசிராத்தம், ஏகோத்திர விருத்தி சம்கிதை, இடபதானம், ஏகோதிட்டம், மாசியம், சோதகும்பசிரார்த்தம், சுவர்க்கமாதேயம், வைதரணிகோதானம், சபிண்டீகரணம் (வீட்டுக்கிரியை) சிரார்த்தம் முதலிய கிரியைகள் நடைப்பெறுகின்றன.

மரணச்சடங்கு தொடக்கம் பாஷாணபூசை வரையுள்ள கிரியைகளை சைவகுருமாரும்; சபிண்டீகரணம், சிரார்த்தம் முதலிய கிரியைகளை பிராமணகுருமாரும் செய்து வைக்கிறார்கள். விளக்கமாக கூறுவதாயின் மரணச்சடங்கு முதல் பாஷாண பூசை வரையுள்ள பூசைகளை அபரக் கிரியைகள் என்றும், சபிண்டீகரணம், சிரார்த்தம் முதலியன சுபகிரியைகள் என்றும் அழைக்கப்படும். ஆனால் சபிண்டீகரணம், சிரார்த்தம் போன்ற வீட்டுகிரியைகளை சிலர் சைவகுருமார் மூலம் செய்விக்கின்றனர். சைவக்குருமார் 'சூத்திரராக' இருப்பதனால் சூத்திரர் ஒருவரின் இறப்பினால் அல்லது பிறப்பினால் உண்டான துடக்கு நீங்காது என பல சமூகங்களில் கருத்து நிலவுகின்றது. அதனால் அவர்கள் வீட்டுகிருத்தியங்களை (அந்தியேட்டி, துடக்கு கழிவு போன்றவற்றை) பிராமணகுருமார் மூலம் செய்விக்கின்றனர். இதிலே தகனத்திற்கு முன்னர் இறந்தவரின் உடலுக்கு விஷேட அந்தியேட்டி, நிருவாண அந்தியேட்டி ஆகியவை இடம்பெறும். மாமிச உணவு உண்ணாத சமய தீட்சை பெற்றவரின் உடலில் (பூதவுடலில்) சமய அந்தியேட்டி தகனம் செய்யமுன் செய்யப்படுவதே வழக்கம். இந்த கிரியைகளை செய்யும் கடமைக்காரர் இவை பற்றி முழுமையான விளக்கத்தை தெரிந்து கொண்டு செய்தால்தான் முழுமையான நன்மை கிடைக்கும்.

மற்றைய சமயத்தவர்கள் இறுதிக் கிரியையின் போது இறந்தவரின் பூதவுடலை அவர்களுடைய ஆலயங்களுக்குள் எடுத்துச் சென்று பிரார்த்தனை செய்கிறார்கள். பிரார்த்தனை நிறைவு பெற்றபின் பூதவுடலை நல்லடக்கம் செய்வார்கள். ஆனால் இந்துகள் இறந்தவர்களுடைய பூதவுடலை 'ஆசூசம்' எனக்கூறி ஆலயத்தினுள் அனுமதிப்பதில்லை. அதனால் கிரியை செய்யப்படும் இடத்தை ஆலயத்தைப் போல் தூய்மையான தாக்கி அங்கேயே பூசைகளையும், பிரார்த்தனைகளையும் செய்கின்றார்கள்.

மரண கிரியை நடைபெற இருக்கும் இடத்தில் (முற்றத்தில்) பந்தல் அமைத்து வெள்ளைகட்டி, மாவிலை, தோரணம், பூக்களால் அலங்கரித்து அந்த இடத்தினை சாணத்தினால் (சுமங்கலிப் பெண்) மெழுகுவார்கள். சுப நிகழ்ச்சிகளுக்காக 'சொக்கட்டான் பந்தலும்' (முகடு உள்ளதாகவும்)

அபரகிரியைகளுக்கு 'தட்டைப் பந்தல்' (முகடு அற்ற பந்தலும்) அமைப்பார்கள்.

வெளிநாடுகளில் அதற்கென அமைக்கப்பட்ட மண்டபங்களில் நடைபெறுவதால், அவ்விடத்தை மஞ்சள் தண்ணீர் தெளித்து புனிதமாக்கிய பின் கிரியைகள் செய்யத் தொடங்குவார்கள். பூதவுடல் மலர்சாலையைச் சேர்ந்தவர்களால் சுத்தம் செய்யப்பட்டு, அலங்கரிக்கப்பட்டிருக்கும். அதனால் அங்கு குளிப்பாட்டுதல் அபிஷேகம் செய்தல் போன்றன செய்யபெறுவதில்லை. பதிலாக பஞ்ச கவ்விய நீரினை தெளித்து பூதவுடலை புனிதப்படுத்துவார்கள்.

சைவகுரு மரணக் கிரியைகளை ஆரம்பிக்கும் போது முதலில் அங்கு உருத்திரகும்பமும் (நடுவில்) அதனை சுற்றி அட்டதிக்கு பாலகர்களுக்கான கும்பங்களும், மேற்கு பக்கத்தில் புண்ணியாகவசன கும்பமும், கிழக்கு பக்கத்தில் உரல்,உலக்கை,மணி,மாயானத்திற்கு கொண்டு செல்லும் மண்குட கும்பம் வைத்து பூசைகளை ஆரம்பிப்பார்.

கடமை செய்பவர் மொட்டைவழித்து,தோய்ந்து பின் புத்தாடை தரித்து ஆசாரசீலராக விபூதி தரித்திருத்தல் வேண்டும். அவர் அன்றைய தினம் நோன்பு இருத்தல் அவசியம். சில இடங்களில் அந்தியேட்டியின் போதே கடமை செய்தவருக்கு மொட்டை வழிக்கப்படுகிறது.

கிரியைகள் செய்வதற்கு கும்பங்கள் வைத்து கும்பபூசைகள் ஆரம்பமானதும், பூதவுடலை ஒரு பூநூல் மூலம் கும்பங்களுடன் தொடர்பு படுத்தி அதனை அக்கினியுடன் சங்கமிக்கச் செய்கிறார்கள். கும்பபூசைகள் நிறைவு பெற்றதும் அக்கினி கோமம் வளர்க்கப்படுகிறது. அப்போது பூதவுடலுக்கு (குளிப்பாட்டல்) அபிஷேகம் செய்யப்படும். வீட்டின் தென்புறத்தில் தெற்கு நோக்கியவாறு பூதவுடலை இருத்தியோ அல்லது தலை தெற்கு பக்கம் இருக்கும் வண்ணம் கிடத்தியோ அபிஷேகம் செய்வார்கள். இறந்தவரின் உடல் சிறிது காலம் இருக்க பாதுகாத்திருந்தால் அவர் மையப்பெட்டியினுள் இருக்க அபிஷேகம் நடைபெறும் இடத்திற்கு கொண்டு சென்று அவரின் தலையருகே கண்ணாடி வைத்து அவரின் உருவத்தை கண்ணாடியில் விழ வைத்து, அந்த கண்ணாடிக்கு எல்லா அபிஷேகங்களையும் செய்வர்.

ஆதன் பின்னர் கடமை செய்பவர் அரப்பு, எண்ணெய் முதலியவற்றை சிரசில் வைக்க வேண்டும். கடமை செய்பவர் (கள்) அரப்பு, எண்ணெய் வைத்ததும் உரிமைக்கார ஆண் உறவுகளும், பின்னர் உரிமைக்கார பெண் உறவுகளும் அரப்பு, எண்ணெய் வைப்பார்கள். தாயும் தகப்பனும் உயிருடன் உள்ள உறவுகள் அரப்பு, எண்ணெய் வைத்தல்,வாய்கரிசி

போடுவதில் இருந்து விலகி நிற்பதும் உண்டு. ஆனால் இரத்த உறவுகளுக்கு இது பொருந்தாது. ஆதன் பின்னர் அரிசி மாவை ஒரு பாத்திரத்தில் நீரில் கரைத்து அபிஷேகம் செய்வர். இதுபோல் மஞ்சள் மாவும், அபிஷேகக் கூட்டும் ஒரு பாத்திரத்தில் நீரில் கரைத்து அபிஷேகம் செய்வர். அதன் பின் பால், தயிர், இளநீர் முதலியவற்றால் அபிஷேகம் செய்வார்கள். கடமை செய்பவர் மேற்கு முகமாக நின்று கீழிருந்து (கால்மாட்டில் ஆரம்பித்து) மேலாக (தலை வரை) அவரின் புறங்கையினால் வேறு ஒருவர் உதவியுடன் இந்த அபிஷேகங்களை செய்வார். பூதவுடல் பழுதடைந்த அல்லது அபிஷேகம் செய்ய முடியாத நிலையில் இருந்தால் அபிஷேக திரவியங்களை பூதவுடல் மீது தெளித்து விடுவார்கள். சில ஊர்களில் கிரியை செய்யும் சைவ குருவே அபிஷேகத்தை நடாத்துவார்.

அதன் பின்னர் கும்ப அபிஷேகம் நடைபெறும். பன்னீர் போன்ற வாசனைப் பொருட்கள் முதலியவற்றை சிரசிலே சார்த்த வேண்டும். பின்னர் பூதவுடலை அலங்கரித்து மண்டபத்திற்கு கொண்டு வந்து தெற்கு பக்கமாக தலைப்பகுதி இருக்கக்கூடியதாக கட்டிலை வைப்பார்கள். அதன் பின் அவருக்கு திருநீறு தரித்து பூசைகள் செய்வார்கள். கடமை செய்பவரே பூதவுடலுக்கு தூபதீபம் காட்டி பூசைகளைச் செய்வார்.

அதன்பின் அறுகு, மஞ்சள் பொடி போன்றனவற்றை உரலில் இட்டு மணியடித்து பத மந்திரம் சொல்லி மூன்று, அல்லது எட்டு முறை இடித்த பின்பு, திருபொற்சுண்ணம் இருபது பாடல்களும் பாடி, ஒவ்வொரு பாடலுக்கும் ஒருமுறை அல்லது மூன்று முறை சுண்ணமிடிப்பார்கள். சுண்ணமிடித்த சுண்ணப்பொடியையும் சேர்த்து பூதவுடலுக்கு அபிஷேகம் செய்யப்படும். அனேகமாக கண்களில் அப்பி விடுவது வழக்கம்.

சுண்ணம் இடிக்கும் பொழுது இறந்தவரின் பிள்ளைகள்,பேரப்பிள்ளைகள் உட்பட உரித்துடைய சந்ததிக்காரர்கள் பந்தம் பிடிப்பார்கள். வெளி நாடுகளில் அதற்கான வசதிகள் இல்லாத காரணத்தினால் பந்தத்திற்குப் பதிலாக ஊதுபத்தியைப் பிடித்து இறந்தவரின் ஆன்மா சாந்தி அடைய இறைவனைப் பிரார்த்திப்பார்கள்.

பெண்கள் சுமங்கலியாக இறப்பதை ஒரு பெரிய பேறாக கருதுகின்றனர். சுமங்கலியாக இறப்பது என்பது வயோதிபமடைந்து, கணவருக்கு முதல் இயற்கை மரணம் எய்துதலைக் குறிக்கும். சுமங்கலியாகவே பூவோடும், பொட்டோடும் இறக்கும் பாக்கியம் எல்லோருக்கும் கிடைப்பதில்லை. அதுவும் இறைவன் கொடுத்த வரம் எனக் கூறுகின்றனர். கணவனையே கண்கண்ட தெய்வமாக மதித்து நடப்பவர்களுக்கு இப்பேறு சுலபமாக கிடைத்து விடுகின்றது என நம்புகின்றனர்.

கணவன் மனைவிக்கு முதல் இறக்க நேரிட்டால்: பூதவுடல் குளிப்பாட்டும் போது மனைவியையும் குளிப்பாட்டி, வெள்ளைச் சீலை அணிவிக்கப்படும். கூறப் புடைவை (இல்லா விட்டால் கணவன் வாங்கித் தந்த புடைவை) யை அவர் உடல் மேல் போடுவதுண்டு. இறுதிக் கிரியையின் இறுதிக் கட்டமாக தானம் வழங்கல் நடைபெறும். அப்போது ஊர் ஆலயங்களுக்கு இறந்தவரின் பெயரால் தானம் வழங்கப்படும். அதனை அடுத்து மனைவி; கணவனுக்கு இறுதியாக மலர் அஞ்சலி செய்வார். அதன் போது மனைவி மலர்களைக் கொண்டு மூன்று முறை பூதவுடலை இடம் வந்து மலர்களை பூதவுடலுக்கு சமர்ப்பித்து வீழ்ந்து வணங்குவார்.

இச் சந்தர்ப்பத்தில் கணவனால் கட்டப் பெற்ற புனிதமான தாலியானது ஒரு சுமங்கலிப் பெண்ணால் கழற்றப்பட்டு, கணவனின் நெஞ்சில் வைத்து இறுதிக் கிரியைகளை நிறைவு செய்வார். அன்று முதல் அந்தப் பெண் நல்ல காரியங்களை முன்நின்று செய்வதற்கு அருகதை அற்றவள் என ஒதுக்கப்பட்டு விடுவாள். ஆதி காலத்தில் கணவனை இழந்த மனைவியை கணவரின் சிதையில் வைத்து உயிரோடு எரித்து விடுவது வழக்கமாக இருந்து வந்துள்ளது. சில பெண்கள் தாமாகவே முன் வந்து உடன்கட்டை ஏறுவார்கள்,பலர் ஊர்மக்களின் வற்புறுத்தலில் அதனைச் செய்துள்ளனர். இந்நிலை தற்போது மாற்றம் அடைந்து அப்பெண் இளமையானவளாயின் மறுமணம் செய்தும் வைக்கின்றனர்.

அத்துடன் உரிமைக்கார பெண்களும் மலர் சார்த்தி இறுதி அஞ்சலியை செலுத்துவர். பின்னர் பெண்கள் வாய்க்கரிசி இட்ட பின், பூதவுடலின் வாய்,மற்றும் கை,கால் பெருவிரல்கள் ஆகியவற்றைக் கட்டி பூதவுடலை வஸ்திரத்தினால் மூடி பாடையில் கால் முன்பக்கமாக இருக்கும் படி வைப்பார்கள். அந்த சமயத்தில் உறவினர்களான பெண்கள் மூன்று முறை பாடையை இடப்பக்கமாக மாரடித்துச் சுற்றிய பின் ஒருவரை ஒருவர் கட்டிப்பிடித்து ஒப்பாரி வைத்து அழுவார்கள். அதன் பின் பறை மேளம்,நட்டுவ மேளம்,சங்கு வாத்தியங்களுடன் பூதவுடலை மயானத்துக்கு எடுத்து செல்வார்கள். கொள்ளி வைக்க இருப்பவர் (கடமை செய்பவர்) சந்தணக்கட்டையில் மூட்டப்பட்ட நெருப்புச் சட்டியுடன் இடது தோளில் மண்குடக் கும்பத்துடன் பூத உடலுக்கு முன்னே செல்ல (சில சந்தர்ப்பங்களில் ஊரில் உள்ள புரோகிதர் (பாபர்) கொள்ளிச் சட்டியை எடுத்துச் செல்வார்) ஆண் உரிமையாளர்கள் பிரேதத்தின் பின் புறம் செல்வார்கள்.

பாடையில் இறந்தவர் உடல் வைக்காமல் மையப் பெட்டியில் வைப்பதாயின் மையப்பெட்டிக்குக் கீழே பச்சைப் பன்னாங்கு (தென்னை மர பச்சை ஓலையால் வேயப்பட்ட கிடுகு போன்ற ஒன்று) வைத்துத்

தூக்குவார்கள். அந்தப் பன்னாங்கை சுடுகாட்டில் எறிந்து விடுவார்கள். மையப் பெட்டியின் மூடலைக் கொத்தி அதனையும் தகனக் கிரியைகளுக்கான விறகுகளுடன் சேர்ப்பது ஊர் வழக்கம்.

தற்காலத்தில் மையப் பெட்டி உபயோகப்படுத்துவது பரவலாக உள்ளதால் சிலர் அந்த மையப் பெட்டியினுள் அவர் பாவித்த சில பொருட்கள், அணிந்த உடைகளையும் உள்ளே வைப்பதுண்டு. இறந்தவருக்கு அணிவிக்கப்படும் தங்க ஆபரணங்கள், பூதவுடல் தகனம் செய்ய முன்னர் பெரியவர்களால் (தாலி உட்பட) கழட்டி பத்திரப்படுத்தப்பட்டு பத்திரமாக உரியவர்களிடம் கொடுக்கப்படும். அதே போன்று அவர் இறந்த திதிகளுக்கு அமைய சில பொருட்களை வைப்பதும் உண்டு.

மயானத்தை அடைந்ததும் மயானத்தில் விறகுகள் அடுக்கி தயார் செய்த பின்னர் சிதையை இடப்பக்கமாக மூன்று முறை சுற்றி பின் பாடையை இறக்கி பூதவுடலை தலைப் பகுதி தெற்கு திசையில் இருக்கும் படி கிடத்தல் வேண்டும். அனேகமாக சிதை அடுக்கும் போது காற்று வீசும் திசையைத்தான் முக்கியமாக கவனிப்பார்கள். அதனால் சரியாக வடக்குத் தெற்காக சிதை அமையாது போகலாம். சிதையின் மேல் பூதவுடலில் கட்டிய கட்டுகள் எல்லாம் அவிழ்க்கப்படும். அத்துடன் பூதவுடல் ஆணுடைதாயின் அரைஞாண் கயிறு (அறுநாக்கொடியும்) அவிழ்க்கப்பட்டு அவர் பிறக்கும் போது இருந்தது போல் சுதந்திரமாக்கப்படும். ஆனால் மானத்தைக் காப்பதற்காக அவருக்கு அணிவித்த உடைகள் கழற்றப்படமாட்டாது. அதன் பின் உரிமைக்காரர்கள் வாய்க்கரிசி இடுவார்கள். பின் கடமை செய்பவர் இடது தோளில் மண்குடக் கும்பத்தைத் தாங்கியவாறு சிதையை இடப்பக்கமாக சுற்றி வந்து குடத்தை தலைப்பக்கத்தில் வைத்து கும்ப நீர், அரிசி, பவுண் அல்லது சில்லறைக் காசுடன் வாய்க்கரிசியிடுவார். அதன் பின் பூதவுடலின் மேல் விறகு கட்டைகள் அடுக்கப்படும். அப்போது நெஞ்சுக்கு நேராக ஒரு பெரிய கட்டையை வைப்பார்கள். அதை நெஞ்சாங்கட்டை என்று அழைப்பது வழக்கம். பூதவுடலானது நெருப்பில் எரியும் போது முன்பக்கமாக வளைந்து கொள்ளும். அதனைத் தடுப்பதற்காகவே மொத்தமான நெஞ்சாங்கட்டையை வைக்கிறார்கள்.

அதன் பின், முன்பு போல மண்பானைக் கும்பத்தினை இடதுபுற தோளில் வைத்துக் கொண்டு சந்தணக் கொள்ளிக் கட்டையை பின்பக்கமாக ஏந்திய வண்ணம் கடமை செய்பவர் மீண்டும் இடதுப்புறமாக மூன்று முறை சுற்றி வருவார். ஓவ்வொரு சுற்றின் போதும் ஒருவர் (தலைமுடி அலங்கரிப்பாளர் குடும்பத்தைச் சேர்ந்தவர்) மண்பானைக் கும்பத்தில் கத்தி நுனியினால் துவாரமிட்டு; கும்ப நீரினை சிதைக்கு அபிஷேகம் செய்வார். மூன்றாவது

சுற்று முடிவில் கடமை செய்பவர் சிதையின் தலைப்பாகத்தில் தெற்கு முகமாக (சிதையின் எதிர்பக்கம் பார்த்த வண்ணம்) சிதையைப் பார்க்காது நின்று பிரணவ மந்திரத்தைச் சொல்லிக் கொண்டு சந்தணக் கட்டைக் கொள்ளியை சிதையில் (பிரேதத்தின் சிரசில்) வைத்து குடத்தை முன்புறமாக உடையும் படி போட்டு விடுவார். பின்பு அவர் கால்மாட்டிற்குச் சென்று பவித்திரம் (தர்பை), பூணுல் ஆகியவற்றை கழற்றி சிதையில் போட்டு வணங்கிய பின் திரும்பி பாராமல் சுடலை மடத்திற்கு செல்வது வழக்கம்.

அனேகமாக கடமை செய்தவர் சிறியவராயின் அவரிடம் ஒரு இரும்பாலான ஆயுதம்,அல்லது திறப்பைக் கொடுப்பார்கள். இரும்பு கையில் இருக்கும் போது பேய், பிசாசு, கெட்ட ஆவிகள் அவரைத் தொடராது என்பது இந்துக்களின் நம்பிக்கை. அனேகமாக சுடலை, அல்லது சுடுகாட்டில் சுடலை மடம் அமைந்திருக்கும். வந்தவர்கள் எல்லோரும் மடத்திற்கு சென்று அங்கு ஊர்பெரியவரின் தலைமையில் இக் கிரியையில் சம்பந்தப்பட்ட புரோகிதருக்கு உரிய சம்பளத்தை வழங்குவார்கள். பூதவுடலை எரிப்பதற்காக நியமிக்கப்பட்டவர்கள்,பூதவுடல் எரியும் வரை மயானத்தில் நின்று எரிப்பார்கள். மற்றையோர் தத்தமது வீடுகளுக்குச் சென்று விடுவார்கள். கடமை செய்தவர்கள் தங்களுடன் சுடுகாடுவரை வந்தவர்களை வழியனுப்பும் பொழுது காடாத்த வருவதற்கான அழைப்பு விடுத்து வழியனுப்புவர்.

கடமை செய்தவரும், உரிமைகாரர்களும் இறுதிக் கிரியை நடந்த வீட்டிற்குச் செல்வார்கள். வீட்டிற்குச் சென்றதும் படலையடியில் வைத்து மஞ்சள் கலந்த நீரினால் கால்களைக் கழுவுவார்கள், பின்னர் பெண்கள் வேப்பிலைக் கொத்தால் தலையிலும் அந்த மஞ்சள் கலந்த நீரைத் தெளிப்பர். பின், படலையடியில் கையில் இருக்கும் கத்தியினால் சூலம் கீறி காவல் செய்த பின் உலக்கையைக் கடந்து உள்ளே நுழைவார்கள். அதன் பின்பு வீடு சுத்தம் செய்யப்பட்டு பட்டினிக் கஞ்சி காய்ச்சுவார்கள். பட்டினிக் கஞ்சி என்பது முருங்கை இலையும், கொஞ்சம் அரிசியும் போட்டு காய்ச்சும் கஞ்சி. இறந்தவரின் துக்கத்தினால் பட்டினியாக இருந்த உறவினர்கள், பட்டினியை முடிவுக்கு கொண்டு வருவதற்காக இக் கஞ்சியைக் குடிப்பது வழக்கத்தில் உள்ளது. இதனை உரிமைக்கஞ்சி என்றும் அழைப்பர். பூதவுடல் தகனம் செய்யும் வரை இறந்தவரின் வீட்டில் அடுப்பு மூட்டமாட்டார்கள். தகனம் செய்வதற்கு இரண்டு, மூன்று நாட்கள் செல்லுமாயின் அயலார், உறவினர்கள் பட்டினிச்சாப்பாடு கொடுப்பது வழக்கம். வீட்டில் இறந்தவருடைய படம் இருந்தால் அதனை வைத்து குத்து விளக்கேற்றி இவ் கஞ்சியையும் படைத்து அதன் பின்

மற்றையோருக்கு பரிமாறுவதும் வழக்கம். இறந்தவரின் படம் அச்சமயம் இல்லாவிட்டால், ஒரு குத்து விளக்கு மாத்திரம் ஏற்றி அதன் முன்னிலையில் படைப்பர்.

அதன் பின் அவ் வீட்டில் உள்ளோர் சாப்பிடும் உணவையும், பாக்கு வெற்றிலை, தேத்தண்ணி, போன்ற பானங்களையும் படைத்து, அதன் பின்னர் உண்பார்கள். சில சந்தர்ப்பங்களில் வசதி உள்ளோர் இளநீரை வெட்டிப் படைப்பார்கள். சில சமயங்களில் படம் வைத்து, விளக்கேற்றி, இளநீர், சாப்பாடு படைப்பதை அந்தியேட்டிவரை செய்வார்கள். புலம் பெயர் நாடுகளில் வாழ்வோர் தகனம் செய்த தினம், முதலாம் எட்டு, இரண்டாம் எட்டு, 15ஆம் நாள், அந்தியேட்டி போன்ற விஷேட தினங்களில் மட்டும் படம் வைத்து, விளக்கேற்றி, இளநீர், சாப்பாடு படைப்பதை செய்கின்றனர். மாமிச உணவு படைக்கும் முதலாம் எட்டு (மூன்றாம் நாள்) தோத்திரம் பாடுதல், கற்பூரம் கொழுத்துதல் என்பன செய்வதில்லை.

## காடாற்றுதல் (காடாத்து):

ஊரில் இறந்தவரின் பூதவுடல் தகனம் செய்த மறுநாள் அல்லது மூன்றாம் நாள் "காடாத்து" (காடு ஆற்று) என்னும் கிரியை நடைபெறுகின்றது. இதற்கு குருமார் அழைக்கப்படுவதில்லை. ஊரில் உள்ள பெரியவரே தலைமை தாங்கி செய்விப்பார்.

காடாற்று என்பது பூதவுடல் எரித்ததினால் சூடாக இருக்கும் "சுடுகாட்டை" ஆறச் செய்தல் என பொருள் பெறும். அனேகமாக சுடுகாடு கடல், ஆறு, குளம், கேணி போன்றவற்றை அண்மித்தே இருக்கும். எரித்த இடத்தில் உள்ள எலும்புகள், சாம்பல்கள் என்பவற்றை நீர் நிலைகளில் சங்கமிக்கச் செய்வதற்கு, எரித்த இடம் நீர் உற்றி ஆற்றப் பெறுதல் அவசியம். (சுடுகாடு என்பது பூதவுடலை எரிக்கும் இடமெனவும், இடுகாடு என்பது பூதவுடலை அடக்கம் செய்யும் இடம் எனவும் பொருள் பெறும்).

காடு ஆற்றச் செல்வதற்கு முதலில் நவதானியம், கடகம், குடம், அரப்பு, எண்ணை, பழங்கள், தீன்பண்டம் முதலியவற்றை சாணத்தால் மெழுகிய முற்றத்தில் வைப்பார்கள். பெண்கள் அதனை மூன்று முறை சுற்றி மாரடித்து அழுவார்கள். அதன் பின் கடமை செய்தவர், பெரியவர், இன்னும் உதவி செய்ய மூன்று பேர் எல்லாச் சாமான்களையும் எடுத்துக் கொண்டு சுடுகாட்டிற்குச் செல்வார்கள். அங்கே நெருப்புடன் இருக்கும் விறகுக் கொள்ளிகளை அகற்றிய பின் குடத்தில் நீர் கொண்டு வந்து சிதை இருந்த இடத்தின் கால்மாட்டில் ஆரம்பித்து தலைமாடு வரை ஊற்றி பூர்த்து தணலாக இருக்கும் நெருப்பை அணைப்பார்கள். அப்போது பார்த்தால்

பூதவுடல் படுக்க வைத்த இடத்தில் எல்லா எலும்புகளும் எரிந்த இடம் வெள்ளை நிற சாம்பராக ஒரு ஆளின் உருவமாக தெரியும். பின்னர் சிதை இருந்த தலைப்பகுதியில் விளக்கு ஏற்றி கும்பம் வைத்து பூசைக்கு தேவையான அபிஷேக பொருட்களையும் வைப்பார்கள். பின்னர் ஒரு வாழையிலையில் மரண வீட்டில் சமைத்த மரக்கறி குழை சாதம், மற்றும் ரொட்டிகள், வெற்றிலை பாக்கு, பழங்கள் என்பன வைத்துப் படையல் போடுவர். மண்கலசம் ஒன்றில் பால் ஊற்றி அதை தலைப்பகுதியிலும் வைப்பார்கள். இளநீரைச் சீவி துளையிடாமல் தலைப்பகுதியருகே புதைத்தவாறு வைப்பர். சடங்குகளின் முடிவில் அந்த இளநீரைக் கொத்தித் துளையிடுவர்.

கடமை செய்தவர்; பூதவுடல் தகனம் செய்யப்பட்ட இடத்தில் முழு உருவமும் இருப்பதாக பாவனை செய்து (பூதவுடல் தகனம் செய்த இடத்தில் உடலின் எலும்புகள் எரிந்த இடம் பால் போல் வெள்ளைச் சாம்பராக தெரியும்) மேற்கே பார்த்து நின்று கொண்டு; கால் பகுதியில் இருந்து தலை நோக்கி புறங்கையால் அபிஷேகம் செய்வார். இந்தச் சடங்கிற்கு உரிமைக்கார ஆண்கள் வேறு யாராவது வந்திருந்தால், அவர்களை அழைத்து கால் மாட்டில் இருந்து தலைமாடுவரை பால் ஊற்றச் சொல்வார்கள். பின்னர் கடமை செய்தவர், முழங்கால்கள், தொப்புள், மார்பு, நெற்றி, தலை ஆகிய ஐந்து இடத்திலும் திருநீறு, சந்தணம், மலர்கள் வைத்து தூப தீபம் காட்டி வணங்கிய பின் குறிப்பிட்ட ஐந்து இடங்களிலும் இருக்கும் எலும்புகளை ஒழுங்காக எடுத்து தலைமாட்டில் இருக்கும் பாலுள்ள கலசத்தில் வைப்பார். இறந்தவர் தனது அஸ்தியை புனித தலமொன்றில் கரைக்க விரும்பியிருந்தால் முக்கியமான எமும்புகள் சிறிதளவை எடுத்து ஒரு கண்ணாடிக் குவளையில் பாதுகாப்பாக வைத்துவிட்டு சடங்கைத் தொடர்வர். பின்னர் மிகுதி எலும்புகள், சாம்பல் எல்லாவற்றையும் (தவற விடாது) எடுத்து (முடியுமானவரை கடமை செய்தவரே எல்லாவற்றையும் எடுப்பது நல்லது) ஒன்றாக்கி ஒரு பாத்திரத்தில் அல்லது கடகத்தில் எடுப்பார்கள். பின் அந்த இடத்தை சுத்தம் செய்து நவதானியங்களை விதைத்து; முதலில் மரக்கறி குழை சாதம், மற்றும் ரொட்டிகள், வெற்றிலை பாக்கு, பழங்கள் வைத்துப் படைக்காவிடின்; நெற்பொரி, வெற்றிலை பாக்கு, பழங்கள் முதலியவற்றை சாஸ்திரப்படி படைப்பார்கள். அதன் பின்னர்; விதைத்த இடத்தில் அரளி பூ மரத்தண்டை வெட்டி அந்த இடத்தில் அளைத்து நட்டு விடுவார்கள். கடமை செய்தவர் சடங்கின் இறுதியில் தலைப்பகுயில் படைத்த படையலில் இருக்கும் ரொட்டி ஒன்றை எடுத்து மூன்றாகப் பிய்த்து, நின்று கொண்டு பின் பக்கம் திரும்பாமல் தலைக்கு பின்னால் எறிவார். பின்னர் கத்தியால் இளநீரைக் கொத்தித் துளையிடுவார்.

முன்னர் கலசத்தில் எடுத்த (முக்கிய எலும்புப் பகுதி (அஸ்தியையும்), ஏனைய எலும்புகள், சாம்பல் முதலியவற்றை கடமை செய்தவர் கடலுக்கு எடுத்து சென்று வடக்கு முகமாக பார்த்து நின்ற வண்ணம் தெற்குப் பக்கமாக கடலில் (அல்லது நீர் நிலையில்) போட்டுக் கரைத்து விடுவார்கள். பின்னர் அவர் அதே நீர் நிலையில் தோய்ந்து, பின்னர் அன்று அணிந்த வேட்டி மற்றும் ஏனைய உடைகளை அங்கேயே விட்டு விட்டு வேறு உடை அணிந்து, அருகில் உள்ள ஆலயத்தின் கேணியருகே நக்கினதானம் செய்வார்கள். ஒரு குடத்திலே பச்சை அரிசியை நிரப்பி அக்குடத்தை சுற்றி வஸ்திரம் கட்டி விளக்கில் நெய் ஊற்றி குடும்பஸ்தராக இருக்கும் ஒரு சிவப்பிராமணருக்கு தானமாக கொடுப்பார்கள். அதன் பின்னர் வீட்டுக்குச் செல்வார்கள். வீட்டை சென்றடைந்ததும் படலையில் வைத்து மஞ்சள் தூள் கலந்த தண்ணீரால் கால்களைக் கழுவி, பின்னர் தலைக்கும் தெளித்து விட்டு உலக்கையைக் கடந்து உள்ளே நுழைவார்கள். இதற்கென குறிக்கப் பெற்ற விதிமுறைகள் இருப்பதாக தெரியவில்லை. ஆனால் வழக்கமாக எல்லோரும் செய்வதையே பின்பற்றிச் செய்கிறார்கள்.

சிலர் இறந்தவரின் விருப்பத்திற்கிணங்க, முன்னர் எடுத்து வைத்த சிறிதளவு அஸ்தியை பாதுகாப்பாக வைத்திருந்து, இறந்ததில் இருந்து 29ஆம் நாளில் புனித தலங்களுக்கு எடுத்துச் சென்று, மண் கலசத்தில் பால் ஊற்றி அதனுள் இட்டு சடங்குகள் முடிந்த பின்னர் அங்கு அதற்கென உள்ள நீர் நிலைகளில் கரைப்பதுண்டு.

## எட்டுக்கிரியை:

காலம் காலமாக நம் முன்னோர்கள் இக்கிரியை செய்து வந்த வழிமுறைகளைப் பின்பற்றியே நாமும் செய்து வருகின்றோம். தகனம் செய்த நாள் தொடக்கம் அந்தியேட்டி வரை இறந்தவரின் படத்தை ஒரு இடத்தில் வைத்து விளக்கேற்றி தாம் உண்ணும் உணவினை படைப்பது வழக்கமாக இருக்கின்றது.

ஆனால் பெரும்பாலும் இறந்தவரின் படத்தை, அவரின் 31ஆம் நாள் சடங்கின் போதே வைப்பார்கள். அது வரையில் சைவ உணவு படைக்கும் போது குத்து விளக்கினையும் மாமிச உணவு படைக்கும் போது மண்ணெண்ணை விளக்கினையும் வைப்பர். ஆகையால் 8ஆம் நாள் செலவு செய்யும் போது ஒரு கதிரையில் இளநீர் கோம்பை மற்றும் அவர் அணிந்த உடைகளை வைத்து இறந்தவர் போன்ற ஒரு உருவத்தை உருவாக்கி அதை வைத்தே இந்த சடங்கைச் செய்வார்கள். அதே நேரம் இறந்தவருக்கு பிடித்த உணவு வகைகளை இறந்த எட்டாம் நாள் படைத்து

வருவதும் வழக்கமான ஒன்றாகும். பூதவுடல் தகனம் செய்யப்பட்ட மூன்றாம் நாள் அல்லது உயிர் பிரிந்து எட்டாம் நாள் அல்லது இரண்டு தினங்களும் எல்லா வகை உணவுகளையும் அவியலாகவும், சிலவற்றை சுட்டும் சமைத்தும், அத்துடன் வெற்றிலை பாக்கு, சுறுட்டு, சாராயம் என்பவற்றையும் மாலைநேரம் (மங்கல் பொழுதில்) படைத்து அதன்பின் படைக்கப்பட்ட எல்லா உணவுகளிலும் சிறிது எடுத்து அவற்றை நீர்நிலைகளில் போடுவார்கள் அல்லது சந்தியில் வைத்து, பின்னர் காகத்திற்கும் வைத்த பின் உற்றார் உறவினர் நண்பர்களுடன் பகிர்ந்து உண்பார்கள். ஆண் ஒருவர் இறந்தால் அப்பிதிர் பேய் என்றும், பெண் ஒருவர் இறந்தால் அப்பிதிர் பிசாசு என்றும் சொல்வதுண்டு.

எட்டுச்செலவு செய்கையில் சிலர் வெவ்வேற விதமான பழக்கங்களைக் கடைப்பிடிக்கின்றனர். அதாவது ஒரு சிலர் எட்டாம் நாள் படைப்பின் போது முதலில் சைவச்சாப்பாட்டை (மரக்கறி) குத்து விளக்கின் முன்னால் படைப்பர். தோத்திரம் படிப்பர், கற்பூர ஆரத்தி சாம்பிராணி காட்டுவர். பிறகு 10 ஆம் நாள் மச்ச சாப்பாட்டை (மாமிசம்) மண்ணெண்னை விளக்கின் முன்னாள் படைப்பர். இதன் போது தோத்திரம் படிக்க மாட்டார்கள். கற்பூரம், சாம்பிராணி காட்ட மாட்டார்கள். ஒரு சிலர் 9ஆம் நாள் சைவச்சாப்பாட்டையும் 11 ஆம் நாள் மாமிச சாப்பாட்டையும் மேற்குறிப்பிட்டது போல் படைப்பர். மிகச் சிலர் நேரமின்மையால் ஒரே நாளிலே பகல் வேளைக்கு சைவச்சாப்பாட்டையும் இரவு வேளைக்கு மாமிச சாப்பாட்டையும் மேற்குறிப்பிட்டது போல் படைப்பர். மாமிச சாப்பாடு என்னும் பொழுது சிலர் முதலில் கடலுணவையும், அடுத்த நாள் இறைச்சி உணவையும் படைப்பதும் உண்டு. மண்ணெண்னை விளக்கில்லாதவர்கள் மெழுகுவர்த்தியை உபயோகப்படுத்தலாம். மண்ணெண்ணை விளக்கு, மற்றும் குத்து விளக்கு வைப்பதன் நோக்கம் இறந்தவரின் ஆன்மாவை அந்த விளக்கில் இருத்துவது அல்லது அழைப்பது என்பதாகும். மரண வீட்டிற்கு வந்த உறவுகள் எட்டுச் செலவு முடிந்து, பந்தல் கழட்டிய பின்னரே வெளியேற வேண்டும்.

## 15 ஆம் நாள் பொங்கித் தெளித்தல்:

இந்த சடங்கு ஒருவர் இறந்த 15 ஆம் நாள் செய்யப்படும். அன்றைய தினம் இறந்தவர் உடல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டிருந்த இடத்தை சுத்தப்படுத்தி, கழுவி பின்னர் கற்கள் கொண்டு அடுப்பை உருவாக்கி அல்லது களி மண்ணினால் செய்யப்பட்ட அடுப்பை உபயோகித்து ஒரு பானையில் தண்ணீர் மற்றும் பால் ஊற்றி காய்ச்சுவார்கள். அது பொங்கும் பொழுது, பொங்குவதை அள்ளி ஒரு சட்டியில் ஊற்றி அதை

வீடு முழுவதும் தெளிப்பார்கள். வீட்டைச் சுற்றியும் தெளிக்கலாம். பின்னர் பானையில் அரிசி, சர்க்கரை போட்டு பொங்கல் பொங்குவார்கள். பின்னர் குத்துவிளக்கினை ஏற்றி அதற்கு பொங்கலைப் படைப்பார்கள். பின்னர் அதை எடுத்துச் சென்று சந்தியில் வைத்து விடுவர். பின்னர் பொங்கலை, வந்த உறவினர் நண்பர்களுடன் பகிர்ந்து உண்பர்.

## அந்தியேட்டி:

இறந்து முப்பத்தோராம் நாள் செய்யப்படும் கிரியையாகும். இந்தக் கிரியை இரண்டு விதமாகச் செய்யப்படுகிறது. அவை அந்தியேட்டி கிரியை, வீட்டுக் கிருத்தியக் கிரியை என்பனவாகும். அந்தியேட்டி (இது சாதாரண சைவர்கள்) பூதவுடலுக்கு பதிலாக தர்ப்பையினால் (புத்தணி) சரீரம் போல செய்து அதற்கு இறுதிக் கிரியையின் போது பூதவுடலுக்கு செய்யப்பட்ட எல்லாக் கிரியைகளும் செய்யப்பட்டு தகனம் செய்து அதன் அஸ்தி (தற்பையின் அஸ்தி) பெறப்படுகிறது. இது புனர் தகனம் எனப்படும். பின் அங்கு பாஷாணம் ஸ்தாபித்து அதற்கு அபிஷேகம் போன்றன செய்யப்படும். இங்கு முப்பத்தியொரு பிண்டங்கள் இடப்படும். இவற்றுள் தலைப் பகுதியில் வைக்கும் பிண்டம் பெரிதாக இருக்கும். பிண்டங்களை பச்சை அரிசிச் சாதம், கறிவகைகள், பலகாரங்கள், பழங்கள் எல்லாவற்றையும் சேர்த்து உருட்டி பிசைந்து இடவேண்டும். அதன் பின் ஏகோத்திர விருத்தி செய்யப்படும்.

நம் முன்னோர்கள் இப்பூசையை வசதி கருதியும், புனித ஸ்தலம் எனக் கருதியும் அனேகமாக எல்லோரும் கீரிமலையில் செய்வது வழக்கம். கீரிமலையில் இதற்கென பிரத்தியேக இடவசதியும், குருமாரும், புனிதமான சமுத்திரமும் இருப்பதனால் அங்கு சென்று செய்தனர். தற்பை சுட்ட அஸ்தியையும் (பாஷாணத்தையும்), பிதிர்களுக்கு சமர்பித்த பிண்டத்தையும், கும்பத்தையும் புனிதமான சமுத்திரத்தில் சங்கமிக்கச் செய்தல் புனிதம் நிறைந்தெனக் கருதுகின்றனர். இக்கிரியைகளை சைவக்குருமாரே செய்வது வழக்கம். வசதி படைத்தோர்; தங்கள் வீடுகளிலோ, அல்லது ஊர் ஆலய வளாகத்திலோ மண்டபம் அமைத்து கிரியைகள் செய்த பின்; பாஷாணத்துக்கு தூப தீபம் காட்டி பூசை முடித்த பின் கும்பம், பாஷாணம், பிண்டம் ஆகியவற்றை அலங்கரிக்கப்பட்ட பல்லக்கில் அல்லது தேர் போன்று ஒரு வாகனம் அமைத்து அதில் வைத்து மேளம் தாளம் முழங்க எடுத்துச் சென்று பிண்டத்தை ஒருவரும் அதன் பின் கும்பத்தை ஒருவரும், அதனைத் தொடர்ந்து பாஷாணத்தை ஒருவரும் கடற்கரைக்கு எடுத்துச் சென்று கடமை செய்தவர் இடையளவு தண்ணீரில் நின்ற வண்ணம் வடக்குப் பக்கம் பார்த்து நின்று முதலில் பிண்டத்தை

தெற்கு பக்கமாகவும், பின் கும்பத்தை வடக்குப் பக்கமாகவும், பாஷாணத்தை தலைக்கு மேலால் தெற்குப் பக்கமாகவும் நீர் நிலையில் இட்டு ஸ்நானம் செய்வார்கள். அந்தியேட்டி கிரியைக்கு கடற்கரையே உகந்த இடமாகக் கருதப்படுகிறது.

பின்னர் வீட்டு வாசலை அடைந்ததும் வேப்பிலையை சப்பி, நெருப்பு, சாணம், மண், வெண்கடுகு ஆகியவற்றை தொட்டு கல்லின் மேல் கால் வைத்து அல்லது உலக்கையை கடந்து செல்ல வேண்டும். சில இடங்களில் கடமை செய்தவர் வீட்டினுள் நுழையும் போது ஆராத்தியும் எடுப்பார்கள்.

## வீட்டுக்கிரியை அல்லது சபிண்டீகரணம்:

வீட்டினைக் கழுவி சுத்தம் செய்து புண்ணியாகவாசனம் செய்த பின்னர் வீட்டுக்கிரியை செய்ய வேண்டும். விக்னேஸ்வர பூசை, புண்ணியாக வாசனம், பஞ்ச கவ்விய பூசை முதலிய கிரியைகளை செய்து நவசிராத்தம், ஏகோத்திர விருத்தி, சம்கிதை, இடபதானம், ஏகோதிட்டம், மாசியம், சோதகும்பசிரார்த்தம், சபிண்டீகரணம் செய்வதே ஒழுங்கு முறை. இக்கிரியை பொதுவாக பிராமணக் குருமார் மூலம் செய்யப்படுகிறது. சில இடங்களில் சைவக்குருமாரே இதனையும் செய்கின்றனர். காரணம் பிதிர்த்தற்பணம்; இறுதிக்கிரியைகள் செய்தவருக்கே உரியன எனக் காரணம் கூறப்படுகின்றது. இறந்தவருக்காக வழங்கப்படும் தர்ப்பணம் (உடை, குடை, செருப்பு, தானம் முதலியன) இறந்தவருக்காக கிரியைகள் செய்த தமக்கே வழங்கப்பட வேண்டும் என்பது சைவக் குருமாரின் வாதமாகும்.

வீட்டுக்கிரியையின் போது இரண்டு பிராமணக்குருமார்கள் வருவார்கள். அதில் சிரேஷ்ட குரு கிரியைகளைச் செய்வார், மற்றய குரு பிதிர்காரகனாக வீற்றிருந்து "ஏகோதிட்டம்" என்றழைக்கப்படும் கிரியைகளைச் செய்து தானங்களைப் பெற்று முதலிலேயே சென்று விடுவார். அவர் செல்லும் பொது வீட்டைத் திரும்பிப் பார்க்கக் கூடாது. அத்துடன் அவர் வெளியே செல்லும் போது அவரின் பின்னால் சாணம் கரைத்த தண்ணீர் அல்லது மஞ்சள் நீர் தெளித்து புனிதமாக்குவார்கள். காரணம் அவர் அங்கே பிதிராக தோற்றமளிக்கின்றார். திரும்பவும் அங்கு வரக்கூடாது என்பது நியதி.

அதன் பின்னர் சிரேஷ்ட குரு பூசைகளை நிறைவு செய்து, அங்கு இருப்போரை ஆசீர்வதித்து விடைபெற்றுச் செல்வார். அவர் முற்றத்தில் நிற்க அவரைச் சுற்றி வந்து வீழ்ந்து வணங்குவார்கள். அவர் வீட்டில்

உள்ளவர்களை ஆசீர்வதித்த பின் விடை பெற்றுச் செல்வார். அவர் இங்கே இறைவனாக மதிக்கப் பெறுகின்றார். ஆனால் இந்தக் காலத்தில் சில சைவக் குருமார் ஒருவரே இரண்டு கிரியைகளையும் செய்யும் வழக்கத்தை முன்னெடுத்துள்ளார்கள். இங்கு அவர் பிதிர்தேவதையாக இருந்து ஏகதிட்டத்தினையும், தெட்சனையையும் பெற்று, அதனை ஒருவர் மூலம் தமது வீட்டிற்கு அனுப்பிய பின்னர்; குருவாக அமர்ந்து கிரியைகள் செய்வதை சில சைவக் குருமார் தற்போது புதிதாக புகுத்தியுள்ளனர்.

அவர்கள் இரண்டு வருமானங்களும் தமக்கே கிடைக்க வேண்டும் என்ற குறுகிய நோக்கத்தில் அப்படிச் செய்வதனால் புனிதமான கிரியைகளை அர்த்தமற்றதாக்கி மாசுபடுத்துவது வேதனைக்குரியதே. அவர், எம்மை விட்டுப் பிரிந்தவரின் ஆன்மாவிடம் சேர்ப்பதற்காக நாம் வழங்கும் தானங்களை பெற்றுச் செல்லும் "பிதிர் தேவதைக்கும்", இறைவனாக வீற்றிருந்து கிரியைகளை நடாத்தி ஆசிகள் வழங்கும் குருவுக்கும் இடையே உள்ள பேதம் புரிந்து கொள்ளாத சைவக் குருவாகவும் இருக்கலாம். பொதுவாக வீட்டுக் கிரியைகளை எம் முன்னோர்கள் பிராமணக் குருமார் மூலமே செய்து வந்துள்ளார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அன்றைய தினம் நினைவு மலர் (கல்வெட்டு) வருபவர்களுக்கு கொடுக்கப்படும். அன்றைய தினமே இறந்தவரின் ஞாபகார்த்தமாக அவரின் படத்தை தோற்றம், மறைவு, திதி பொன்ற விடையங்களை உள்ளடக்கி பிரேம் போட்டு வீட்டில் வைப்பார்கள். வீட்டுக் கிருத்தியத்தின் நிறைவில் கலந்து கொண்டவர்களுக்கு மதியபோசனமும் கொடுக்கப்படும். சிலர் நினைவு மலருக்குப் பதிலாக பயனுள்ள புத்தகங்களில் இறந்தவரின் பெயர் எழுதி வருபவர்களுக்கும், நூலகங்கள், பாடசாலைகளுக்கும் அன்பளிப்புச் செய்வர். இறந்ததில் இருந்து ஒரு வருட காலத்திற்குள் வரும் பண்டிகைகள் விழாக்களிற்கு முதல் நாள் குடும்பத்தார் அவரின் பிரிவை நினைத்து அழுது அவர் படத்திற்கு காய்ச்சிப் படைப்பார்கள் (மாமிசம், மரக்கறி எதுவும்).

வீட்டுக்கிருத்தியத்தின் பொழுது இறந்தவருக்கு மனைவி இருந்தால் அவர் வெள்ளைச் சீலை அணிவது வழக்கம். ஆனால் இக்காலத்தில் வெள்ளைச் சீலை அணியாமல் வெளிறிய நிறம் குறைந்த அதிக ஆடம்பரமற்ற வேலைப்பாடுகள் அற்ற சீலை அணிகிறார்கள்.

29 அல்லது 30 ஆம் நாள் அந்தியேட்டி, அன்று அஸ்தி கரைப்பர். அன்றைய தினம் கடமை செய்தவர் மொட்டை வழிப்பார். அஸ்தி கரைக்கும், அன்று துடக்கு கழிக்க வேண்டும். 31ஆம் நாள்

அந்தணர்களை அழைத்து வீட்டுக் கிருத்தியம் கொடுப்பர். 45 ஆம் நாள் ஊத்தமாசியம். 60 ஆம் நாள் மாசியம் (அந்தணரை அழைத்து இறந்தவருக்கு பிண்டம் கொடுத்தல்). 60 ஆம் நாளில் இருந்து அவரது திதிக்கு ஒவ்வொரு மாசமும் ஆண்டு திவசம் வரையில் மாசியம் (திவசம்) கொடுக்க வேண்டும்.

## சுப காரியங்கள் தவிர்க்க வேண்டிய காலம்:

பஞ்சாங்கங்கள் ஒருவர் இறந்த பின் தவிர்க்க வேண்டிய சுப காரியங்கள் பற்றி சில பரிந்துரைகளை அளிக்கின்றன. இறந்தவர் மற்றும் குறிப்பிட்டவர்களுக்கிடையே ஏற்பட்டுள்ள உறவுமுறைகள் தான் தவிர்க்க வேண்டிய சுப காரியங்களை மாதங்கள் மற்றும் ஆண்டு கணக்கில் பரிந்துரைக்கின்றன.

ஒருவரின் தாய் இறந்தால், ஒரு வருடம் சுப காரியம் செய்ய, கோவில் செல்ல விலக்கு. ஒருவரின் தந்தை இறந்தால், ஒரு வருடம் சுப காரியம் செய்ய, கோவில் செல்ல விளக்கு. ஒருவரின் மனைவி இறந்தால், மூன்று மாதங்கள் சுப காரியம் செய்ய, கோவில் செல்ல விலக்கு. ஒருவரின் சகோதரன் இறந்தால், ஒன்றரை மாதங்கள் சுப காரியம் செய்ய, கோவில் செல்ல விலக்கு. பங்காளிகள் (தாயாதிகள்) இறந்தால், ஒரு மாதம் சுப காரியம் செய்ய, கோவில் செல்ல விலக்கு.

மரண வீட்டில் கை நனைத்தால் (சாப்பாடு சாப்பிட்டால், தேநீர் அருந்தினால்) 31 ஆம் நாள் வரை கோவில் செல்ல விலக்கு.

இந்தச் சடங்குகள், நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் இடத்துக்கு இடம், நாட்டுக்கு நாடு மாறுபடலாம். சிலருக்கு சில சடங்குகள் மீது மாற்றுக்கருத்துக்களும் இருக்கலாம். அதே வேளை சில சடங்குகள் காலமாற்றத்தின் காரணமாக மாற்றம் பெறலாம். இறுதிக் கிரியைகளை நிறைவாகச் செய்து இறந்தவரின் ஆத்மா சாந்தியடைய வழி செய்வோமாக.

**பல்லோரும் ஏத்தப் பணிந்து**

**தொகுப்பு : சச்சிதானந்தன் கபிலன்**
**மூலம் : இணையம், செவி வழித்தகவல்**

## கண்ணீர் பூக்கள்

## அமரர் செல்லையா தில்லைநாதன்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 1929 | 2016 |
| 09 | 12 |
| 09 | 13 |

புங்குடுதீவில் புகழ்பூத்த குடியில்
எங்கும்புகழ் பரப்பும் செல்லையா
தம்பதிகளின் அரும் புதல்வனாய்
அங்கமதைச் சேவைக்காய் அர்ப்பணித்த
அன்பனே தில்லைநாதா!

கல்விதனை புங்குடுதீவு கணேசா
வித்தியாலயத்தில் பெற்றீர்கள் பாடசாலை
அபிவிருத்திச்சங்க உறுப்பினராய் அரும்பணிகளை புரிந்தீர்கள்
பாடசாலை பாரினில் புகழ்வீசச் செய்தீர்கள்

நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி
பார்புகழும் ஆரம்ப அதிபராய் விளங்கிய
மயில்வாகனத்தின் உற்ற நண்பனாய் இணைந்து
பாடசாலை நலன்விரும்பியாய் திகழ்ந்து
நலன்பெறவே உழைத்தீர்கள்

பாடசாலைச் சேவையுடன் ஆலயப் பணிகளையும்
விடாமுயற் சியுடன் முழுமனத்துடனும் செய்தீர்கள்
தேடற்கரிய செல்வம் பெற்று நீர்
தானதர்மத்துடன் நன்கொடைகள் பலவளித்த
அன்பனே தில்லைநாதா!

நீர்கொழும்பு சித்தி விநாயகர் ஆலய
நிர்வாக உறுப்பினராய் அறங்காவலராய்
திகழ்ந்து ஆலயப் பணிகள் பல புரிந்தவனே!
இந்து இளைஞர் கலாசார மன்றத்தின்
உறுப்பினராய் திகழ்ந்தவரே முத்துமாரி
அம்மன் ஆலயத்தின் நலன்நம்பி நன்கொடைகள்
பலபுரிந்த நன்கொடையாளனே தில்லைநாதா!

பாடசாலை ஆலயத்துடன் சமூகம்
தழைத் தோங்க அரிய சேவை அளித்தவனே
சைவத்திருமுறை அடியார் சங்கமத்தின்
மூத்த உறுப்பினராய் திகழ்ந்து முழுமனதுடன்
பாடசாலை, கோயில் எனப் பலவழிகளில்
சொற்பொழிவுகள் நிகழ்த்தி சமூகசேவை புரிந்தவனே!

யோகர் சுவாமிகள் வழிநின்று அரிய
பல நற்சிந்தனைகள் நிகழ்த்தியவனே
அடியார் கூட்டமுடன் இணைந்து
அளாவி மகிழ்ந்தவனே அன்பனே!
உங்கள் அர்ப்பணிப்பும் சேவையும்
உங்கள் பிள்ளைகளின் உயர்வில் மிளிர்ந்ததையா!
உங்கள் பிரிவு எங்கள் சமூகத்தை
தாங் கொண்ணாத் துயரில் ஆழ்த்துகின்றதையா
உங்கள் ஆத்மா நிலையான வீடுபேறடைய
பிரார்த்திக்கின்றோம். உங்கள் பிரிவால் துயருற்றிருக்கும்
குடும்பத்தினர் மனம் அமைதி பெறவும் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

**சைவத்திருமுறை அடியார் சங்கமம்**
**132, கடற்கரைத் தெரு,**
**நீர்கொழும்பு**

# கண்ணீர் அஞ்சலி

அன்னை மடியில்
09
◈
09
◈
1929



ஆண்டவன் அடியில்
13
◈
12
◈
2016

அமரர்

# திரு. செல்லையா தில்லைநாதன் J.P

(முன்னாள் தலைவர் – புங்குடுதீவு தல்லையபற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி தேவஸ்தானம்)
(முன்னாள் தலைவர் – புங்குடுதீவு நயினாதீவு ப.நோ.கூ. சங்கம்)
(முன்னாள் தலைவர் – புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகாவித்தியாலயம், பெற்றோர் அபிவிருத்திச் சங்கம்)
(முன்னாள் தலைவர் – கிராம அபிவிருத்திச் சங்கம்)
(மூத்த உறுப்பினர் – நீர்கொழும்பு சைவத்திருமுறை அடியார் சங்கம்)
(நீர்கொழும்பு பிரபல வர்த்தகர், மூத்த அரசியல் பிரமுகர்)

அவர்கள்

புங்கை மண் பெற்று எடுத்த புதல்வா
தல்லையபமர் முருகனின் பக்தா
வருவோரை பாங்குடனே அரவணைக்கும் நண்பா
ஆலயத் திருப்பணிகளில் முதன்மையாளனே!
நீங்கள் புங்கை மண்ணிற்கு ஆற்றிய பணிகள்
உங்கள் பெயர் சொல்லும்
மண்ணினை மறவாமல் மண்ணிலே உயிர் பிரிய
வேண்டும் என வந்து சாவினை வரவேற்ற பெருமனிதா
எந்தவொரு களங்கமுமில்லா உன் ஆத்மா
தல்லையபற்று சங்கரமூர்த்தி முருகமூர்த்தி முருகப்பெருமானின்
பாதார விந்தங்களில் சாந்தி பெற வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

பிரிவால் துயருறும்
ஆலய நிர்வாக சபையினரும்,
ஆலய தர்மகர்த்தாவும்,
புங்குடுதீவு கிழக்கு தல்லையபற்று
சங்கரமூர்த்தி முருகமூர்த்தி தேவஸ்தானம்.

புங்குடுதீவு-12

Harikanan, Jaffna.

# கண்ணீர் அஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 09 | | 13 |
| 09 | | 12 |
| 1929 | | 2016 |



அமரர்

## திரு. செல்லையா தில்லைநாதன் J.P

அவர்கள்

(முன்னாள் தலைவர் – புங்குடுதீவு தல்லையபற்று சங்கரமூர்த்தி – முருகமூர்த்தி தேவஸ்தானம்)
(முன்னாள் தலைவர் – புங்குடுதீவு நயினாதீவு ப.நோ.கூ. சங்கம்)
(முன்னாள் தலைவர் – புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம், பெற்றோர் அபிவிருத்திச் சங்கம்)
(முன்னாள் தலைவர் – கிராம அபிவிருத்திச் சங்கம்)
(மூத்த உறுப்பினர் – நீர் கொழும்பு சைவத்திருமுறை அடியார் சங்கம்)
(நீர்கொழும்பு பிரபல வர்த்தகர், முன்னாள் மூத்த அரசியல் பிரமுகர்)

நேற்றுவரை நீங்கள்
நல்ல பண்பாளனாக
மண்ணை அலங்கரித்தவர்
காற்றோடு வந்த சேதி உங்களை
காலனவன் கவர்ந்திட்டான் என்றது
முதல் நாள் கீரிமலையில் நீராடினீர்கள்
என்று அறிந்திருந்தோம்
நம்ப மறுத்தது உள்ளம்
தல்லையமர் முருகன் தனது கார்த்திகைத் தீபத்தன்று
தனதுபக்தனைத் தன்னுடன் இணைத்துக் கொண்டார் போலும்
உங்களுடைய ஆத்மா சாந்தியடைய தல்லையபற்று
முருகப்பெருமானின் பாதார விந்தங்களை வேண்டுவோமாக!

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!

புங்குடுதீவு-12

பிரிவால் துயருறும்
கோ. தெய்வேந்திரன் குடும்பம்,
தெய்வேந்திரன் வேந்தன் குடும்பம்.

# கண்ணீர் அஞ்சலி

தோற்றம்

09 . 09 . 1929



மறைவு

13 . 12 . 2016

## செல்லையா தில்லைநாதன் J.P

பொன்மணித்தீவு தந்த பொன்மணிச்செம்மலே
தனக்குவமையில்லா தனித்துவ செல்வமே
வையத்து வாழ்வாங்கு வாழ்ந்த நற்றமிழ்மைந்தா
அறநெறிக் கூடம்வழிநின்ற அன்பனே

மாதொரு பாகனாய் மாமியை மணம்புரிந்தே
மாசிலாமைத்துனரை மக்களாய் பெற்றே
மாமனிதராய் மாணிக்கமாய் ஒளிர்ந்தாய் ஐயா
மாண்புறு இல்லறம் காத்த நல் மாந்தரே ஐயா

உற்றாரை உவந்தாய் ஐயா உலகோடுவாழ்ந்தாய் ஐயா
உறவெல்லாம் திக்கெட்டும் சென்றே ஐயா
உறவாடி நன்மை தீமையென்று உபசரித்தாய் ஐயா
உற்ற உறவுகளை உள்ளன்பால் அணைத்தாய் ஐயா

அறிவுரைகள் தந்து அகமகிழ்வித்தாய் ஐயா
அரிய நல் நீறெடுத்துத்தந்து ஆசிர்வதித்தாய் ஐயா
அற்புதமானவாழ்வின் வழிகாட்டி நின்றாய் ஐயா
அயராது ஆண்டவனின் அடிகழல் தொழுதாய் ஐயா

இவ்வுலக வாழ்வு இனி வேண்டாம் என்றாய் ஐயா
இனிய பேரின்பம் எனக்கு இறையடியே என்றாய் ஐயா
இன்பமிகு அன்னை ஈன்ற தீவு வேண்டும் என்றாய் ஐயா
இனி மூச்சை இங்கேயே விடுவேன் என்றாய் ஐயா

நினைத்தவகை நிமலனிடம் நின்உயிரை நீத்தாய் ஐயா
நிம்மதியான நித்திரை செய்து கிடக்கின்றாய் ஐயா
நின் நினைவலையால் துடிக்கின்றோம் ஐயா
நிமலனடியில் நீங்கள் நிலைத்திருக்க வேண்டி நிற்கின்றோம் ஐயா

ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி

புலம்பெயர்வாழ் சரவணமுத்து அமராவதி குடும்ப உறவுகள்

# கண்ணீர் அஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 09 | | 13 |
| 09 | | 12 |
| 1929 | | 2016 |



யாழ் புங்குடுதீவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட

## அமரர்
## செல்லையா தில்லைநாதன் (J.P)

புங்குடுதீவு,
12ம் வட்டாரம்.

பேசித் திரிந்த – ஒரு தெய்வம் இன்று
பேசாதிருப்பதேனோ?
உம் உயிர் பிரிந்த சேதிகேட்டு
கண்ணீர் பிரிகிறது
கடைவிழியால் கறுப்பாய் போகிறது
கார்மேகம் தானும் அழுவதற்கு
நல்ல கதைகள் சொல்லி நல்லபடி வாழ
செல்ல மொழி பேசி இருந்தீர் – நீர்
சொன்னபடி வாழும் உம்
பிள்ளைகள், பேரப்பிள்ளைகள் முகம்
நோக்க விழிமடல் திறப்பீரோ?
உங்களது பிரிவால் உள்ளமது வாடும்
உறவுகளோடு எங்களது கண்ணீரை
உதிர்க்கின்றோம் பூக்களாய் உம் திருவடியில்
சூரியன் நிரந்தரமாய் மறைந்துவிட்டதோ? – இவ்வுலகில்
எம் கண்ணீர் விழுந்து
உம் தலைமாட்டில் எரிக்கின்ற
விளக்கு எரியட்டும்!
எம் உள்ளத்துடன் சேர்ந்து...

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கின்றோம்.

நா. பசுபதிப்பிள்ளை குடும்பம்
(குருபரன் சுகந்தா)

எவகிறீன் அச்சகம், யாழ்ப்பாணம். தொலைபேசி: 021 - 2219893

# கண்ணீர் பூக்களை
# காணிக்கையாக்குகின்றோம்

அன்னை மடியில்


09

.

09

.

1929



இறைவனடியில்

13

.

12

.

2016

## அமரர் செல்லையா தில்லைநாதன்

(முன்னாள் பிரபல வர்த்தகர் - நீர்கொழும்பு. அகில இலங்கை சமாதான நீதவான்.
நீர்கொழும்பு சைவத் திருமுறை அடியார் சங்க மூத்த உறுப்பினர்)

அன்பினில் உயர்ந்தவரே
அறிவினில் மிளிர்ந்தவரே
மதிப்பினில் மாணிக்கமாய்
மானிலத்தில் திகழ்ந்தவரே

உள்ளன்பு கொண்டேயென்றும்
உறவுகளை மதிப்பவரே
அதிதுயர் யாமடைந்தோம் – இன்று
அவனியிலே நின் பிரிவால்

திங்களொளி இழந்த வான் போல்
திசையறியாமல் புலம்புகின்றோம்
உங்களுயிர் பிரிந்திட்ட வேதனையால்
மகிழ்விழந்தே வாடுகின்றோம்

உம் வதனம் இனியாம் காண்பதெப்போ
எள்ளளவும் எண்ணவில்லை
உம் பிரிவை யாமென்றும் – இன்று
நீர் உறங்க நாம் துழத்து வேதனையில் தவிக்கின்றோம்.

மீளாத்துயரில்
அருணகிரி, சரோ
பிள்ளைகள்.

புங்குடுதீவு 12

# கண்ணீர் காணிக்கை



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 09 . 09 . 1929 | 13 . 12 . 2016 |

அமரர்

## செல்லையா தில்லைநாதன்

நல்லவராய் வாழ்ந்திட்ட காலங்களை
நாம் மறவோம் - என்றும்
உங்கள் திருமுகம் காணவே
வருந்துகின்ற சோகமென்ன
துக்கக் கதவுகளைத் திறந்து விட்டு
தூக்கக் கதவுகளைத் தாழிட்டு
நிரந்தரமாய் தூங்கிவிட்டீரோ
உம் இதயத்தின் நேசத்தை
எங்களால் என்றும் மறக்க முடியாது.

**என்றும் உன் நினைவுகளுடன் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.**

பிரிவால் துயருறும்:
[illegible]
உரிமையாளர் : [illegible]

புங்குடுதீவு,
12ம் வட்டாரம்.

# கண்ணீர் அஞ்சலி

| மலர்வு | | உதிர்வு |
|---|---|---|
| 1929 . 09 . 09 |  | 2016 . 12 . 13 |

எமது பாடசாலையின் முன்னாள் பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர்

## அமரர் திரு. செல்லையா தில்லைநாதன் J.P

புங்குடுதீவின் மூத்த மைந்தராய் ....
வேளாண்துறையின் வெற்றியாளனாய்
முயற்சியாளருக்கு முன்மாதிரியாய்
அகவை எண்பத்தேழு தாண்டினாலும் - அறவே
நோய்கள் அற்றவராய் வாழ்ந்து
13.12.2016 அன்று இறைவனடி சேர்ந்த
செல்லையா தில்லைநாதன் அவர்களின்
ஆத்மா சாந்தி பெற
இறைவனை வேண்டுவதுடன்
அன்னாரின் குடும்பத்தினருக்கும்
எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி!

துயருடன்......
பாடசாலைச் சமூகம்,
யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயம்,
புங்குடுதீவு.

# கண்ணீர் அஞ்சலி

மண்ணில்
1929
09
09



விண்ணில்
2016
12
13

## அமரர் திரு. செல்லையா தில்லைநாதன் J.P

புங்குடுதீவில் பிறந்து நீர்கொழும்பில் வாழ்ந்து
நல்உத்தமர்களைப் பெற்றெடுத்த பெரியோனே
"யாம்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்" என்று
ஊருக்கு பொதுத்தொண்டாற்றி இந்து தர்மம் காத்து
தில்லைக் கூத்தன் அடியில் இளைப்பாறும்
தங்கள் ஆத்மா சாந்தியடைய பிராத்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கும்
உற்றார், உறவினர்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத்
தெரிவித்துக் கொள்கின்றோம்.

T.K.பாலா,
நீதிராசா தயாளன்,
கடற்கரை வீதி,
நீர்கொழும்பு.

# கண்ணீர் அஞ்சலி

மலர்வு

09.09.1929



உதிர்வு

16.12.2016

## திரு.வைத்தியநாதர் செல்லையா தில்லைநாதன்

### அகில இலங்கை சமாதான நீதவான்

### (யாழ் புங்குடுதீவு)

புங்கைமண் தந்த தவப்புதல்வன் தரணிபுகழ் குறிஞ்சிக்குமரன்
எம் குலத்தின் ஒளிவிளக்கு அணையாத தீவகத்தின் பாசச் சுடரொளியே
மேன்மைகொள் சைவநெறிச் சிந்தையாளனே!
உயிரான தாய் நிலத்தின் சொந்தக்காரனே!
உங்கள் இதயக் கனவு தனை வாழ்விலும் சாவிலும்
உண்மைப்படுத்திய உத்தமரே!
எங்கள் கொடியில் பூத்த தந்தைவழித் தலைமகனே!
தில்லைநாதப் பெருந்தகையே! நீங்கள் நடந்த பாதையிலே
நாம் திரும்பிப் பார்க்கின்றோம்
இலங்கைத்தீவின் தீர்கொழும்பு மாநகரில் புங்கை மண்ணின் தலைமகனாக
தடம் பதித்த எங்கள் மண்ணின் மைந்தனே! தளராத சிந்தையோடு
தாய் நிலத்தின் உறவோடு எங்கள் ஊர் நாகலிங்கம் தம்பதியர் பெற்றெடுத்த
சுந்தரத் தமிழ் அழகி கற்பகம் தனை மணந்து
நல் மக்கட் பேறு பெற்றவரே! தம்மக்கள் உயர் நிலையின் காவலனே
உங்கள் தளராத சிந்தையிலே உழைப்பில் உயர்ந்து நின்றவரே!
சமாதான நீதிபதி எனப் பேர் பெற்று விளங்கியவரே!
தாயகத்தின் அரசியல் சூழ் நிலைகள் எவ்விதமாய் இருந்தபோதிலும்
நீங்கள் எடுத்த முடிவில் சற்றும் தளராமல் இலங்கை ஜனாதிபதியை
புங்கைமண்ணுக்கு அழைத்து தாய்மண் தலைநிமிர்ந்து நிற்க
நன்னீர் திட்டதின் மகஜரை அவர் கரத்தில் கொடுத்தீர்களே
புங்குடுதீவு மத்திய மகாவித்தியாலயத்திலே மறக்குமா எம்மிதயம்
எங்கள் அருமைச் சித்தப்பாவே! உங்கள் சிந்தைக்கு வடிவம் அமைத்து
குறிஞ்சிக்குமரன் சங்கரமூர்த்தியார் கோயில் திருப்பணித் தலைவராய்ப்
பணியாற்றினீர்களே! மரணத்தை அறிந்தவராக!
கீரிமலைப் புண்ணிய தீர்த்தம் ஆடி வந்து திருமுருகன் திருப்பாதம் பணிந்து
இல்லத்தில் வந்து உறங்கிய வேளை உங்களை அழைத்துச் சென்றான் பரமன்
சீமையில் இருந்து கண்ணீர் சிந்துகின்றோம் உங்கள் பிரிவால்
உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்!

**உங்கள் பிரிவால் துயருறும்**

**தம்பிஐயா கிருபானந்தன் , சகோதரர்கள் குடும்பத்தினர்**
**அறிவகம் முத்தையன்கட்டு, ஒட்டிசுட்டான் (பரிஸ், பிரான்ஸ்)**

# கண்ணீர் அஞ்சலி



தோற்றம் 09 . 09 . 1929

மறைவு 13 . 12 . 2016

## செல்லையா தில்லைநாதன்

(முன்னாள் பிரபல வர்த்தகர் - நீர்கொழும்பு. அகில இலங்கை சமாதான நீதிவான்.
நீர்கொழும்பு சைவத்திருமுறை அடியார் சங்கம மூத்த உறுப்பினர்)

நாற்புறமும் கடலலைகள் நர்த்தனமாய்ச் சப்தமிடும்
நற்றமிழின் சுவையாங்கு நளினமுடன் கலகலக்கும்
போற்றிசைக்கும் புகழ் மணக்கும் புங்கையூர் தனிலே
புகழ் பூத்த குடும்பத்தில் குலமகனாய்த் தானுதித்தீர்கள் - ஐயா

தேடியறிந்து அங்கு தெவிட்டாது உதவி செய்யும்
தெள்ளமுத மனம் படைத்த மரபு வழி வந்தீர்கள் - ஐயா

கற்பகவிருட்சமாய் கற்பகம் தனை துணைவியாய்
கொண்டு பெற்றெடுத்தீர்கள் நவமணிகளாய் நன்மக்களை
தான் கற்றறியாதவராய் இருந்தாலும் தன் பிள்ளைகளை
கற்றறியச் செய்தீர்கள் ஐயா
கற்றவர்களுக்கு சென்ற இடமெல்லாம் சிறப்பு
என்ற தாரக மந்திரத்தை உரைத்தீர்கள் - ஐயா

முத்திக்கு வழிதனையும் உங்கள் குருநாதன் வழியே
உரைத்திட்டீர்கள் ஐயா

கடவுள் கொடுத்த வரங்கள் நமக்குக் கிடைக்கவில்லை -
நமக்குக் கடவுளே கிடைத்த வரமாக நீங்கள் ஐயா

அரசியல் முதல் சமய நெறிகள் வரை
உங்கள் புகழ் கூறும் ஐயா
உரிய இடத்தில் இருந்து உங்களுக்குக் கிடைத்துள்ள
அந்தப் பெரிய கௌரவம் உலகம்
உள்ளளவும் உங்கள் பெயரை
உரைத்துக் கொண்டிருக்கும்....

உங்களின் முடிவு வெறும் முடிவு அல்ல
அது விடிவுக்கான ஒரு விதை ஐயா....
சென்று வாருங்கள் ......

ஆன்மா என்றென்றும் அழியாது

**11ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.**

**உற்றார், உறவினர், நண்பர்கள்
மற்றும் குடும்பத்தினர்.**

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு

09 ◈ 09 ◈ 1929



இறப்பு

13 ◈ 12 ◈ 2016

புங்குடுதீவு கிழக்கு, 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த

அமரர்

## திரு. செல்லையா தில்லைநாதன் J.P

அவர்கள்

மௌனங்கள் சூழ்ந்து கொள்ள
மனங்கள் மௌனம் கொள்ள
உங்களைப் பார்த்திருந்த விழிகள்
கண்ணீரால் கரை புரள
உங்களை இழந்த புங்குடுதீவு
மண் துடிக்கின்றது.
விடியல்கள் அஸ்தமனமாக
விலகி விட்ட உங்கள்
ஆத்மா சாந்தியடைய
தல்லையபற்று முருகப் பெருமானை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி. சாந்தி. சாந்தி!!!

பிரிவால் துயருறும்
ஓ.குலேந்திரன் குடும்பம்,
ஓ.கஜேந்திரன் குடும்பம்,
தேனு களஞ்சியம்
தல்லையபற்று வேலவன் வெதுப்பகம்.

புங்குடுதீவு-12

Harikanan, Jaffna.

# கண்ணீர் அஞ்சலி

பிறப்பு

09 ◈ 09 ◈ 1929



இறப்பு

13 ◈ 12 ◈ 2016

புங்குடுதீவு கிழக்கு 12 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த

அமரர்

## திரு. செல்லையா தில்லைநாதன் J.P

அவர்கள்

புங்குடுதீவு மண்ணின் புகழாளனே!
சமூகப் பணிகளின் நாயகனே!
மண்ணினை மதித்த மகத்தானவனே !
உறவுகளை ஊரவரை உன் குடும்பம்
போல் கனித்த பாராளனே
நீங்கள் பல்கலைக்கழகம் செல்லாத
படிக்காத மேதை
உங்கள் ஆத்மா சாந்தியடைய
இத்தியன்புலம் நாச்சிமாரை பிரார்த்திப்போம்.


ஓம் சாந்தி சாந்தி சாந்தி!!!

பிரிவால் துயருறும்
ஆலய நிர்வாக சபையினர்,
இத்தியடிப்புலம் நாச்சிமார் தேவஸ்தானம்.

புங்குடுதீவு - 12

Harikanan, Jaffna.

# கண்ணீர் துளிகளை காணிக்கையாக்குகின்றோம்

| அன்னை மடியில் | | இறைவனடியில் |
|---|---|---|
| 09 |  | 13 |
| . | | . |
| 09 | | 12 |
| . | | . |
| 1929 | | 2016 |

## அமரர் செல்லையா தில்லைநாதன்

(முன்னாள் பிரபல வர்த்தகர் - நீர்கொழும்பு. அகில இலங்கை சமாதான நீதவான்,
நீர்கொழும்பு சைவத் திருமுறை அடியார் சங்க மூத்த உறுப்பினர்)

ஒளிக்கு ஒளியாக
உற்ற துன்பத்துக்கு விழவாக
வெளிக்கு வெளியாக
வெளிச்சமே வாழ்வாக வாழ்ந்து
பஞ்சுப் பொதி போல் ஒற்றி ஒற்றி
எம் துன்பம் துடைத்திட்ட
நிலவின் தூய்மை ஐயா நீங்கள்

நன்றிக்கு இலக்கணமாய் நாளும் வாழ்ந்து
நல்லதையே செய்தெமக்கு உயர்ச்சி தந்தாய்
வரலாறாய் வாழ்ந்து நின்றவர் நீங்கள் ஐயா
வந்தோரை வரவேற்கும்
சிரித்த முகம் எங்கே

தப்பென்ன சரியென்ன நிற்பீர் எம்பக்கம்
தவறி நீர் போகும்போது இல்லையே நாம் உம்பக்கம்
நீர் கொழும்பில் வாழ்ந்து எம் கிராமக்காற்றில் ஊர்ப்பற்றுடன்
கரைய வந்தாயே போய் வா எங்களூர் தலைமகனே
விழிநீர் சொரிந்து வழி அனுப்பி வைக்கின்றோம்
மீண்டும் பிறந்திடய்யா எம்மண்ணில் அதுவரை
பார்த்திருப்போம் திசைதோறும் வரவுக்காய்.



மீளாத்துயரில்
ச. சேனாதிராசா குடும்பத்தினர்
புங்குடுதீவு - 12



# நன்றி நவில்கிறோம்


**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்,**
**உறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"**

எங்கள் அன்பிற்கும் பாசத்திற்கும் சிகரமாய் திகழ்ந்து எங்கள் வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் வழிகாட்டியாக வாழ்ந்து மறைந்த எங்கள் குடும்பத் தலைவர் அமரர். திரு. செல்லையா தில்லைநாதன் (J.P) அவர்களது சிவபதமடைந்த செய்தி கேட்டு புங்குடுதீவிலும், நீர்கொழும்பிலும், பிரான்ஸிலும், சுவிற்ஸர்லாந்திலும், கனடாவிலும், சிங்கப்பூரிலும் எமது இல்லங்களுக்கு நேரில் வந்து எங்களுக்கு அனுதாபம் தெரிவித்து ஆறுதல் கூறியவர்களுக்கும்.

மலர் மாலைகள், மலர் வளையங்கள் அணிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள், பணர்கள் பிரசுரித்து வெளியிட்டவர்களுக்கும், மரண வீட்டை ஒழுங்குபடுத்தியவர்களுக்கும், ஒலிபரப்பு செய்தவர்களுக்கும், வாகன வசதி தந்தவர்களுக்கும்.


தேவார திருமுறைகளை ஓதிய சைவத்திருமுறை அடியார் சங்கம் உறுப்பினர்களுக்கும், சிவத்தொண்டர் சபை உறுப்பினர்களுக்கும், அஞ்சலி உரை நிகழ்த்தியோர்களுக்கும், ஈமக் கிரியை, அந்தியேட்டி, வீட்டுக்கிருத்திய நிகழ்வுகளை சிறப்புறச் செய்த அந்தணப் பெருமக்களுக்கும், ஆத்ம சாந்தி பிரார்த்தனையில் கலந்து கொண்டவர்களுக்கும், இறுதிக் கிரியைகளைத் திறம்பட நடாத்த உதவி புரிந்த அனைத்து உள்ளங்களுக்கும், குறிப்பாக அவர் நோயுற்ற வேளையில் இல்லம் வந்து மருத்துவ சேவை செய்த வைத்தியர்களுக்கும் அவர்களைச் சார்ந்தவர்களுக்கும், அதே வேளையில் உதவி புரிந்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும்.

இந்த மலரை நிறைவாக்க ஆக்கங்கள் தந்தவர்களுக்கும், இந்த மலரை திறம்பட அச்சிட்டுத் தந்த அச்சகத்தினருக்கும், இன்னும் பல வகைகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எங்கள் இதயம் நிறைந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றோம்



**ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!**

**இங்ஙனம்,**
**மனைவி, பிள்ளைகள், மருமக்கள், சகோதரர்,**
**பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளை**



# வம்சாவழி

*வைத்தியநாதர் செல்லையா
+
*செல்லையா செல்லம்மா
↓
- * தில்லைநாதன்
- * சுபத்திரை
- * வர்ணமாணிக்கம்
- * ஆறுமுகம்
- கந்தசாமி

சின்னத்தம்பி நாகலிங்கம் *
+
நாகலிங்கம் செல்லமுத்து *
↓
- சரவணமுத்து *
- தையமுத்து *
- முத்துக்குமாரு *
- தங்கம்மா *
- சிதம்பரம்
- குணரெத்தினம் *
- கற்பகம்

*** தில்லைநாதன் + கற்பகம்**

↓

- புவேந்திரன் + ஜெயக்கொடிதேவி
- தியாகேஸ்வரி + சச்சிதானந்தன் → கபிலன், ஐஸ்வர்யா, தனுசன்
- திலகவதி + சுவேந்திரராஜா → சுகிர்தா + சஞ்ஜீவ்; துர்ஷிதா + ரதீபன் → ஆதேஷ்; விகிர்தா, விதுர்ஷன், கீர்த்திகா
- ஞானேந்திரன் + றோகிணி → றொணிசன், ராகவி
- தரணீஸ்வரி + கேதீஸ்வரன் * → ருஷிகா, ரிசாந், தனுசாந்
- விமலேஸ்வரி + நந்தகுமாரன் → துர்க்கா, வைஷ்ணவி
- யோகேஸ்வரி + துஷிகரன் → மயூரா, வினோஷன்
- லோகேந்திரன் + உமா
- சியாமளா + வசந்தன் → ஜஸ்மிரா

* அமரர்கள்


திருப்பாற்கடலில் பள்ளி கொள்ளும் பெருமாளின்
கனவில் என் அத்தியாயம் இனிதே நிறைவு பெறுகிறது
- சுபம்




எது நடந்ததோ, அது நன்றாகவே நடந்தது.
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது
எது நடக்க இருக்கிறதோ அதுவும் நன்றாகவே நடக்கும்
உன்னுடையதை எதை இழந்தாய், எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய் அதை நீ இழப்பதற்கு.
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது
எதை கொடுத்தாயோ, அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ
அது நாளை மற்றொருவருடையதாகிறது
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
"இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாராம்சமுமாகும்"

- ஸ்ரீ கிருஷ்ணர் -

தொகுப்பு : சச்சிதானந்தன் தனுசன்